# தேசீய தமிழ் வாசகம்

## ஐந்தாம் புத்தகம்

ஐந்தாம் வகுப்புக்குரியது

5.05
2-55

T. P. கோபால கிருஷ்ணன், B.A., L.T.,
தலைமை ஆசிரியர், போர்டு உயர்நிலைப்பள்ளி, போளூர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 MAY 1955
MADRAS

பதிப்புக் கழகம்
கேணி :: சென்னை

[விலை 0–10–0

TB
031(5)
N55
88208

திருத்திய பதிப்பு—1954
மறு பதிப்பு (1)—1955

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE

*All Rights Reserved*

Kabeer Printing Works, Madras (2829)

# முன்னுரை

"தேசீய தமிழ் வாசகம்" என்னும் பெயருடன் வெளிவரும் இந்நூல் வரிசை புதிய பாடத் திட்டத்தைத் தழுவி எழுதப்பட்டதாகும். பாட இயலின் நோக்கத்திற்கிணங்க, ஒவ்வொரு பாடமும் பிள்ளைகளின் உளநிலை, அவர்களுக்கு ஏற்படும் விருப்பம் இவற்றை ஒட்டி, பிள்ளைகள் நன்கு அறிந்துகொள்ளக்கூடிய வகையில் எழுதப்பட்டுள்ளது.

மொழிநடை சிறு பிள்ளைகளுக்கு ஏற்ற வண்ணம் கவனத்துடன் அமைக்கப்பட்டிருக்கிறது. கைத்தொழில், வரலாறு, இலக்கியம், கடிதம் எழுதும் முறை, பெரியோர் வரலாறு, கதை, நாடகம் முதலியவை பற்றிய பாடங்கள் இதில் இடம் பெற்றிருக்கின்றன. வகுப்புக்கு ஏற்ற அளவு பாடல்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பாட இயலிற் குறித்தவாறு புதிய சொற்கள் பாடந்தோறும் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாட இறுதியிலும் அருஞ்சொற் பொருள்கள் தரப்பட்டுள்ளன. அதன்பின் பாடங்களைத் தழுவிய கேள்விகள் இணைக்கப்பட்டுள்ளன.

பயிற்சிகள் மிகுந்த கவனத்துடன் எழுதப்பட்டிருக்கின்றன. பிள்ளைகளின் அறிவை விளக்கவும், பெருக்கவும் தகுந்தவாறு சில பயிற்சிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. பாட இயலிற் கண்டுள்ளவாறு வகுப்புக்கேற்ற வகையில், சிறிதளவு இலக்கண விளக்கம் எளிய முறையில் பிள்ளைகள் மனத்தில் பதியும் வகையில் தரப்பட்டிருக்கிறது.

பொதுவாக, இந்நூல் வரிசை பிள்ளைகளின் அறிவை வளர்த்து முற்போக்கு பெறச் செய்யும் கருத்துடன், தக்க முறையில் எழுதப்பட்டிருக்கிறது என்று கூறலாம். அறிஞர் இந்நூல் வரிசையை வரவேற்று ஆதரவு நல்குமாறு வேண்டுகிறேன்.

இப்புத்தக வரிசையைத் தயாரிப்பதில் எனக்கு உதவி புரிந்த புலவர் திரு. பு. செல்வராசன் அவர்கட்கும் புலவர் திரு. சி. செல்வத் தாண்டவன் அவர்கட்கும் எனது நன்றி உரியதாகும்.

T. P. கோபால கிருஷ்ணன்.

88208

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | நமது நாடு | ... | 2 |
| 2. | நமது நாட்டுக் கொடி | ... | 6 |
| 3. | சொல் தவருத உத்தமர் | ... | 10 |
| 4. | புலவர் சண்முகனர் | ... | 14 |
| 5. | பள்ளி விளையாட்டுக்கள் | ... | 18 |
| 6. | ஆறு (பாட்டு) | ... | 24 |
| 7. | படப் பயிற்சி–1 | ... | 27 |
| 8. | வ. உ. சிதம்பரனர் | ... | 29 |
| 9. | இராஜா சர். அண்ணுமலைச் செட்டியார் | ... | 33 |
| 10. | பொது நூல் நிலையம் | ... | 37 |
| 11. | சிறுவர் கடமை (உரையாடல்) | ... | 41 |
| 12. | இந்திய விஞ்ஞான அறிஞர் | ... | 45 |
| 13. | தொழிலரசர்—டாடா | ... | 50 |
| 14. | என் வரலாறு (நிலக்கரி) | ... | 55 |
| 15. | புத்தரும் இடைச்சிறுவனும் (பாட்டு) | ... | 59 |
| 16. | நாட்டாண்மைக் கழகம் | ... | 62 |
| 17. | பாரி மகளிர் | ... | 66 |
| 18. | படப் பயிற்சி–2 | ... | 70 |
| 19. | முதலுதவி | ... | 72 |
| 20. | பெரியோர் உரைநடை | ... | 76 |

| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 21. | கடிதங்கள் | ... | 80 |
| 22. | மாணவர் ஆட்சி | ... | 84 |
| 23. | சுற்றுப் பிரயாணம் | ... | 91 |
| 24. | கவியரசியார் | ... | 95 |
| 25. | காட்சிச் சாலை | ... | 100 |
| 26. | அரங்கநாதர் அன்பு | ... | 105 |
| | **செய்யுட் பாடம்** | | |
| 1. | கலைமகள் வணக்கம் | ... | 109 |
| 2. | நீதி வெண்பா | ... | 109 |
| 3. | நல்வழி | ... | 111 |
| 4. | நன்னெறி | ... | 114 |
| 5. | புத்திமானே பலவான் | ... | 117 |
| 6. | தனிப்பாடல்கள் | ... | 119 |

# ஐந்தாம் புத்தகம்

## ஐந்தாம் வகுப்புக்குரியது

## தேசீய கீதம்

ஜன கண மன அதி நாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராடா
த்ராவிட உத்கல வங்க

விந்த்ய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்க

தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஷ மாகே
காஹே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!!

# 1. நமது நாடு


1. இந்தியா என்பது நம் நாட்டின் பெயர். இந்தியாவில் வாழும் மக்களாகிய நம்முடைய பெயர் இந்தியர் என்பதாம். இந்தியாவின் வடவெல்லை இமயமலை; தென் எல்லை கன்னியாகுமரி. கிழக்கெல்லை பர்மாவும் வங்கக் கடலுமாகும். மேற்கெல்லை பாகிஸ்தானும் அரபிக்கடலுமாகும். இமயமலை உலகில் உள்ள மலைகளில் மிகவும் பெரியதாகும்.

2. நம் நாட்டில் இயற்கை வளங்கள் நிறைந்து இருக்கின்றன. மலைகள், காடுகள், சமவெளிகள், கடற்கரை, பாலை நிலம் ஆகிய நில அமைப்புக்கள் எல்லாம் இருக்கின்றன. அப்பாகுபாட்டை நம் முன்னோர் முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனக் கூறினர். நம் நாட்டிற்கு வடக்கே பகைவரால் தாண்ட முடியாத உயர்ந்த இமயமலை உள்ளது என்று அறிந்தீர்கள். மற்ற மூன்று பக்கங்களிலும் கடல்கள் இருக்கின்றன. ஆதலால் நம் நாடு பகைவர்களால் தாக்க முடியாதபடி இயற்கையாகவே பாதுகாவலைப் பெற்றிருக்கின்றது.

3. இந்தியாவின் நடுவில் விந்தியமலைத்தொடர் அமைந்துள்ளது. இம்மலைக்கு வடக்கே உள்ள பகுதி வட இந்தியா எனப் பெயர் பெறும்; தெற்கே உள்ள பகுதி தென்னிந்தியா எனப் பெயர் பெறும். வட இந்தியா கிழக்கு மேற்காகப் பரந்துள்ளது. இமயமலையில் தோன்றும் ஆறுகள் கங்கை, பிரமபுத்திரா, சிந்து முதலியவை. முன்னவை இரண்டும் தென்கிழக்காக ஓடிவந்து வங்கக் கடலிலும், பின்னது அரபிக் கடலிலும் கலக்கின்றன. இந்த ஆறுகளால் வட இந்தியா வளமடைகின்றது.

4. தென்னிந்தியா கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய

முப்புறங்களிலும் கடலால் சூழப்பட்டிருக்கின்றது. தென்னிந்தியாவின் மேற்குப் பக்கக் கடற்கரை ஓரத்தில் ஒரு நீண்ட மலைத்தொடர் இருக்கின்றது. அதற்கு மேற்குத் தொடர்ச்சி மலை என்பது பெயர். கிழக்குப் பக்கத்திலும்




ஒரு மலைத்தொடர் இருக்கின்றது. அம்மலைத் தொடர் கடற்கரையினின்றும் விலகிச் சிறிது உள்நாட்டில் உள்ளது; இடை இடையே விட்டு விட்டுத் தொடர்ந்து இருக்கின்றது. அதற்குக் கிழக்குத் தொடர்ச்சிமலை என்பது பெயராகும். தென்னிந்தியாவில் கோதாவரி, கிருஷ்ணா, காவிரி முதலிய ஆறுகள் ஓடுகின்றன. இவை மேற்குத் தொடர்ச்சி மலையில் தோன்றித் தென்னிந்தியாவை வளப்படுத்தி வங்கக் கடலில் கலக்கின்றன.

5. இந்தியாவில் ஏறக்குறைய முப்பத்தைந்து கோடி மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் வெவ்வேறு மொழிகளைப் பேசுகின்றனர் ; வெவ்வேறு பழக்கவழக்கங்களை உடையவராய்க் காணப்படுகின்றனர் ; வெவ்வேறு சமயங்களைப் பின்பற்றுகின்றனர்.

6. ஆயினும், 'நாம் அனைவரும் இந்தியரே ; ஒரு நாட்டு மக்களே. நம்மைப்போல் பிறரும் வாழவேண்டும்,' என நாம் நினைத்துப் பிறரையும் வாழ்விக்கவேண்டும். இங்ஙனம் நடந்துகொண்டால் நம்மிடம் உள்ள குறைகள் நீங்கும். நம்மிடம் உள்ள குறைகள் நீங்கினால்தான் நாம் இப்பொழுது பெற்றுள்ள உரிமை ஆட்சியைப் போற்றிக் காக்கமுடியும்.

**வாழ்க நம் நாடு !**

| | | |
|---|---|---|
| பர்மா | பாலை | அரபிக்கடல் |
| பாகிஸ்தான் | விந்தியமலை | ஏறக்குறைய |
| பாகுபாடு | பரந்துள்ளது | வெவ்வேறு |
| குறிஞ்சி | கங்கை | சமயம் |
| முல்லை | சிந்து | இடைஇடையே |
| மருதம் | பிரமபுத்திரா | வாழ்விக்கவேண்டும் |
| நெய்தல் | வங்கக்கடல் | உரிமை ஆட்சி |

## அருஞ்சொற்பொருள்

வளம் - செழுமை. தாக்க - போர் செய்ய. பரந்துள்ளது - பரவியுள்ளது. பாகுபாடு - பிரிவு.

## கேள்விகள்

1. நம் நாட்டிற்கு இயற்கையாய் அமைந்த பாதுகாப்புக்கள் யாவை?

2. நம் நாட்டில் அமைந்துள்ள நிலப்பாகுபாட்டைக் கூறுக.

3. வடஇந்தியாவை வளப்படுத்தும் ஆறுகள் யாவை?

4. தென்னிந்தியாவின் அமைப்பைப் பற்றி எழுதுக.

5. இப்பொழுது பெற்றுள்ள உரிமை ஆட்சியைக் காக்க நாம் என்ன செய்யவேண்டும்?

### பயிற்சி

1. பரந்துள்ளது, வெவ்வேறு, பிளவுபட்டனர், விட்டு விட்டு, வாழ்விக்கவேண்டும்—இவற்றை உம் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

2. இந்திய நாட்டுப் படம் வரைந்து, மேலே கூறிய ஆறுகளையும் நீ இருக்கும் மாவட்டத்தையும் குறிப்பிடுக.

3. வேற்றுமை, பகைவர், பரந்துள்ளது, இயற்கை—எதிர்ச்சொல் கூறுக.

4. மூன்றும் பத்தியில் உள்ள வாக்கியங்கள் எத்தனை? கீழ்க்கண்டவாறு கட்டம் போட்டு எழுவாய் பயனிலை செயப்படுபொருள்களை எழுதுக.

| வாக்கிய எண் | எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|---|
| | | | |


நமது தாய் மொழி தமிழ். இம்மொழி இலக்கணம் உடையது. இதனை வாயில் வந்தவாறு பேசுதல் தவறு; முறைப்படி பேசுதல் வேண்டும். பார்த்து என்பதைப் பாத்து என்றும், வாழைப் பழம் என்பதை வாழபயம் என்றும் சொல்லுதல் தவறு. நாம் மொழியைப் பிழையின்றித் திருத்தமாகப் பேசும் முறையைக் கூறுவது இலக்கணம் ஆகும்.

## 2. நமது நாட்டுக் கொடி

1. சுதந்திரம் உள்ள ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு கொடி உண்டு. நம் இந்தியா சுதந்திரம் பெற்ற நாடு. ஆதலால் நம் நாட்டிற்கும் ஒரு கொடி உண்டு. இப்பாடத்தின் கடைசியில் காட்டப்பட்டிருக்கும் கொடியே நமது நாட்டுக் கொடி. இக்கொடியை நாம் நம் உயிர் போல மதிக்கவேண்டும். நம் நாட்டுக் கொடி எப்பொழுது, யாரால் அமைக்கப் பெற்றது? பிறகு எவ்வாறு மாறுதல் அடைந்தது? இக் கேள்விகளுக்கு உரிய விடைகளை இங்கே காண்போம்.





2. காமா என்னும் அம்மையார் நாட்டு விடுதலைக்குத் தீவிரமாக உழைத்து வந்ததைக் கண்ட ஆங்கிலேயர் அவரை இந்திய நாட்டைவிட்டு வெளியே வசிக்கும்படி செய்தனர். காமா அம்மையாரே முதன் முதலில் முந்நிறக்கொடியை உண்டாக்கினவர். அவர் இக்கொடியை 1906-ஆம் ஆண்டில் உண்டாக்கினர். இதன் மேற்பகுதி காவி நிறம் உடையது. அப்பகுதியில் எட்டு விண்மீன்கள் இருக்கும். இடைப்பகுதி வெள்ளை நிறம் உடையது. அப்பகுதியில் '**வந்தேமாதரம்**' என்னும் சொல் இந்தியில் எழுதப்பட்டிருக்கும். 'தாய் நாட்டுக்கு வணக்கம்' என்பது அதன் பொருள். கீழ்ப்பகுதி பச்சை நிறம் உடையது. அப்பகுதியில் இடப்பக்கம் சூரியனும் வலப்பக்கம் பிறைச் சந்திரனும் இருக்கும்.




3. டாக்டர் அன்னிபெசண்டு அம்மையார் என்பவரும் சிறந்த நாட்டுப் பற்று உடையவர். அவர் 1916-ஆம் ஆண்டில் ஒரு கொடியை உருவாக்கினர். அக்கொடி இதுவேயாகும். இக்கொடியில் ஐந்து செந்நிறப் பட்டை

களும் நான்கு பசுமை நிறப்பட்டைகளும் மாறி மாறி இருக்கும். இதன் இடப்புறத் தலைப்பில் ஆங்கிலேயரின் கொடி இருக்கும். நடுவில் விண்மீன் கூட்டம் இருக்கும்.

4. காந்தியடிகள் காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து உணர்ச்சி பொருந்திய முறையில் பேசக்கேட்ட மக்கள் திரள் திரளாகக் காங்கிரஸில் சேர்ந்தனர். அம்மக்களைக் கொண்ட தொண்டர் படை ஒன்று உண்டாயிற்று. காந்தியடிகள் இயக்கத் தலைவரானர்; 1921-இல் இக்கொடியை உண்டாக்கினர். இக்கொடியின் மேல்பட்டை காவிநிறம் உடையது; நடுப்பட்டை பச்சை நிறம் உடையது; கீழ்ப்பட்டை செம்மை நிறம் உடையது. மூன்று பட்டைகளையும் தொடக்கூடிய பெரிய இராட்டினம் ஒன்று அதனில் பொறிக்கப்பட்டிருந்தது.






5. பின் இக்கொடியில் சிறு மாற்றம் உண்டாயிற்று. இம்மாற்றம் 1931-இல் உண்டாயிற்று. அதாவது மேல் பட்டை காவி நிறமாகவும், நடுப்பட்டை வெண்ணிறமாகவும், கீழ்ப்பட்டை பசுமை நிறமாகவும் அமைந்தன. இராட்டினம் வெள்ளை நிறத்தில் மட்டும் அமைக்கப்பட்டது.

6. 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் நாள் நாம் சுதந்திரம் பெற்ருேம் அல்லவா? அப்பொழுது நம் கொடியில் சிறிது மாற்றம் உண்டாயிற்று. காங்கிரஸ் கட்சியின் கொடியாக முந்நிறக் கொடி இருந்தது. அதனைத் தேசீயக் கொடியாக மாற்றவேண்டும் எனத் தலைவர்கள் நினைத்தனர். உடனே கொடியில் இருந்த இராட்டினம் நீக்கப்பட்டது. அந்த இடத்தில் அசோகச் சக்கரம் பொறிக்கப்பட்டது.

7. நம் நாட்டுக் கொடியில் மூந்நிறமும் சக்கரமும்



இருப்பதற்குப் பொருள் என்ன ? கொடியில் உள்ள காவி நிறம் தைரியத்தை யும் தியாகத்தையும்குறிக் கும். வெண்மை நிறம் உண்மையையும் அமைதி யையும் குறிக்கும். பசு மை நிறம் அன்பையும் ஆற்றலையும் குறிக்கும். நடுவில் உள்ள சக்கரம் நீதியைக் குறிக்கும்.

8. இக்கொடியை நாம் பெருமை செய்வதன் மூலம் நம் நாட்டைப் பெருமை செய்தவராவோம்; நம் நாட்டுச் சுதந்திரத்திற்குப் பாடுபட்ட பெருமக்களைப் பெருமை செய்தவராவோம்.

**வாழ்க மணிக்கொடி ! வாழ்க நம் நாடு !!**

| | | |
|---|---|---|
| சுதந்திரம் | வந்தேமாதரம் | தொண்டர்படை |
| காமா | பிறைச் சந்திரன் | மாற்றம் |
| முந்நிறக் கொடி | டாக்டர் அன்னிபெசண்டு | கட்சி |
| காவிநிறம் | உருவாக்கினர் | தைரியம் |
| அமைதி | காங்கிரஸ் | தியாகம் |
| விண்மீன்கள் | திரள் திரளாக | அமைதி |

## அருஞ்சொற்பொருள்

நாட்டுப்பற்று – நாட்டின்மீது கொண்டுள்ள அன்பு. விண் மீன் - நட்சத்திரம். உருவாக்கினர் - புதிதாக அமைத்தார். திரள் திரளாக - கூட்டம் கூட்டமாக. மாற்றம் - மாறுதல். ஆற்றல் - வல்லமை.

## கேள்விகள்

1. எத்தகைய நாட்டிற்குக் கொடி உண்டு?
2. காமா அம்மையாரால் உண்டாக்கப்பட்ட கொடியின் அமைப்பை விளக்குக.
3. அன்னிபெசண்டு அம்மையார் உண்டாக்கிய கொடியைப் பற்றி எழுதுக.
4. காந்தியடிகள் உண்டாக்கிய கொடி எப்படிப்பட்ட அமைப்பை உடையது?
5. 1947-இல் கொடி எதற்காக மாற்றப்பட்டது?
6. நம் கொடியின் நிறங்களும் சக்கரமும் எவற்றைக் குறிக்கின்றன.
7. நம் கொடியை நாம் ஏன் பெருமை செய்யவேண்டும்.

## பயிற்சி

I. 1. விண்மீன், உருவாக்கினர், அமைதி, திரள் திரளாக, ஆற்றல்—இவற்றை உம் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

2. இவற்றைப் படிக்க :—
நாடு+பற்று : நாட்டுப்பற்று. மூன்று+நிறம் : முந்நிறம். ஒன்று + ஒன்று : ஒவ்வொன்று. வெண்மை + நிறம் : வெண்ணிறம்.

3. கிழக்கெல்லை, தென்னிந்தியா, வளமடைகின்றது, கடற்கரை, இடப்புறம்—இவற்றைப் பிரித்து எழுதுக.

II. 1. இவற்றைப் படிக்க :—

| | |
|---|---|
| இது நம் கொடி. | இது நம் கொடியா? |
| அவன் என் நண்பன். | அவன் என் நண்பனா? |
| இளங்கோ ஆசிரியர். | இளங்கோ ஆசிரியரா? |

2. (1) இந்தியாவின் வடவெல்லை இமயமலை.
(2) தமிழிற் சிறந்த நூல் திருக்குறள்.
(3) பூமி சூரியனைச் சுற்றுகிறது.

இவற்றைக் கேள்வி வாக்கியங்களாக மாற்றுக.

## 3. சொல் தவருத உத்தமர்


1. காஞ்சீபுரம் தொண்டை நாட்டைச் சேர்ந்த ஒரு பெரிய நகரமாகும். அந்நகரம் பட்டுப் புடவைகளுக்குச் சிறந்த இடம்; வரலாற்றுச் சிறப்புடைய இடம். அந் நகருக்குப் பக்கத்தில் **மெய்ப்பேடு** என்னும் ஓர் ஊர் இருக்கிறது. அவ்வூரில் நானூறு ஆண்டுகளுக்கு முன் **காளத்தியப்பர்** என்னும் வேளாளர் வாழ்ந்துவந்தார். அவர் மனைவியின் பெயர் **சிவகாமி அம்மை.** அவர்கள் செய்த நல்வினையின் பயனுக அவர்கட்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு **அரிய நாயகன்** என்பது பெயர். பெற்றேர் எளியவராயினும் தங்கள் குழந்தையைக் கண்ணுங் கருத்துமாக வளர்த்துவந்தனர்.

2. காளத்தியப்பர் கல்வியின் பெருமையை நன்கு அறிந்தவர்; ஆதலால் தம் பிள்ளையை எவ்வாறேனும் கல்விமானுக்க விரும்பினர். அவர் தமக்கு நண்பரான ஒரு வேதியரிடம் தம் கருத்தைக் கூறினர். அவ்வேதியர் காளத்தியப்பருடைய கருத்திற்கு இசைந்தார்; அரிய நாயகர்க்குப் பாடம் கற்பித்து வந்தார். அரியநாயகர் பசியுள்ளவன் உணவு உண்ணுதல் போல மிக்க ஆவ லுடன் கற்றுவந்தார். அவர் உடலை வளப்படுத்தும் குத்துச்சண்டை, வாள் வீச்சு, சிலம்பம் முதலியவற்றை யும் பழகிவந்தார்.

3. ஒரு நாள் மாலை அரியநாயகர் தம் நண்பருடன் சிலம்பம் பழகிக்கொண்டிருந்தார். அப்பொழுது அவ் வழியே ஒரு சாஸ்திரியார் வந்தார். அவர் ரேகை சாஸ்தி ரத்தில் வல்லவர். அவர் அரியநாயகரின் ஒளி பொருந்திய முகத்தைக் கண்டார்; அரியநாயகரைத் 'தம் அருகில் அழைத்தார். அவர் அரிய நாயகரின் கையைப் பார்த்து, " தம்பி, உனக்கு நல்ல எதிர்காலம் உண்டு. நீ அரசாங்

கத்தில் பெரிய பதவியை அடைவாய்,'' என்று கூறி, "என் சோதிடம் பலிக்குமானுல் உனக்குக் கிடைக்கும் பொருளில் பாதியை எனக்குக் கொடுப்பாயா ?'' என்று கேட்டார். அரியநாயகர் அவ்வாறே தருவதாக வாக்களித்தார்; பிறகு சோதிடர் விருப்பப்படி ஓர் ஓலையில் அதனை எழுதிக் கொடுத்தார்.

4. பின் அரியநாயகர் விஜயநகரம் சென்ருர். அங்கு அவர் முதலில் கணக்கப்பிள்ளையாக அமர்ந்தார்; பின் தம் ஊக்கம், நுண்ணறிவு இவற்றுல் படைத்தலைவரானுர்; கிருஷ்ணதேவராயரிடம் பெருஞ் சிறப்புப் பெற்ருர்.



அரியநாயகரின் திறமையைக் கண்ட ராயர் அவரை மதுரைக்கு அனுப்பினுர். அரியநாயகர் அங்குச் சென்று அங்கு நடந்த கலகத்தை அடக்கினுர்; நாட்டைச் சீர் திருத்தினுர். அதனுல் நாட்டில் அமைதி உண்டாயிற்று.

5. அரியநாயகர் மதுரையில் படைத்தலைவராக

இருந்தார். அக்காலத்தில் ஒரு நாள் முன்சொன்ன சோதிடர் மகன் அரியநாயகர் எழுதிக் கொடுத்த ஓலையுடன் வந்து அவரைக் கண்டான். ஓலையைக் கண்டதும் அரியநாயகர்க்குப் பழைய நினைவுகள் எழுந்தன. அவர் மன மகிழ்ச்சியோடு ஓலையில் எழுதியிருந்தபடி தன் சம்பத்தில் பாதியைத் தருவதாகச் சொன்னார். சோதிடர் மகன் அதைக் கேட்டு மிக்க வியப்பு அடைந்தான்; 'சொன்ன சொல் தவறாத உத்தமர்' என்று அவரைப் பாராட்டினான். அவன் பேராசை அற்றவன்; உத்தமன். ஆதலால் அவன் தன் குடும்பம் கவலையில்லாது வாழ்வதற்கு வேண்டும் பொருள்மட்டும் பெற்றுச் சென்றான்.

| | | |
|---|---|---|
| உத்தமர் | வாள்வீச்சு | காஞ்சீபுரம் |
| சிலம்பம் | தொண்டைமண்டலம் | சாஸ்திரியார் |
| வரலாற்றுச் சிறப்பு | ரேகை சாஸ்திரம் | மெய்ப்பேடு |
| பலிக்குமானால் | நல்வினை | விஜயநகரம் |
| அரியநாயகர் | நுண்ணறிவு | எளியவர் |
| சீர்திருத்தினார் | கண்ணும் கருத்துமாக | படைத்தலைவர் |
| கல்விமான் | பழைய நினைவுகள் | இசைந்தார் |
| சம்பத்து | குத்துச் சண்டை | அற்றவன் |

## அருஞ்சொற்பொருள்

நல்வினை - நல்ல செயல், அறம். எளியவர் - ஏழை. கல்விமான் - கல்வியறிவுடையவர். இசைந்தார் - சம்மதித்தார். வாள்வீச்சு - வாள் சண்டை. சாஸ்திரியார் - சாஸ்திரத்தில் வல்லவர். பலித்தல் - சொன்னபடி நடைபெறுதல். சம்பத்து - செல்வம். அற்றவன் - நீக்கியவன். ரேகை சாஸ்திரம் - கையில் உள்ள கோடுகளைப் பார்த்துச் சொல்லும் சாஸ்திரம்.

## கேள்விகள்

1. அரியநாயகர் எங்குப் பிறந்தார்? அவர் பெற்றோர் யாவர்?

2. காளத்தியப்பர் அரியநாயகர்க்கு எவ்வாறு கல்வி கற்பித்தார்?

3. சாஸ்திரியார் அரியநாயகரிடம் கூறியவற்றை எழுதுக.

4. சாஸ்திரியார் அரியநாயகரிடம் எழுதி வாங்கிய செய்தி யாது?

5. அரியநாயகர் ராயரிடம் பெற்ற சிறப்புக்கள் யாவை?

6. அவர் சொன்ன சொல் தவருதவர் என்பது எவ்வாறு விளங்குகிறது?

7. அந்தணன் சிறந்த உத்தமன் என்பதை நீ எவ்வாறு அறிகின்ருய்?

### பயிற்சி

I. 1. இக்கதையை அரியநாயகர் சொல்வதுபோல் எழுதுக.

2. இதனை அந்தணன் சொல்வதுபோன்று எழுதுக.

3. இதனை நகரமக்களுள் ஒருவர் சொல்வதுபோன்று எழுதுக.

II. 1. வரலாற்றுச் சிறப்பு, கண்ணும் கருத்துமாக, சீர்திருத்திஞர், பழைய நினைவுகள்—இவற்றை உம் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

2. இவற்றைப் படிக்க :—

அற்றவன் × உற்றவன். பழமை × புதுமை. எளியவர் × செல்வர். குழந்தை × கிழவர். பெரியவர் × சிறியவர்.

## இலக்கணம்

### வாக்கியம்

(1) அரியநாயகர் வந்தார், (2) அரியநாயகர் வந்து, (3) வந்த அரியநாயகர்—இம்மூன்றிலும் கருத்து முடிந்து நிற்பது எது? அரியநாயகர் வந்தார் என்பதேயாம். இவ்வாறு கருத்து முடிந்து நிற்கும் சொற்ருெடர் வாக்கியம் எனப்படும்.

நல்ல பையன், கடல் பெரியது, பாரதியார் வந்து, கடவுள் ஒருவர் உண்டு—இவற்றில் உள்ள வாக்கியங்களை எடுத்து எழுதுக.

# 4. புலவர் சண்முகனர்

1. சண்முகனர் சோழவந்தான் என்னும் ஊரில் பிறந்தார். அவர் கற்கவேண்டிய இலக்கியம், இலக்கணம் முதலியவற்றை நன்கு கற்ருர்; பெரும் புலமை பெற்ருர். அவர் படித்தவாறு நடந்த பெரியவர். ஆதலால் அவரிடம் பல சிறந்த குணங்கள் இருந்தன. அவர் பிறர் துயரத்தைக் கண்டு மனம் பொறுக்கமாட்டார்; உண்மையை அஞ்சாமல் பேசுவார்.

2. சண்முகனர் காலத்தில், திருவாவடுதுறை மடத்தில் இருந்த அடிகள் 'தமிழ்க் கலை மாநாடு' ஒன்று கூட்டினர். அம்மாநாட்டிற்குப் புலவர் பலர் வந்து சொற்பொழிவாற்றினர். புலவர் சண்முகனரும் அம்மாநாட்டிற்கு வந்து சொற்பொழிவாற்றினர். மாநாட்டின் இறுதியில் அடிகள், அங்கு வந்தவர்களில் ஐந்து புலவர்களுக்குத் தலைக்கு நூறு ரூபாயும் ஓர் உயர்ந்த பீதாம்பரமும் அளித்தார். அந்த ஐந்து புலவர்களில் சண்முகனரும் ஒருவராவர்.

3. புலவர் பெருமக்கள் அனைவரும் அடிகளிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டனர். புலவர் சண்முகனர் தம் நண்பர் மூவருடன் குதிரை வண்டியில் ஏறிப் புகைவண்டி நிலையத்திற்கு வந்து கொண்டிருந்தார். அப்பொழுது வழியில் ஓர் ஏழைப் பெண் அவர் எதிரே சென்று கொண்டிருந்தாள். அவளுடைய ஆடை பல இடங்களிலும் கிழிந்திருந்தது. மேலும் கிழிவதற்கு அதில் சிறிதும் இடம் இல்லை.

4. மானத்தைக் காப்பதற்கல்லவா ஆடையணிவது? வறுமை காரணமாகத் தன் உடலையும் மறைத்துக்கொள்ள முடியாத அந்தப் பெண்ணைப் புலவர் சண்முகனர் கண்டார். அப்பெண்ணின் நிலை அவர் உள்ளத்தை

உருக்கியது. அவர் அந்த ஏழைப் பெண்ணை அருகில் அழைத்தார்; அடிகள் தந்த பீதாம்பரத்தை அவளிடம் தந்து உடுத்திக் கொள்ளச் செய்தார். பிறகு அவர் தம் மிடம் இருந்த ரூபாயில் ஐம்பது ரூபாயை அவளிடம் கொடுத்து அனுப்பினர். அப்பெண்ணிடம் கொண்ட மிக்க இரக்கத்தால் தாம் பெற்ற பரிசுப் பொருளைப் பிறர்க்கு அளிப்பது தக்கதா என்பதையும் அவர் சிந்திக்கவில்லை.

5. இச்செய்தி திருவாவடுதுறையில் உள்ள அடிகள் காதுக்கு எட்டியது. தாம் கொடுத்த பணத்தைச் சண்முக னர் ஏழைக்குக் கொடுத்ததைப்பற்றி அடிகள் வருந்த வில்லை; ஆனல் தாம் அன்புடன் அளித்த பீதாம்பரத்தை யும் சண்முகனர் அலட்சியமாகக் கருதிக் கொடுத்துவிட்ட தற்காக மிகவும் மனம் வருந்தினர்.

6. சில மாதங்களுக்குப்பின் சண்முகனர் திருவாவடு துறைக்குச் சென்றார். அடிகள் தம் வருத்தத்தை வெளிக் காட்டாமல் சண்முகனரை வரவேற்றார். பின் சண்முக னர் தாமாகப் பீதாம்பரம் பற்றிப் பேசத் தொடங்கினர். உடனே அடிகள், சண்முகனரைப் பார்த்து, "ஏழைக ளிடத்தில் இரக்கம் கொள்வது நல்லவர்களுக்கு இயல்பே. இருப்பினும், நாம் அன்புடன் கொடுத்ததை நீர் அலட்சிய மாகப் பிறர்க்குக் கொடுக்கலாமா?" என்று கேட்டார்.

7. புலவர் அடிகளை நோக்கி, "பெருமானே, நீங்கள் கொடுத்த பீதாம்பரத்தை நான் அலட்சியம் செய்யவில்லை. அந்தப் பெண் இருந்த நிலை என் மனத்தை அவ்வாறு உருக்கிவிட்டது. இரக்கத்தின் மிகுதியால் அவ்வாறு செய்ய நேர்ந்தது. மேலும் என் ஆசிரியர், 'துன்பப்படு பவர் யாவராயினும் உயர்வு தாழ்வு கருதாமல் உதவி செய்யவேண்டும்' என்று கூறியுள்ளார். 'உதவி செய்ய வேண்டும் என்னும் எண்ணம் வந்தபோதே கையில் இருப்பதைக் கொடுத்துவிட வேண்டும்,' என்பது என்

எண்ணம். நான் செய்தது பிழையாயின் மன்னிக்க வேண்டுகின்றேன்,'' என்றார்.

8. சண்முகனாரின் உண்மையுரையைக் கேட்ட அடிகள் மனம் மகிழ்ச்சியால் பொங்கியது. அவரது கள்ளங் கபடு அற்ற உள்ளத்தைக் கண்டு அடிகள் வியந்தார். அடிகள் மீண்டும் ஒரு பீதாம்பரத்தைக் கொடுத்தார். அவர் சண்முகனாரைப் பார்த்து, "நீர் நமது ஆதீனப் புலவராக இருப்பது பற்றி நாம் பெருமையடைகிறோம்; நமக்காக நீர் எப்பொழுதும் இந்தப் பட்டுப் போர்வையை அணிந்துகொள்ள வேண்டும்,'' என்று கூறினார்.

| | |
|---|---|
| சண்முகனார் | மானம் |
| சோழவந்தான் | இரக்கம் |
| இலக்கியம் | அலட்சியமாக |
| இலக்கணம் | காதுக்கு எட்டியது |
| புலமை | பெருமானே |
| திருவாவடுதுறை | உருக்கிவிட்டது |
| அடிகள் | கருதாமல் |
| தமிழ்க்கலை மாநாடு | பிழையாயின் |
| சொற்பொழிவாற்றினர் | மன்னிக்க |
| தலைக்கு | வியந்தார் |
| பீதாம்பரம் | ஆதீனப்புலவர் |

## அருஞ்சொற்பொருள்

புலமை - அறிவு. அடிகள் - துறவி. சொற்பொழிவு ஆற்றினர் - பேசினர். தலைக்கு - ஒவ்வொருவர்க்கும். பீதாம்பரம் - பட்டுப் போர்வை. காதுக்கு எட்டியது - தெரிந்தது. பெருமான் - தலைவன். உடுத்திக்கொள்ள - அணிந்துகொள்ள.

## கேள்விகள்

1. சண்முகனுரின் குணங்கள் யாவை?

2. சண்முகனுர் மாநாட்டிற்கு வந்த புலவர்களில் சிறந்தவர் என்பது எதனுல் தெரிந்தது?

3. புலவர் புகைவண்டி நிலையம் செல்லும்போது நடந்தது யாது?

4. அடிகள் சண்முகனுரைப்பற்றி என்ன எண்ணினுர்?

5. அடிகளிடம் புலவர் கூறியவற்றைச் சுருக்கி எழுதுக.

6. அடிகள் புலவரை எவ்வாறு பெருமைப்படுத்தினுர்?

## பயிற்சி

1. கள்ளம் கபடு, உயர்வு தாழ்வு, தலைக்கு, வெளிக்காட்டாமல், பிழையாயின்—இவற்றை உம் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

2. துயரம், உண்மை, வருத்தம், மிகுதி, தாழ்வு—இவற்றுக்கு எதிர்ச்சொல் கூறுக.

## இலக்கணம்

### பத்தி (பாரா)

ஒரே பொருளைப் பற்றிய பல வாக்கியங்கள் கொண்ட பத்தி ஆங்கிலத்தில் பாரா (Para) எனப்படும். பல பத்திகள் கொண்டது ஒரு பாடமாகும்.

1. இப்பாடத்தில் எத்தனை பத்திகள் இருக்கின்றன? முதல் பத்தியில் இருக்கும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களை எழுதுக.

2. இப்பாடத்தில் வந்துள்ள பத்திகள் ஒவ்வொன்றும் என்னென்ன பொருள்பற்றி எழுதப்பட்டுள்ளன?


## 5. பள்ளி விளையாட்டுக்கள்

1. என் பெயர் இளங்கோ. நான் ஐந்தாம் வகுப்பு மாணவன். நான் செங்கற்பட்டு—இராமகிருஷ்ணர் பள்ளியில் படிக்கின்றேன். எங்கள் பள்ளியில் இருக்கும் உடற் பயிற்சி ஆசிரியர் மிகவும் நல்லவர். அவர் எங்கட்குக் கற்பித்த விளையாட்டுக்கள் பல.


2. தனி விளையாட்டு, கூட்டு விளையாட்டு என எங்கள் விளையாட்டு இரு வகைப்படும். தனி விளையாட்டில் ஒவ்வொரு மாணவனும் தன் வெற்றியை நினைத்துப் பிறருடன் போட்டியிடவேண்டும். ஓட்டப் போட்டி, இசை நாற்காலி போன்றவை தனி விளையாட்டு வகையைச் சேர்ந்தவை. கூட்டு விளையாட்டில் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர் ஒன்று கூடித் தங்கள் பக்கம் வெற்றியுண்டாகும் முறையில் மற்றொரு கூட்டத்தாருடன் போட்டியிடவேண்டும். கால்பந்து, கைப்பந்து முதலியன இவ்வகையைச் சேர்ந்தவை. இவற்றுடன் கதை சம்பந்தமான விளையாட்டுக்களையும் எங்கள் ஆசிரியர் கற்பித்து வருகின்றார்.

3. நான் என் மாணவத் தோழர்களுடனும் ஆசிரியர் சிலருடனும் ஒரு முறை வாலாஜாபாத் சென்றேன். அங்கு ‘இந்துமத பாடசாலை’ என ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. அப்பள்ளியில் உள்ள மாணவர்கள், நாங்கள் விளையாடும் விளையாட்டுக்களை விளையாடுகின்றனர். அவர்கள் மேலும் பல அருமையான விளையாட்டுக்களையும் விளையாடுகின்றனர். அவற்றைப்பற்றி இங்குக் கூறுகின்றேன்.

4. அம்மாணவர்கள் செய்யும் உடற்பயிற்சிகள் எல்லாம் விளையாட்டாகவே உள்ளன. அவர்கள் நல்ல கருத்துடைய பாடல்களைப் பாடுகின்றனர்; பாடும்பொழுது அக்



படம் 1.



படம் 2.



படம் 3.



படம் 4.

கருத்திற்குத் தகுந்த முறையில் ஆடுகின்றனர். இவ்வாறு செய்வதால் உடற்பயிற்சி செய்கிறேம் என்பதை மறந்து அவர்கள் மகிழ்ச்சியுடன் விளையாட்டாக உடற்பயிற்சி செய்கின்றனர். அவர்களிடையே ஒற்றுமை உணர்வு உண்டாகின்றது. மேலும் அவர்கள் பல நல்ல கருத்துக் களையும் பாடல் மூலம் அறிகின்றனர்.

5. முதற் படத்தைக் கவனியுங்கள்: பிள்ளைகள் அனைவரும் கைகோத்து நடனமாடுகின்றனர். 'எந்த வேற்றுமையும் எண்ணுமலே—நாம், இன்பமுடன் ஆடி வாழ்ந்திடுவோம்,' என்னும் பாடலை அவர்கள் பாடி இன்ப முடன் விளையாடுகின்றனர்.

6. இரண்டாம் படத்தைப் பாருங்கள்: 'நாம் சோம்பலை நீக்கிடுவோம். அதனுல் வல்லமை பெற்று உயர்ந்திடுவோம்,' என்னும் பாடலைப் பாடி அம்மாணவர் நடிக்கின்றனர்.

7. மூன்றும் படத்தை நோக்குங்கள்: மாணவர்கள் 'நாம் எல்லோரும் ஒன்று சேருவோம்; நாட்டை நன்ருய்ச் சுத்தம் செய்திடுவோம்,' என்னும் கருத்துள்ள பாடலைப் பாடுகின்றனர்; அக்கருத்துக்குத் தக்கபடி தெருவைச் சுத்தம் செய்தல்போல் நடிக்கின்றனர்.

8. நான்காம் படமும் அம்மாணவர்கள் விளை யாடும் இவை போன்ற விளையாட்டுக்களில் ஒன்றைக் குறிப்பதேயாம். கோபுரம் கட்டுதல், தோணி தள்ளுதல் போன்ற வேடிக்கையான விளையாட்டுக்களையும் அவர்கள் செய்து காட்டுகின்றனர். உங்களுக்கு விடுமுறை கிடைக் கும்பொழுது நீங்களும் சென்று பாருங்கள்.

| | |
|---|---|
| இராமகிருஷ்ணர் பள்ளி | கைப்பந்து |
| தனிவிளையாட்டு | கருத்துடைய |
| கூட்டுவிளையாட்டு | உணர்வு |
| போட்டியிடவேண்டும் | கைகோத்து |
| கால்பந்து | கலையுணர்ச்சி |

## அருஞ்சொற்பொருள்

கருத்துடைய - நல்ல கருத்து உள்ள. ஒற்றுமை உணர்வு - ஒற்றுமை எண்ணம். கலையுணர்ச்சி - கல்வியை நன்றாக அறியும் அறிவு.

## கேள்விகள்

1. எந்தவூர்ப் பள்ளி மாணவன் இப்பகுதியைச் சொல்லுகின்றான் ?
2. விளையாட்டு எத்தனை வகைப்படும் ?
3. கூட்டுவிளையாட்டு என்றால் என்ன ?
4. வாலாஜாபாத் மாணவர் விளையாட்டிற்கும் மற்றைய பள்ளி மாணவர் விளையாட்டிற்கும் உள்ள வேறுபாடு என்ன ?
5. வாலாஜாபாத் மாணவர் செய்யும் விளையாட்டுக்களில் இரண்டைப்பற்றி எழுதுக.

## பயிற்சி

I. 'விளையாட்டால் உண்டாகும் நன்மை' என்பதுபற்றிப் பதினைந்து வரிக்குள் ஒரு கட்டுரை வரைக.

II. 1. இப்பாடத்தின் முதல் பத்தியில் உள்ள பெயர்ச்சொற்களையும், வினைச்சொற்களையும் எழுதுக.

2. இரண்டாம் பத்தியில் உள்ள வினை முற்றுக்களைக் கூறுக.

3. மூன்றும் பத்தியில் உள்ள பெயரெச்ச வினையெச்சங்களைக் கூறுக.

4. நான்காம் பத்தியில் உள்ள எ. ப. செ. எடுத்து எழுதுக.

5. எட்டாம் பத்தியில் உள்ள உயர்திணை, அஃறிணைப் பெயர்களைக் கூறுக.

6. ஐந்தாம் பத்தியில் உள்ள அறுவகைப் பெயர்ச் சொற்களையும் எடுத்துக் கீழ்க்கண்டவாறு அமைத்து எழுதுக.

| பொருட் பெயர் | இடப் பெயர் | காலப் பெயர் | சினைப் பெயர் | குணப் பெயர் | தொழிற் பெயர் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

## இலக்கணம்

### சொல்

அரசியார் வந்தார்—இங்கு இரண்டு சொற்கள் உள்ளன. இவற்றுள் அரசியார் என்பது ஒருவர் பெயர். ஆதலால் அது பெயர்ச்சொல் எனப்படும். வந்தார் என்பது (அரசியார்) செய்த வினையைக் குறிக்கும் (வினை - தொழில்). ஆதலால் அச்சொல் வினைச்சொல் எனப் பெயர்பெறும். வந்து, வந்த என்பனவும் வினைச்சொற்களே.

## 6. ஆறு

(பாட்டு)

1. கல்லும் மலையும் குதித்துவந்தேன்—பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன் ;
எல்லை விரிந்த சமவெளி—எங்குநான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்.

2. காயும் நிலத்தழல் ஆற்றிவந்தேன்—அதில்
கண்குளி ரப்பயிர் கண்டுவந்தேன் ;
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன்—அங்கென்
ஆசை தீரவிளை யாடிவந்தேன்.

3. ஏருத மேடுகள் ஏறிவந்தேன்—பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன் ;
ஊருத ஊற்றிலும் உட்புகுந்தேன்—மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.

4. பஞ்சை அரைத்துநூல் நூற்றுவந்தேன்—சீனி
பாகமாய்ச் செய்து கொடுத்துவந்தேன் ;
நெஞ்சம் உலர்ந்த நெடுநகரில்—குழாய்
நீராகவும் சென்று பாய்ந்துவந்தேன் ;

5. அல்லும் பகலும் அலைந்து வந்தேன்—எங்கள்
ஆதி இறைவனைக் காணவந்தேன் ;
நில்லும் எனக்கினி நேரமில்லை—இன்னும்
நீண்ட வழிபோக வேண்டும், அம்மா.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

| | | |
|---|---|---|
| எல்லைவிரிந்த | ஆற்றி | உட்புகுந்தேன் |
| சமவெளி | ஆயும் | அல்லும் |
| ஆதி | பொழில் | |

## அருஞ்சொற்பொருள்

எல்லைவிரிந்த - அகன்றுபரந்த. காயும் - சூடுள்ள. நிலத் தழல் - நிலத்தின் சூடு. ஆயும் - கொண்டாடப் பெறுகின்ற. பாகமாய் - பக்குவமாய். நெஞ்சம் உலர்ந்த நெடுநகர் - ஆறு, ஏரி, குளம் முதலியன இல்லாமையாலே அந்த நகரத்தின் நெஞ்சம் காய்ந்துவிட்டது எனக் கவிஞர் கூறுகிறார்.

## கேள்விகள்

1. ஆறு எவற்றைத் தாண்டி எங்குத் தவழ்ந்து வந்தது?
2. அது எவற்றை உண்டாக்கி வந்தது?
3. அது எவற்றை நிரப்பி வந்தது?
4. ஆறு எங்குப் புறப்பட்டு எங்குச் சென்று முடிந்தது?

## பயிற்சி

I. 1. உங்கள் ஊரில் ஆறு உண்டா? அது எங்குப் புறப்பட்டு எப்படி வருகிறது?

2. 'ஆறும் அதன் பயனும்' என்பதுபற்றி ஒரு கட்டுரை எழுதுக.

3. 'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்'—எப்படி?

4. இங்குள்ள பாடல் ஒவ்வொன்றிற்கும் ஏற்ற தலைப்புக் கொடுக்க.

II. 1. மூன்றும் பாடலில் உள்ள ஒன்றன்பால், பலவின்பால் பெயர்களை எடுத்து எழுதுக.

2. ஐந்தாம் பாடத்தில் உள்ள அறுவகைப் பெயர்ச் சொற்களைக் கூறுக.

3. இப்பாடத்தின் இரண்டாம் பாராவில் உள்ள வினை முற்று, வினையெச்சம், பெயரெச்சங்களைக் கூறுக.

4. கீழ்வருவனவற்றைப் பொருத்தம் அறிந்து சேர்த்துப் படிக்க :

| | |
|---|---|
| கூழானாலும் | கசக்கிக் கட்டு. |
| கந்தையானாலும் | குளித்துக் குடி. |
| கமலம் நல்ல | மாணவன். |
| கந்தன் நல்ல | மாணவி. |
| இது அரசனது | வீடு. |
| அது வேலைக்காரனது | அரண்மனை. |

## இலக்கணம்

### திணை—பால்

1. திணை - குலம். உயர்திணை × அஃறிணை. மக்கள், தேவர் - உயர்திணை. மற்றவை எல்லாம் அஃறிணை.

காந்தியார், ஆசிரியர், சிறுமி—உயர்திணை.


ஆறு, கடல், மரம், பூனை—அஃறிணை.

2. பால் - பிரிவு. உயர்திணையில் (1) ஆண்பால் (2) பெண்பால் (3) பலர்பால் என மூன்று பிரிவுகள் இருக்கின்றன. அஃறிணையில் (1) ஒன்றன் பால் (2) பலவின் பால் என இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. எனவே பால்கள் ஐந்து என அறியலாம்.

(உ - ம்.) (1) மாணவன், கண்ணன்—ஆண்பால்
(2) கண்ணகி, வள்ளி—பெண்பால்
(3) அரசர், பெண்டிர், வீரர்—பலர்பால்
} உயர்திணை.

(4) யானை, மயில், ஆறு—ஒன்றன்பால்
(5) மரங்கள், ஆடுகள், யானைகள்—பலவின்பால்
} அஃறிணை.

# 7. படப் பயிற்சி—1



## பயிற்சி

I. 1. படம் ஒவ்வொன்றிலும் யார் யார் என்னென்ன செய்கின்றனர்?

2. இப்படம் எதைப்பற்றிக் கூறுகின்றது என்பதை அறிந்து ஏற்ற தலைப்புக் கொடுக்க.

3. அந்தத் தலைப்பின்கீழ்ப் படத்தில் உள்ள செய்திகளை முறைப்படுத்திப் பதினைந்து வரிகளில் எழுதுக.

4. நீ கொண்டாடும் வேறு ஒரு விழாவைப் பற்றிப் பதினைந்து வரிகளில் எழுதுக.

II. 1. இவற்றைப் படிக்க :—

| | |
|---|---|
| நான் பார்த்தேன். | நான் பார்க்கவில்லை. |
| தம்பி தூங்குகிறான். | தம்பி தூங்கவில்லை. |
| என்னால் செய்யமுடியும். | என்னால் செய்யமுடியாது. |

2. மேலே உள்ளபடி கீழ் வருவனவற்றை மாற்றுக :

தாயார் ஊருக்குச் சென்றார்.
நான் ஓடுகிறேன்.
அவன் எழுதுகிறான்.
வரதன் படிக்கிறான்.
அண்ணன் நாளை வருவான்.
கண்ணன் கதை சொன்னான்.
முருகன் ஓடி வருகிறான்.



## 8. வ. உ. சிதம்பரனுர்

1. 1947-ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம், 15-ஆம் நாள் நமக்குச் சுதந்திரம் கிடைத்தது. சுதந்திரம் என்பது நம்மை நாமே ஆண்டுகொள்வதாகும். இப்பொழுது நாம் பெற்றுள்ள சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர் பலர். அவர்கள் தங்களுடைய உடல், பொருள், உயிர் அனைத்தையும் சுதந்திரத்திற்காக இழந்தார்கள். அவர்களுள் வ. உ. சிதம்பரனுர் என்பவர் ஒருவராவர்.

2. சிதம்பரனுர் ஒட்டப்பிடாரம் என்னும் ஊரில் பிறந்தார். இவ்வூர் தூத்துக்குடிக்குப் பக்கத்தில் இருக்கிறது. அவர் 1872-ஆம் ஆண்டில் பிறந்தார்; வேளாளர் வகுப்பைச் சேர்ந்தவர். சிதம்பரனுர் இளமையிலேயே ஆங்கிலத்தையும் தமிழையும் கற்ருர். அவர் தம் இருபத்தெட்டாம் வயதில் வழக்கறிஞர் ஆனுர்; நடுவு நிலைமை தவருது அவ்வேலையைச் செய்தார்; அதனுல் எல்லாராலும் புகழப்பட்டார்.

3. சிதம்பரனுர் தாம் மட்டும் பெரும் பொருள் சம்பாதித்து இன்பமாக வாழ விரும்பவில்லை; நாட்டு மக்கள் அனைவரும் இன்பமாக வாழ விரும்பினுர். 'அறிவும் ஆற்றலும் பெற்றவர்கள் தாய் நாடு விடுதலை பெற

உழைக்க வேண்டும்; தாய்மொழியை வளர்க்க முன் வர வேண்டும்,' என்பவை சிதம்பரனரின் எண்ணங்களாகும். எனவே, அவர், அப்பொழுது நாட்டு விடுதலைக்குப் போராடிய காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்தார்.

4. அவர் காலத்தில் இந்தியாவை ஆண்டுகொண்டிருந்தவர் ஆங்கிலேயர் அல்லவா? அவர்கள் இங்குக் கொள்ளை லாபத்திற்குப் பொருள்களை விற்றனர்; கிடைத்த பொருளை யெல்லாம் தங்கள் நாட்டிற்கே கொண்டுசென்றனர். அதனல் இந்தியா வறுமை அடைந்தது. சிதம்பரனர் ஆங்கிலேயரின் செல்வாக்கை ஒழிக்க வேண்டும் என எண்ணினர். அவர் தூத்துக்குடியில், ஐரோப்பியருக்குப் போட்டியாகச் சில நூல் நூற்கும் இயந்திர சாலைகளை உண்டாக்கினர்.

5. தூத்துக்குடி தென்னிந்தியாவில் உள்ள துறைமுகப் பட்டினங்களில் ஒன்று. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் நடந்த வியாபாரம் அத்துறைமுகத்தின் வழியாகவே நடந்தது. கடல் வாணிகத்திற்குக் கப்பல் அவசியம் அல்லவா? அக்கப்பல்கள் யாவும் ஐரோப்பியரிடமே இருந்தன. ஐரோப்பியர் அதனல் நல்ல இலாபம் பெற்றனர்.

6. சிதம்பரனர், இந்திய மக்களின் பொருளை முதலாக வைத்து, 'கப்பல் போக்கு வரவுச் சங்கம்' ஒன்றை அமைக்க முயற்சி செய்தார். அவ்வாறு செய்தால் கிடைக்கும் பொருளை இந்தியராகிய நாம் பெற்று நன்மை அடையலாம் அல்லவா? இம்முயற்சியில் அவர் தம் மனைவி, மக்களை மறந்தார். பெரு முயற்சிக்குப் பின், பலர் உதவியைக் கொண்டு தம் காரியத்தை அவர் முடித்தார். 'இந்தியரின் கப்பல் வாணிகச் சங்கம்' என்னும் பொருள் தரும் "இந்தியன் நாவிகேஷன் கம்பெனி" 1906-இல் உண்டாக்கப்பட்டது. இந்தியாவில் முதன்

முதல் கப்பல் ஓட்டிய பெருமை சிதம்பரனர்க்கே உண்டு. ஆதலால், அவர், 'கப்பல் ஓட்டிய தமிழன்—வ. உ. சிதம் பரனர்' என்று அழைக்கப்பட்டார்.

7. சிதம்பரனர் தாய் நாட்டின்மீது கொண்ட பற்று காரணமாகத் தம் வழக்கறிஞர் வேலையை இழந்தார். அவர்தம் நாட்டுப்பற்றையும் நாட்டுத் தொண்டையும் ஆங்கிலேயர் அறிந்தனர்; அவரைச் சிறையில் வைத் தனர். சிதம்பரனர் சிறையில் செக்கு இழுத்தார்; கூழ் குடித்தார்; சொல்ல முடியாத பல துன்பங்களை அடைந் தார். எனினும் அவர் தாய் நாட்டின்மீது கொண்ட பற்றை மறக்கவில்லை. அவர் சிறையில் ஓய்வு கிடைத்த பொழுது தமிழ் நூல்கள் பலவற்றை எழுதினர். அவர் 1936-ஆம் ஆண்டு இறந்தார்.

| | | |
|---|---|---|
| ஒட்டப்பிடாரம் | விடுதலை | துறைமுகப்பட்டினம் |
| தூத்துக்குடி | இயக்கம் | இலங்கை |
| வழக்கறிஞர் | கொள்ளை லாபம் | கடல் வாணிகம் |
| நடுவுநிலைமை | செல்வாக்கை | இயந்திரசாலை |

## அருஞ்சொற்பொருள்

வழக்கறிஞர் - வக்கீல். இயக்கம் - சங்கம். விடுதலை - விடு படுதல். கொள்ளை லாபம் - நியாயமற்ற லாபம், அதிக லாபம். செல்வாக்கு - ஆட்சி. கடல் வாணிகம் - கடல்வழியாகச் செய்யும் வியாபாரம்.

## கேள்விகள்

1. சுதந்திரம் என்பது யாது?
2. நமக்கு எப்பொழுது சுதந்திரம் கிடைத்தது?
3. சிதம்பரனரின் எண்ணங்கள் யாவை?
4. அவர் ஐரோப்பியர் ஆட்சியைப் போக்க என்னென்ன செய்தார்?

5. சிதம்பரனார்க்குக் ‘ கப்பல் ஓட்டிய தமிழன் ’ என்னும் பெயர் வரக் காரணம் என்ன ?

6. சிதம்பரனார் சிறையில் அடைந்த துன்பங்கள் யாவை ?

7. நீ இப்பாடத்திலிருந்து என்ன தெரிந்து கொண்டாய் ?

## பயிற்சி

1. சிதம்பரனாரைப்போல் நாட்டுக்கு உழைத்த பெருமக்கள் சிலரைக் கூறுக.

2. வழக்கறிஞர், நடுவுநிலைமை, விடுதலை, கடல் வாணிகம், கொள்ளை லாபம்—இவற்றை உம் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

3. இப்பாடத்தில் வரும் பத்திகளுக்கு ஏற்ற தலைப்புக் கொடுக்க.

4. இரண்டாம் பத்தியில் உள்ள உயர்திணை, அஃறிணைப் பெயர்களை எடுத்து எழுதுக.

## இலக்கணம்

### எண் - இடம்

1. எண்—பொருள்களின் எண்ணிக்கை. ஒன்று ஒருமை எனவும் ஒன்றுக்கு மேற்பட்டவை பன்மை எனவும் பெயர் பெறும். (உ - ம்.) மரம், நாற்காலி, அரசன்—ஒருமை.

மரங்கள், நாற்காலிகள், அரசர்கள்—பன்மை.

2. இடம்—சொற்கள் வழங்கப்பெறும் இடம். இது தன்மை இடம், முன்னிலை இடம், படர்க்கை இடம் என மூவகைப்படும்.

(1) பேசுவோன்—தன்மை இடம்.
(உ - ம்.) நான், யான், நாங்கள்.

(2) முன்னின்று கேட்போன்—முன்னிலை இடம்.
(உ - ம்.) நீ, நீர், நீங்கள்.

(3) நாம் எப்பொருளைப் பற்றிப் பேசுகிறோமோ அப் பொருள்—படர்க்கை இடம்.
(உ - ம்.) இவன், இவள், இவர், இது, இவை—இப் பெயர்கள் எல்லாம் படர்க்கை இடத்தைச் சேர்ந்தவை.



## 9. இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார்

1. 'அன்ன சத்திரம் ஆயிரம் கட்டுதலினும் ஓர் ஏழைக்கு எழுத்து அறிவித்தல் கோடி புண்ணியம்' என நம் கவிஞர் பாரதியார் கூறியுள்ளார். ஒரு மனிதனை அறிஞனாக்குவது கல்வியேயாகும். அத்தகைய கல்வி கற்றுக்கொள்ள வகை செய்து தருவது பல கோயில்களைக் கட்டுவதிலும் புண்ணியமாகும் என்பதே அறிஞர் பலரின் கருத்தாகும்.

2. மக்கள் அறிவு பெறுதற்கு உதவும் பள்ளிகள் பலவற்றைச் செல்வருட் சிலர், தம் முயற்சியால் அமைத்துள்ளனர். அவர்கள் முயற்சி போற்றத் தகுந்ததே. அவர்களினும் மேலாகப் போற்றக் கூடிய அளவில் கல்விக்குப் பொருள் உதவிய பெரியார் ஒருவர் உளர். அவர் யார்? அவர் நம் நாட்டைச் சேர்ந்தவர். அவர் செய்த உதவி என்ன? பல கல்லூரிகளைக்கொண்ட ஒரு பல்கலைக் கழகம் அமைத்ததேயாம். அப்பெரியார் பெயர்

யாது? அவர் பெயர் இராஜா சர் அண்ணுமலைச் செட்டியார் என்பது.

3. அண்ணுமலைச் செட்டியார் இராமநாதபுரம் ஜில்லாவில் உள்ள கானுடுகாத்தானில் 1881-ஆம் ஆண்டில் பிறந்தார். அவர் பள்ளிக் கல்வியை மிகுதியாகக் கற்கவில்லை. ஆயினும் அவர் உலகியல் அறிவு மிகுதியாக உடையவர். அவர் தம் குடும்பத்தில் கிடைத்த சிறு பொருளைக்கொண்டு வாணிகத்தைத் தொடங்கினுர்; தம் மதி நுட்பத்தால் பெருஞ் செல்வத்தைத் திரட்டினுர்; அவ்வாணிகம் அவருக்குப் பின்னும் அவருடைய மக்களால் நடத்தப்பட்டு வருகின்றது.

4. அண்ணுமலைச் செட்டியாரவர்கள் பல்கலைக் கழகம் ஒன்றை அமைத்தார் என்று அறிந்தோமல்லவா? அக்கழகம் பல இலட்ச ரூபாய் செலவில் சிதம்பரம் புகை வண்டி நிலையத்திற்குக் கிழக்கே அமைக்கப்பட்டது. மிகப் பெரிய அளவில் அமைந்துள்ள அக்கழகத்தில் பல கல்லூரிகள் உள்ளன. அவை தமிழ்க் கல்லூரி, இசைக் கல்லூரி, வடமொழிக் கல்லூரி, ஆங்கிலக் கல்லூரி முதலியனவாம். அங்குக் கற்கும் மாணவர் தங்குதற்கு மாணவர் விடுதியும் பெரிய நூல் நிலையமும் இருக்கின்றன. பல்கலைக் கழகம் செட்டியார் பெயரால் **அண்ணுமலைப் பல்கலைக் கழகம்** என வழங்கப்படுகின்றது.

5. செட்டியாரவர்கள் மேலும் பல அறங்கள் புரிந்துள்ளார். அவை கோயில் திருப்பணிகள், கலைக் கல்லூரிகள், மருத்துவச் சாலைகள், திருமுறைப் பாடசாலைகள், குளங்கள், சாலைகள் என்பனவாம். அவர் மதுரையில் உள்ள அமெரிக்கன் கல்லூரிக்கு உணவு விடுதி ஒன்றும் அமைத்துக் கொடுத்துள்ளார். அவரது கொடைத் தன்மையைக் கண்ட மக்கள் அவரை '**வள்ளல்**' என்று பாராட்டினர்.

6. நம் நாட்டில் உள்ள செல்வர் பலரும் செட்டியாரவர்களைப்போலக் கல்வித் துறையில் கவனம் செலுத்தி வேலை செய்வார்களாஞல் நம் நாட்டில் கல்லாதவர் யாரும் இருக்க முடியாது. நாமும் பிற நாட்டாரைப்போலச் சிறப்படையலாம்.

| | | |
|---|---|---|
| அறிவித்தல் | இராமநாதபுரம் | அமெரிக்கன் கல்லூரி |
| வகை செய்தல் | காஞடுகாத்தான் | திருமுறைப் பாடசாலை |
| போற்றத் தகுந்தது | திருப்பணிகள் | மாணவர் விடுதி |

## அருஞ்சொற்பொருள்

வகைசெய்தல் - வழிசெய்தல். போற்றத்தகுந்தது - புகழத் தகுந்தது.

## கேள்விகள்

1. எது மேலான புண்ணியம் என அறிஞர் பலர் கருதினர்?
2. செட்டியார் எங்ஙனம் போற்றத் தகுந்தவராஞர்?
3. அவர் எவ்வாறு பொருள் சேர்த்தார்?
4. அண்ணுமலைப் பல்கலைக் கழகம் என்று பெயர் வரக் காரணம் என்ன?
5. செட்டியார் செய்துள்ள வேறு பல அறங்கள் யாவை?
6. எப்பொழுது நாமும் பிற நாட்டாரைப்போல் சிறப்படையலாம்?

## பயிற்சி

I. 1. செட்டியாரைப் போன்று கல்விக்கு உதவி செய்த பெரியவர் யாவர்?

2. உம் ஊரில் உள்ள பள்ளிக்கூடம் எந்தச் செல்வரால் கட்டப்பட்டது?

3. உம் ஊரின் முன்னேற்றத்திற்கு எந்த எந்தப் பணக்காரர் என்ன என்ன உதவி செய்துள்ளனர் ?

4. சிலர், பெரியார், அருமை, கற்ருர், மாணவர்—எதிர்ச் சொல் கூறுக.

II. 1. முதல் பத்தியில் உள்ள பெயர்ச் சொல், வினைச் சொற்களை எடுத்து எழுதுக.

2. மூன்ரும் பத்தியில் உள்ள வாக்கியங்களை எடுத்து எழுதி எ. ப. செ. கூறுக.

3. கல்லூரி, மனிதன், மாணவி, அரசர், ஒன்று—பன்மை கூறுக.

4. கீழ்வரும் தடித்த சொற்களுள் வினைச்சொற்கள் எவை ? பெயர்ச் சொற்கள் எவை ?

இது அரசர் முடி ; நீ வேலையை முடி.
நீ விரைந்து ஓடு ; இது வீட்டு ஓடு.
நீ பால் குடி ; வீட்டில் குடி இரு.
இது ஒரு ஆடு ; நீ ஊஞ்சல் ஆடு.
கிளையை வளை ; இது எலி வளை.
நீ பாடு ; நான் படும் பாடு அதிகம்.

5. கீழ் வருவனவற்றைப் பொருத்தமாய்ச் சேர்த்துப் படிக்க :—

| | |
|---|---|
| முருகன் | பாடம் படிக்கிருள். |
| கனகம் | விளையாடுகிருர்கள். |
| பிள்ளைகள் | துணி துவைக்கிருன். |
| பெண்கள் | பதுங்கிப் பாய்கிறது. |
| புலி | ஓடுகின்றன. |
| எலிகள் | பூக்களைப் பறிக்கிருர்கள். |




# 10. பொது நூல் நிலையம்

1. மாணவர்களே, மூன்றும் புத்தகத்தில் நூல் நிலையம் என்பது யாது என்பதைப்பற்றி நீங்கள் அறிந்தீர்கள். நீங்கள் அப்புத்தகத்தில், பள்ளிக்கூடத்தில் உள்ள நூல் நிலையம் பற்றிப் படித்தீர்கள் அல்லவா? அறிவு வளர்ச்சி பெறப் பள்ளிப் படிப்பு மட்டும் போதாது. ஆகையால் படிப்பு முடிந்து வேறு வேலை பார்க்கச் சென்றாலும் அறிவு வளர்ச்சிக்குரிய நூல்களைப் படிக்க வேண்டும். அவ்வாறு படிப்பதற்கு உதவும் இடம் யாது? அதன் அமைப்பு யாது? அங்குச் சென்று படிக்கும் முறை யாது? இவற்றுக்குத் தக்க விடைகளை இப்பாடத்தில் அறிவீர்கள்.

2. பள்ளிக்கூடத்தில் நூல் நிலையம் இருப்பது போலவே வெளியிடத்திலேயும் நூல் நிலையம் இருக்கிறது. அது பொது நூல் நிலையம் எனப்படும். அந்நூல் நிலையம்

பெரும்பாலும் ஊர் நடுவில் அமைந்திருக்கும். அவ்வாறு இருந்தால்தான் மக்கள் எல்லோரும் சென்று படிக்க முடியும். அங்குக் கண்ணுடியால் செய்த பிரோக்களில் பல புத்தகங்கள் இருக்கும். செல்பவர் இருந்து படிக்க நாற் காலிகளும் மேஜைகளும் போடப்பட்டிருக்கும்.

3. பொது நூல் நிலையங்களில் மக்களின் அறிவு வளர்ச்சிக்கு வேண்டும் எல்லா நூல்களும் இருக்கும். வர லாற்று நூல், நில நூல், கணித நூல், மொழி நூல், விஞ் ஞான நூல், சமூக, நூல், ஆடல் நூல், பாடல் நூல், ஓவிய நூல், கட்டடக் கலை நூல், விலங்கு நூல், தாவர நூல், ஆராய்ச்சிநூல், கட்டுரை, கடிதங்கள், கைத்தொழில் நூல், முதலிய பல வகைப்பட்ட நூல்களையும் அங்கு நாம் காண முடியும். அவை முன்னர்ச் சொன்ன பீரோக்களில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். இவையன்றி மாதம், வாரம், நாள் வெளியீட்டுத் தாள்களும் இருக்கும்.

4. நாம் நூல் நிலையத்திற்குச் செல்லும்பொழுது பல விதிகளைப் பின்பற்றவேண்டும்: நாம் அங்குச் சென்று படிக்கும்போது மௌனமாகப் படிக்க வேண்டும். அங்குப் படிப்பவர் எல்லோரும் வாய்விட்டுப் படித்தால் ஒருவருக் கும் ஒன்றும் புரியாது. இதனைக் கருதியே ‘மௌனமாகப் படி’ என்று எழுதிய பலகை அங்குத் தொங்கவிடப்பட் டிருக்கும். நமக்கு வேண்டும் புத்தகங்களை அங்குள்ள தலைவரிடம் சொன்னுல் அவர் தருவார். நாம் அவற்றைப் படித்த பிறகு மேஜை மீது வைத்துவிட வேண்டும்.

5. புத்தகத்தை வீட்டிற்கு எடுத்துச் செல்லும் உரிமை கட்டணம் கட்டுபவர்க்கு உண்டு; மற்றவர்க்குக் கிடையாது. கட்டணம் கட்டியவரும் புத்தகத்தை எடுத் துச்செல்ல வேண்டுமானுல் அதனைத் தலைவர்க்குச் சொல்லவேண்டும். அத்தலைவர் அப்புத்தகத்தின் பெயரை யும், புத்தகம் வேண்டுவோர் பெயரையும் ஒரு நோட்டுப்

புத்தகத்தில் எழுதிக் கொள்வார். அந்த நோட்டுப் புத்தகத்தில் நாம் கையெழுத்து இட்ட பிறகு புத்தகத்தை எடுத்துச் செல்லலாம்.

6. பொது நூல் நிலையங்களிலிருந்து எடுத்துச் செல்லும் நூல்களை நாம் பொன்போலக் காக்கவேண்டும். அப்புத்தகங்களில் இருக்கும் படத்தைக் கிழிக்கக்கூடாது. மையினால் அப்புத்தகத்தில் ஒன்றும் எழுதக்கூடாது. குறிப்பிட்ட காலத்தில் புத்தகத்தை நிலையத் தலைவரிடம் சென்று சேர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு முறையாகச் சென்று படித்து வந்தால் நாம் பலதுறைப்பட்ட அறிவையும் அடையலாம். பலதுறைப்பட்ட அறிவை நாம் பெற்றால் முழு அறிவு பெற்றவராவோம்.

**“ தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு ”**

—வள்ளுவர்

| | | |
|---|---|---|
| வளர்ச்சிக்குரிய | ஓவியம் | மௌனமாக |
| வரலாறு | விலங்கு நூல் | பொன்போல |
| நில நூல் | தாவர நூல் | பலதுறைப்பட்ட |
| கணிதம் | வெளியீடு | தொட்டனைத்து |
| ஊறும் | கேணி | மாந்தர் |

## அருஞ்சொற்பொருள்

வளர்ச்சிக்குரிய - வளர்வதற்குத் தகுந்த. நிலநூல் - பூகோளம். ஓவியம் - சித்திரம். விலங்கு - மிருகம். வெளியீடு - வெளி வருவது. மௌனமாக - ஒலியின்றி. பலதுறைப்பட்ட - பல பொருள் பற்றிய. தொட்டனைத்து - தோண்டும் அளவு. ஊறும் - நீர் சுரக்கும்.

## கேள்விகள்

1. மூன்றும் வகுப்பில் நீ படித்த நூல் நிலையத்தைப் பற்றிக் கூறுக.
2. பொது நூல் நிலையம் என்பது யாது ?
3. அந்நூல் நிலையம் ஊர் நடுவில் அமைந்திருப்பது ஏன் ?
4. அங்கு என்ன என்ன நூல்கள் இருக்கும் ?
5. அங்கு நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் ?
6. புத்தகங்களை எவ்வாறு போற்றவேண்டும் ?

## பயிற்சி

1. நீ பார்த்த ஒரு நூல் நிலையத்தைப்பற்றிப் பத்து வரிகள் எழுதுக.

2. வளர்ச்சிக்குரிய, வெளியீடு, எடுத்துச்செல்லும் உரிமை, கட்டணம் கட்டுபவர், பொன்போல—இவற்றை உம் சொந்த வாக்கியங்களில் வைத்து எழுதுக.

3. சேர்த்து எழுதுக :

பல் + பொடி, ஆற்று + ஓரம், வரலாறு + நூல், வாழை + பழம்.

4. இரண்டாம் பத்தியில் உள்ள உயர்திணை, அஃறிணைப் பெயர்களை எடுத்து எழுதுக.

5. மூன்றும் பத்தியில் உள்ள அறுவகைப் பெயர்களை எடுத்து எழுதுக.

6. இவற்றைப் படித்துத் தெரிந்துகொள்க :—

(1) சிதம்பரனர் கூழ் குடித்தார்.
மாமா சோறு உண்டார்.
தங்கை பழம் தின்கிருள்.

(2) குதிரை கனைக்கும்.
நரி ஊளையிடும்.
யானை பிளிறும்.
நாய் குரைக்கும்.
கழுதை கத்தும்.

## 11. சிறுவர் கடமை

### (உரையாடல்)

**முருகன் :** பொன்னுசாமி, வா. காலையில் பையை எடுத்துக்கொண்டு எங்கே போகிருய் ?

**பொன்னுசாமி :** முருகா, நான் காய்கறிகள் வாங்கப் போகிறேன்.

**முரு :** என்ன ! காய்கறியா ! உங்கள் வீட்டில் வேலைக்காரன் இல்லையா ? இந்த வேலைகளையெல்லாம் நீ ஏன் செய்கிருய் ?

**பொன் :** என்ன முருகா ! நம் வீட்டு வேலைகளைச்செய்ய நாம் எதற்காகப் பிறரை எதிர்பார்க்க வேண்டும். இந்த வேலை மட்டும் இல்லை. எங்கள் வீட்டிற்கு வேண்டும் எல்லா வேலைகளையும் நாங்களே செய்து கொள்கிருேம். நான் என் பெற்ருேர்க்கு உதவியாய் இருந்து என்னுல் முடிந்த வேலையைச் செய்து வருகிறேன். அதனுல் என் பெற்ருேர் என்னிடம் அன்பாக இருக்கின்றனர்.

**முரு :** அப்படியா ! நீ, வீட்டில் என்னென்ன வேலைகளைச் செய்கிருய் ?

**பொன் :** நண்பனே, எங்கள் தகப்பனுர் வீட்டு வேலைகளைப்பற்றி ஒரு திட்டம் செய்துள்ளார். நாள் தோறும் காய்கறிகள் வாங்கிவர வேண்டியது என் முறையாகும். பால் வாங்கி வரவேண்டியது என் தம்பி முறையாகும். தோட்டக் கிணற்றிருந்து தண்ணீர் இறைத்தல் என் அண்ணன் வேலையாகும். என் தாயாருடன் சமையல் வேலைக்கு உதவியாய் இருப்பது என் தமக்கை வேலையாகும்.

முரு : பொன்னுசாமி, நீ சொல்வதைக் கேட்க எனக்கு மிகவும் மகிழ்ச்சியாய் இருக்கின்றது. நீ உன் வீட்டில் இன்னும் என்னென்ன வேலை செய்கிறாய் ?

பொன் : நான் காலையில் குளிக்கும்போது என் தம்பியையும் தங்கையையும் குளிக்கச் செய்வேன். நான் படிக்கும்போது அவர்களையும் படிக்கச் செய்வேன் ; அவர்களுக்குப் புரியாத பாடங்களை நான் சொல்லித் தருவேன். நான் பள்ளிக்கூடம் போகும்போது அவர்களையும் அழைத்துச் செல்வேன்.

முரு : பொன்னுசாமி, நீ இந்த வேலைகளை யெல்லாம் செய்தால், படிக்க நேரம் இருக்குமா ?

பொன் : முருகா, நன்றாகக் கேட்டாய் ! ஒரு வேலையும் செய்யாமல் சோம்பேறிகளாய் இருப்பவர்க்குத்தான் படிக்க நேரம் கிடைக்காது. எல்லா வேலைகளையும் முறைப்படி செய்பவரிடம் சோம்பல் இராது. அவர்கள் படிப்பதற்கு வேண்டும் நேரமும் இருக்கும். படிக்க எனக்கு நிறைய நேரம் கிடைக்கின்றது. நேரத்தை வீணாக்காமல் நான் படிக்கின்றேன். அதனால் வகுப்பில் முதல் மாணவனாக இருக்கின்றேன். நான் பள்ளிக்கூட வேலைகளைச் சரிவரச்செய்கிறேன். நான் ஒழுங்காக நடந்துகொள்கிறேன் என்பதற்காக எங்கள் ஆசிரியர் எனக்கு ஒரு புத்தகத்தைப் பரிசாகத் தந்தார். ஆ ! முருகா, அதோ பார். ஒரு குழந்தை கீழே வழுக்கி விழுந்துவிட்டது.

(பொன்னுசாமி ஓடிச்சென்று உதவுகிறான்)

முரு : பொன்னுசாமி, இக்குழந்தை எப்படி விழுந்தது ? பாவம், நொண்டி நொண்டி நடக்கின்றதே !

பொன் : முருகா, வாழைப்பழத்தோல் சறுக்கியே இக்குழந்தை விழுந்தது. இதோ பார் வாழைப்பழத்

தோல் கிடக்கின்றது. பழம் சாப்பிட்டவர் பழத் தோலை ஓரத்தில் போட்டிருந்தால் இக்குழந்தை விழுந் திருக்குமா? பழத்தோல், கண்ணுடித்துண்டு, லாடம் போன்றவைகளை நாம் வீதியில் எறியக்கூடாது; வீதி யில் கிடக்கக் கண்டால் அவற்றை எடுத்து ஓரத்தில் உள்ள தொட்டியில் போடவேண்டும்.

முரு: நண்பா, இன்று நான் உன்னைப் பார்த்ததால் நல்ல பழக்க வழக்கங்களை அறிந்தேன். நானும் உன்னைப்போல நடக்க முயற்சி செய்வேன். வணக்கம்.

பொன்: நல்லது முருகா, எனக்கும் நேரமாயிற்று. போய்வருகிறேன். வணக்கம்.

| | | |
|---|---|---|
| பொன்னுசாமி | தண்ணீர் இறைத்தல் | இராது |
| எதிர்பார்ப்பது | சரிவர | சறுக்கி |
| நாள்தோறும் | புரியாத | முறைப்படி |

### அருஞ்சொற்பொருள்

எதிர்பார்ப்பது - (பிறர் உதவியை) விரும்புதல். சரிவர - நன்ருக. புரியாத - விளங்காத. இராது - இருக்காது. சறுக்கி - வழுக்கி.

### கேள்விகள்

1. பொன்னுசாமியின் பெற்ருேர் அவனிடம் அன்பாய் இருக்கக் காரணம் என்ன?
2. அவன் வீட்டில் யார் யார் என்னென்ன வேலைகளைச் செய்ய வேண்டும்?
3. அவன் தன்னுடைய தங்கை, தம்பிமார்க்கு என் னென்ன உதவிகள் செய்கிருன்?
4. யாருக்குப் படிக்க நேரம் கிடைக்காது?
5. பொன்னுசாமி பரிசாக எதனைப் பெற்ருன்? ஏன் பெற் ருன்?
6. வீதிகளில் எவற்றை நாம் போடக் கூடாது? ஏன்?

### பயிற்சி

1. நீ உன் பெற்ருேருக்கு உதவியாய்ச் செய்யும் வேலைகளை எழுதுக.

2. உன் பள்ளிக்கூடத்தைப்பற்றி ஊரிலிருந்து வந்த நண்பனும் நீயும் உரையாடுதல்போல் எழுதுக.

3. எதிர்ப் பால் கூறுக: தமக்கை, தம்பி, தாயார், மாணவி, பாட்டன், வேலைக்காரன்.

4. வேறுபாடு அறிக :—

| | |
|---|---|
| கரி | கறி |
| அரி | அறி |
| எரி | எறி |
| இரை | இறை |

## இலக்கணம்

### வேற்றுமை

முருகன் வந்தான், முருகனை (ஐ)க் கண்டேன், முருகனுல் (ஆல்) அறிந்தேன். இவ்விடத்தில் முருகன் என்ற பெயர்ச் சொல் பொருள் வேறுபட்டு வருகிறது. முருகன் என்ற பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்தியவை ஐ, ஆல் என்பவை. இவை வேற்றுமை உருபுகள் எனப்படும். பொருள் வேறுபட்ட பெயர்ச் சொல் (முருகன்) வேற்றுமை எனப்படும். இவ்வேற்றுமை எட்டு வகைப்படும்.


(உ - ம்.) முருகன் வந்தான்—முதல் வேற்றுமை

முருகனைக் கண்டேன்—ஐ இரண்டாம் வேற்றுமை உருபு.

முருகனுல் பாடம் எழுதப்பட்டது<br>
தாயோடு குழந்தை வந்தது<br>
அண்ணனுடன் தம்பி வந்தான்<br>
} ஆல், ஒடு, உடன் என்பன மூன்ரும் வேற்றுமை உருபுகள்.

குழந்தைக்குக் கொடு—கு நான்காம் வேற்றுமை உருபு.

சென்ற பாடத்தில் நான்காம் பத்தியில் உள்ள வேற்றுமை உருபுகளை எடுத்து எழுதுக.



## 12. இந்திய விஞ்ஞான அறிஞர்
### (சர் பிரபுல்ல சந்திர ராய்)

1. நம்முடைய அன்றாட வாழ்க்கையில் விஞ்ஞானம் மிகவும் பயன்பட்டு வருகிறது. வானவூர்தி, கம்பியில்லாத் தந்தி, வானொலி, நீராவி இயந்திரம் ஆகிய யாவும் விஞ்ஞானத்தின் விளைவேயாகும். பலவகை மருந்துகளைப் பற்றி மேனாட்டார் நடத்தும் ஆராய்ச்சி, தாவரங்களைப் பற்றிய ஆராய்ச்சி, ஒளிக்கிரணங்களைப்பற்றிய ஆராய்ச்சி முதலியனவும் விஞ்ஞான ஆராய்ச்சியைச் சேர்ந்தவையே யாகும். இந்த ஆராய்ச்சித் துறைகளில் நம் நாட்டவர் சிலரும் உலகப் புகழ் பெற்றவராவர்.

2. விஞ்ஞானத் துறையில் உலகப் புகழ்பெற்ற இந்தியருள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் மூவர். நமது

தமிழ் நாட்டில் சர். சி. வி. இராமன் என்பவர் ஒளிக் கதிர்களை ஆராய்ந்து புகழ் பெற்றவர். வங்க மாகாணத்தில் தாவர சாத்திர ஆராய்ச்சியில் உலகம் வியக்கும்படி பல அற்புதங்களைச் செய்து காட்டியவர் சர் ஜகதீசசந்திர போஸ் என்னும் பெரியாராவர். அதே மாகாணத்தைச் சேர்ந்தவர் சர் பிரபுல்ல சந்திர ராய் என்பவர். அப்பெரியார் இரசாயனக் கலையிலும், மருத்துவக் கலையிலும் சிறப்புப் பெற்றவர்; ஒரு பெரிய தொழிற்சாலையை அமைத்து நம் நாட்டிற்குத் தேவையான மருந்துகளை (மேனாட்டு மருந்து வகைகளைப் போலவே) தயாரிக்க முற்பட்டவராவர். அப் பெரியார் வரலாறு நமக்கு முன் மாதிரியாய் இருக்கத்தக்கது. ஆதலால் அதனை இங்கு அறிவது நல்லது.

3. பிரபுல்லர் 1861-ஆம் ஆண்டில் ஹரீஸ சந்திர ராய் என்பவரின் மகனாகப் பிறந்தார்; பிரபுல்லர் தம் தந்தையார் நடத்திய பள்ளியில் முதலில் படித்தார்; பின்னர்க் கல்கத்தாவில் உள்ள ஓர் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து படித்தார். அவர் கல்லூரியில் சேர்ந்து கல்லூரிப் படிப்பையும் முடித்தார். பிரபுல்லர் இங்கிலாந்து சென்று படிக்க ஆவல் கொண்டார்; அங்குச் சென்று படிக்க உபகாரச் சம்பளம் தரும் தேர்வு எழுதி வெற்றி பெற்றார். அதற்கு ஏற்றவாறு முயன்று பின்னர் இங்கிலாந்து சென்று அங்குள்ள எடின்பர்க் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார்; ஆறு ஆண்டுகள் தங்கி விஞ்ஞானக் கலையில் புலமை பெற்றார்.

4. பிரபுல்லர் 1889-இல் தாய் நாடு மீண்டார். அவர் வங்க மாகாணக் கல்லூரியில் இரசாயனப் பேராசிரியராக அமர்ந்தார்; மாணவர் ஏற்றுக்கொள்ளுமாறு கருத்துக்களைத் தெளிவாகக் கற்பித்து வந்தார். அவர் அப்பொழுது இருநூற்றைம்பது ரூபாய் மாதச் சம்பளம் பெற்று

வந்தார்; அந்தத் தொகையில் ஒரு சிறு பகுதியைச் சேர்த்து வைத்தார். பிரபுல்லர் தம்மிடத்தில் இருந்த சிறு தொகையைக் கொண்டு இரசாயனத் 'தொழிற்சாலை' ஒன்றை அமைத்தார்.

5. பிரபுல்லரின் ஊக்கத்தைக் கண்ட வங்க மக்கள் அவரைப் பெரிதும் பாராட்டினர்; அவருடன் பங்கு கொண்டு இரசாயனத் தொழிற்சாலையை வளர்க்க ஒன்று பட்டனர். அதனுல் இரசாயனத் தொழிற்சாலை வளர்ச்சி யுற்றது. அதுவரை இந்தியாவில் செய்யப்படாத பல புதிய மருந்துகளும் மருத்துவக் கருவிகளும் அத்தொழிற் சாலையிலேயே செய்யப்பட்டன. நாட்டுப் பற்றுடைய பல அறிஞரும் அவருடன் கலந்து அத்தொழிற்சாலையை மேல் நிலைக்குக் கொண்டுவர உழைத்தனர்.

6. பிரபுல்லர் தம் இடைவிடாத உழைப்பின் மூலம் பல புதிய இரசாயன முடிபுகளைக் கண்டுபிடித்தார்; பதினைந்து ஆண்டளவும் ஆராய்ந்து, 'இந்திய இரசாயனக் கலை வரலாறு' என்னும் அரிய நூலை வெளியிட்டார். அவர் தம் ஆராய்ச்சியைக் கண்ட மேனுட்டு அறிஞர்கள் அவரைப் பாராட்டினர்.

7. பிரபுல்லர் 1919-ஆம் ஆண்டில் 'சர்' என்னும் பட்டம் பெற்ருர். அவர் தற்பெருமையை விரும்பாதவர்; அடக்கத்தையும் எளிமையையும் கைக்கொண்டவர்; நாட்டுப் பற்று உடையவர்; இந்தியா மற்ற நாடுகளைப் போல் இரசாயனத் துறையில் முன்னேற வேண்டும் என்ற ஆவல் உடையவர். இன்று அவரது தொழிற்சாலை மிகப் பெரிய அளவில் வளர்ச்சி யடைந்திருக்கிறது.

| | |
|---|---|
| விஞ்ஞானம் | குறிப்பிடத்தக்கவர் |
| ஒளிக்கதிர்கள் | தாவர சாத்திரம் |
| அற்புதங்கள் | முன் மாதிரியாய் |
| உபகாரச் சம்பளம் | எடின்பர்க் பல்கலைக் கழகம் |
| வங்க மக்கள் | இரசாயன முடிபு |

## அருஞ்சொற்பொருள்

குறிப்பிடத்தக்கவர் - மதிக்கத்தக்கவர். தாவர சாத்திரம் - மரம், செடி, கொடிகளைப் பற்றிய நூல். உபகாரச் சம்பளம் - நன்ருய்ப் படிக்கும் மாணவர்க்கு உதவும் பணம்.

## கேள்விகள்

1. விஞ்ஞானத்தால் விளைந்த பொருள்கள் யாவை?
2. உலகப் புகழ்பெற்ற இந்திய விஞ்ஞானிகள் யாவர்?
3. அவர்கள் எந்த எந்தத் துறையில் சிறந்தவர்கள்?
4. பிரபுல்லர் இங்கிலாந்து சென்று படிக்கப் பணம் எவ்வாறு கிடைத்தது?
5. பிரபுல்லர் இரசாயனத் தொழிற்சாலை அமைக்க எவ்வாறு பொருள் பெற்ருர்?
6. அத்தொழிற்சாலை எவ்வகையில் சிறந்ததாகும்?
7. மேனுட்டார் பிரபுல்லரைப் போற்றக் காரணம் என்ன?
8. பிரபுல்லரின் குணங்கள் யாவை?

## பயிற்சி

1. ஒளிக்கதிர், அற்புதங்கள், முன்மாதிரியாக, குறிப்பிடத்தக்கவர்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

2. சிறப்பு, புலமை, சிறுதொகை, தெளிவாக, ஒன்றுபட்டனர், விரும்புதல்—எதிர்ச் சொல் தருக.

3. வளர்ச்சியுற்றது, பேராசிரியர், பெரியவராவர்—பிரித்து எழுதுக.

## இலக்கணம்

### வேற்றுமை (தொடர்ச்சி)

I. 1. மாங்காயில் பெரியது தேங்காய்.
பொருளின் சிறந்தது கல்வி.
அண்ணன் ஊரினின்று வந்தார்.
பழம் மரத்திலிருந்து வீழ்ந்தது.

இல், இன், நின்று, இருந்து—என்பன ஐந்தாம் வேற்றுமை உருபுகளாம்.

2. எனது மொழி தமிழ்.
இவை என்னுடைய பந்துகள்.

அது, உடைய என்பன ஆறும் வேற்றுமை உருபுகளாம்.

3. பணம் பெட்டியில் இருக்கிறது.
அவனிடம் புத்தகங்கள் இருக்கின்றன.
தோட்டத்தின்கண் பசு இருக்கிறது.

இல், இடம், கண்—என்பன ஏழாம் வேற்றுமை உருபுகளாம்.

4. எட்டாம் வேற்றுமைக்குத் தனி உருபு இல்லை. படர்க்கைப் பெயரை முன்னிலையாக்கி அழைப்பதே எட்டாம் வேற்றுமையாம். இது விளி வேற்றுமை (விளித்தல் - அழைத்தல்) எனவும் பெயர் பெறும்.

(உ - ம்.) முருகன் — முருகா
அம்மை — அம்மா
அரசர் — அரசரே
பிள்ளை — பிள்ளாய்

II. 1. இப்பாடத்தில் வந்துள்ள வேற்றுமைகளை எடுத்து எழுதுக.

2. கோடிட்ட இடங்களில் தகுந்த வேற்றுமை உருபுகளை அமைக்க :—

(1) அரசன் பகைவர் + — வென்றான்.
(2) நாற்காலி தச்சன் + — செய்யப்பட்டது.
(3) கோவலன் + — மனைவி கண்ணகி.
(4) வீடு + — வந்தான்.

3. கீழ்வரும் பெயர்களை விளி வேற்றுமை ஆக்குக :
தம்பி, பறவை, தந்தை, பசுக்கள்.




# 13. தொழிலரசர்—டாடா

1. இந்தியாவில் உள்நாட்டுத் தொழிலை வளர்த்து, இந்திய மக்களின் செல்வத்தைப் பெருக்க முயன்றவர் பலர். அவர்களில் அரசர் என மதிக்கத்தக்க நிலையுடையவர் ஜாம்ஷெட்ஜி டாடா என்பவர். ஜாம்ஜெட்ஜியின் தந்தை பெயர் நஸர்வாஞ்சி டாடா என்பதாகும். நேரு குடும்பத்தினர், காந்தி குடும்பத்தினர் என்பன போன்று 'டாடா' என்பதும் குடும்பப் பெயராகும். ஜாம்ஷெட்ஜி பம்பாயில் உள்ள நவ்சாரியில் 1839-ஆம் ஆண்டில் பிறந்தார்.

2. ஜாம்ஷெட்ஜி பதின்மூன்று வயது வரை நவ்சாரியில் கற்றுவந்தார்; பின்பு பம்பாயில் இருந்த 'எல்பின்ஸ்டன்' கல்லூரியில் கல்வி கற்றார். அவர் கல்லூரிப் படிப்பு முடிந்ததும் தம் தந்தைக்கு உதவியாய் வாணிகத் துறையில் ஈடுபட்டார். நுண்ணறிவுடைய ஜாம்ஷெட்ஜி வாணிகத் தொடர்பான விவரங்களையும், விலைவேற்றுமைகளையும் அறிந்து கொண்டார்; பணமாற்று முறைகளையும் அறிந்து கொண்டார்.

3. ஜாம்ஷெட்ஜியின் தந்தையார் சீன நாட்டுடன் வாணிகம் செய்து வந்தார். அவர் இந்தியாவிலிருந்து அனுப்பும் பொருள்களைச் சீன நாட்டில் விற்பனை செய்ய அங்கு ஒரு கிளைக்கடை இருந்தது. ஜாம்ஷெட்ஜி சீனத்தில் நடக்கும் வாணிகத்தைக் கவனிக்கச் சென்றார்; அங்கு இருந்த காலத்தில் கீழ் நாட்டு வாணிக முறைகளை நன்கு அறிந்துகொண்டார்.

4. அந்நாளில் இங்கிலாந்து இந்தியாவிலிருந்து பருத்தியை வாங்கிச் சென்றது; வாங்கிச்சென்ற பருத்தியைத் துணியாக்கி, அதனையே இந்தியாவிற்கு அனுப்பி நிறைந்த ஊதியம் பெற்றது. வெண்ணெயை விற்று நெய்க்கு அலைவது போல், இந்தியா தன்னிடமுள்ள பருத்தியை இங்கிலாந்துக்கு விற்று ஆடைகளுக்கு அவர்களை எதிர்பார்த்து நின்றது. அந்நிலையைக் கண்ட ஜாம்ஷெட்ஜி மனம் வருந்தினர்; அந்நிலையைத் தீர்க்க உறுதி கொண்டார்.

5. ஜாம்ஷெட்ஜி, ஆலை நெசவுத் தொழிலின் நுணுக்கங்களை அறிந்து வர இங்கிலாந்து சென்றார்; அவற்றை அறிந்து இந்தியா மீண்டார். அவர் நாகபுரியில் நெசவு ஆலையை உண்டாக்கினர். நெசவு ஆலை உண்டாக்க அவர் முயன்றபோது அவருக்குப் பல இடையூறுகள் வந்தன. எனினும் அவற்றைக் கண்டு அவர் மனம் கலங்கவில்லை. தம் கருமமே கண்ணுயிருந்த அவர் இன்னும் பல ஆலைகளைத் தோற்றுவித்தார்; அவற்றின் மூலம் இலட்சக் கணக்கில் பணம் பெற்றார்.

6. அவர் ஆலைத் தொழிலின் மூலம் பெற்ற பொருளை நாட்டுக்கு உதவும் நல்ல வழியிற் செலவு செய்ய எண்ணினர். எனவே, அவர் பெர்ஜோர்ஜி பாஷா என்னும் அறிஞரை அயல் நாடுகளுக்கு அனுப்பி அறிவியல் (விஞ்ஞானம்) துறையை ஆராய்ந்து வரச்

செய்தார். பல்கலைக்கழகத்தில் படித்துத் தேர்வு பெற்ற மாணவர் ஆராய்ச்சி செய்வதற்காக 'ஆராய்ச்சிக் கழகம்' ஒன்றை ஜாம்ஷெட்ஜி அமைத்தார்; அக்கழகத்திற்கு முப்பது இலட்சம் ரூபாய் மதிப்புடைய தம் பொருளை அளித்தார். அக்கழகத்தால் எதிர் காலத் தொழில் உலகம் மேன்மை யடைந்தது.

7. இந்தியாவில் இரும்பு உருக்கும் தொழிற்சாலை உண்டாக்க வேண்டும் என்பது ஜாம்ஷெட்ஜி டாடாவின் பெருவிருப்பம். அவர் ஜெர்மனி நாட்டுக்குச் சென்றார்; ஜெர்மானியர் செய்யும் இரும்பு உருக்குத் தொழில் முறையைக் கண்டார்; அவர்கள் பயன்படுத்தும் புதிய பொறிகளையும் அறிந்து இந்தியா மீண்டார்; இந்தியாவில் அத்தகைய தொழில்களைத் தொடங்க முயற்சி செய்தார். இவ்வாறே மின்சாரத்தைப் பெருக்கித் தொழில் துறையில் பயன்படுத்த வேண்டும் என அவர் எண்ணினார்; அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டார். அம்முயற்சிகள் யாவும் அவர் மகன் தோரப்ஜியால் முடிவுற்றன.

8. இந்திய நாட்டுத் தொழில்கள் யாவும் தோன்றுவதற்கு இன்றியமையாத காரியங்களை ஜாம்ஷெட்ஜியே செய்து முடித்தார். ஆதலால் அவரைத் தொழில் அரசர் என்று நம் நாடு போற்றுகின்றது.

| | |
|---|---|
| உள்நாட்டுத் தொழில் | தொழில் நுணுக்கம் |
| நிலையுடையவர் | நாகபுரி |
| ஜாம்ஷெட்ஜி டாடா | இடையூறுகள் |
| நஸர்வாஞ்சி டாடா | கருமமே கண்ணுகை |
| குடும்பப் பெயர் | தோற்றுவித்தார் |
| பம்பாய் | பெர்ஜோர்ஜி பாஷா |
| நவ்சாரி | அறிவியல் |
| எல்பின்ஸ்டன் கல்லூரி | பல்கலைக் கழகம் |

| | |
|---|---|
| ஈடுபட்டார் | ஆராய்ச்சிக் கழகம் |
| விலை வேற்றுமை | தொழில் உலகம் |
| சீன நாடு | உருக்குத் தொழிற்சாலை |
| கிளைக்கடை | பொறிகள் |
| கீழ்நாடு | தோரப்ஜி |

## அருஞ்சொற்பொருள்

நிலையுடையவர் - தன்மையை உடையவர். வாணிகத் தொடர்பான - வியாபார சம்பந்தமான. தொழில் நுணுக்கம் - தொழில் செய்யும் சிறந்த முறை. இடையூறு - துன்பம். பொறிகள் - இயந்திரங்கள்.

## கேள்விகள்

1. டாடா குடும்பம்—விளக்குக.
2. ஜாம்ஷெட்ஜி இளமையில் பெற்ற வாணிக அறிவு யாது?
3. ஜாம்ஷெட்ஜி டாடா, இந்தியா தொழில் வளமுடைய நாடாவதற்குச் செய்தவை யாவை?
4. டாடா ஆலை நெசவுத் தொழிலை எவ்வாறு உண்டாக்கினர்?
5. அவர் தாம் பெற்ற பொருளை எவ்வெவ்வகையில் பயன்படுத்தினர்?
6. அவர் இந்தியாவில் எத்தகைய தொழில்களைத் தொடங்க எண்ணம் கொண்டார்?
7. டாடா ‘ஒரு தொழிலரசர்’ என்பது எவ்வாறு பொருந்தும்?

## பயிற்சி

1. உள்நாட்டுத் தொழில், ஈடுபட்டார், வாணிகத் தொடர்பான, தொழில் நுணுக்கம், தோற்றுவித்தார், தொழில் உலகம்—இவற்றை உம் வாக்கியத்தில் அமைத்து எழுதுக.
2. ‘வெண்ணெயை விற்று நெய்க்கு அலைவது போல’—சந்தர்ப்பம் கூறுக.

3. எதிர்ச் சொல் கூறுக :—

உள் நாடு, மதிப்பு, பிறந்தார், கீழ்நாடு, எதிர்காலம், தொடங்கினர், அறிஞர்.

4. மூன்றும் பத்தியில் உள்ள வேற்றுமைகளை எடுத்து எழுதுக.

5. ஐந்தாம் பத்தியில் உள்ள ஒருமை, பன்மைகளை எடுத்து எழுதுக.

6. பருத்தி — இச்சொல்லுடன் வேற்றுமையுருபுகளைச் சேர்த்து எழுதுக.

## இலக்கணம்

## வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம்

பறவை பறந்தது, பறவை பறந்து—இவற்றுள் 'பறந்தது, பறந்து' என்பன (தொழிலை) வினையைக் குறிக்கும் சொற்கள். இவற்றுள் பறந்தது என்னும் சொல்லே கருத்து முடிந்த சொல். அதனால் அச்சொல் வினைமுற்று எனப் பெயர் பெறும்.

(உ - ம்.) வந்தது, வடித்தனர், எழுதுகிருன்.

'பறந்து' என்பதைப் போன்ற சொற்கள் கருத்து முற்றுப் பெருத சொற்கள். ஆதலின் அவை எச்சம் (குறைவுடையது) எனப் பெயர் பெறும். எச்சம் பெயரைக் கொண்டு முடிவு பெறுமாயின் பெயர் எச்சம் எனவும், வினையைக் கொண்டு முடிவு பெறுமாயின் வினை யெச்சம் எனவும் பெயர் பெறும்.

(உ - ம்.) மலர்ந்த மலர்—பெயர் எச்சம்.

பார்த்துப் படித்தான்—வினை எச்சம்.

மலர்ந்த, பார்த்து என்பன வினைச் சொற்களே. ஆனல் அவை கொண்டு முடியும் சொற்களைக் கொண்டு வேறுபாடு பெறுகின்றன.


1. முதல் பத்தியில் உள்ள பெயரெச்சங்களையும், வினையெச்சங்களையும் எடுத்து எழுதுக.

2. இரண்டாம் பத்தியில் உள்ள பெயர், வினைச் சொற்களை எடுத்தெழுதுக.

# 14. என் வரலாறு


## (நிலக்கரியின் சுயசரிதை)

1. பிள்ளைகளே, என் பெயர் நிலக்கரி. என் வரலாறு உங்கட்குத் தெரியுமா ? சொல்கிறேன், கேளுங்கள். ஒரு காலத்தில் உலகில் பெரும்பாகம் காடாக இருந்தது. மரங்கள் புயற் காற்ருல் வீழ்ந்து தரையில் புதைந்தன. புதைந்த மரங்கள் அழுந்தி நிலக்கரியாக மாறின.



ஆகவே நான், பல நூறு வருடங்களுக்கு முன் மரமாக இருந்தேன் ; பின் மண்ணிற்குள் புதைந்து நாளடைவில் கரியாக மாறினேன். இதுதான் நான் பிறந்த கதை.

2. முதன் முதலாக, மேல்நாட்டு மக்களே என்னைப் பூமியிலிருந்து வெளியே கொண்டு வந்தனர். அவர்கள் என்னைக் குளிர் காய்வதற்கு உபயோகித்தனர். பின்னர், குடியானவர், கன்னர், கொல்லர் முதலான தொழிலாளிகள் தங்கள் தொழிலுக்கு என்னை உபயோகித்தனர். சிறிது காலத்திற்குள் மக்கள் என் உபயோகத்தை நன்கு அறிந்தனர் ; ஆதலால் என்னைப் பூமியினின்று அதிகமாக எடுக்கும் வழியைக் காண முயற்சி செய்தனர்.



3. பிள்ளைகளே, நான் பூமியினின்று வெளியே வந்த செய்தி உங்கட்கு வியப்பை உண்டாக்கும். முதன் முதலாக மனிதர்கள் கோடரியால் என்னை வெட்டி எடுத்தனர்.

எடுத்த என்னைக் குதிரை, கழுதை, முதலியவற்றின் உதவி



கொண்டு வெளியே கொண்டு வந்தனர். நான் பிறகு எளிமையாக வெளியே வர மின்சாரமும் நீராவியும் உதவி புரிந்தன.

4. என்னுடைய உயிர் போன்ற நண்பன் இரும்பு ஆகும். நாங்கள் இருவரும் ஒன்று சேர்ந்தால்தான், உலகில் எல்லா இயந்திரங்களும் வேலை செய்யும். என்னைக் கொண்டு என் நண்பனாகிய இரும்பை உருக்கி இயந்திரங்கள் செய்யமுடியும். அவ்வாறே இயந்திரங்களை இயக்கவும் முடியும். நாங்கள் தனித்தனியே இருந்துவிட்டால் உலகில் இயந்திர வேலையே நடைபெறாது. கப்பல், புகை வண்டி முதலிய நீராவி இயந்திரங்களும் துப்பாக்கி, பீரங்கி முதலியவைகளும் என் உதவியைக் கொண்டே வேலை செய்கின்றன. சுருக்கமாகச் சொன்னால் ஒரு நாட்டின் சிறந்த நிலை என்னைப் பொறுத்ததே.

5. நான் இருக்கும் சுரங்கத்தில் வேலை செய்யும் மக்கள் முதலில் காற்றும் வெளிச்சமும் இல்லாமல் வருந்தினர். இப்பொழுது அக்குறைகள் நீக்கப்பட்டன. அங்கு வேலை செய்ய வரும் மக்களுக்கு ஆபத்து அதிகம். அதனால் அவர்களுக்கு அதிகச் சலுகைகள் தரப்பட்டன.

6. உலகிற்கு இவ்வளவு பயன்படும் நான் எப்பொழுதும் கிடைக்கமாட்டேன். மக்கள் என்னை அளவாகச் செலவு செய்ய வேண்டும். சிக்கனமாகச் செலவு செய்யாவிடின் என்னால் அடையும் நன்மையைப் பெற முடியாது. பிறகு மக்கள் இன்பமாக வாழ முடியாது.

7. பிள்ளைகளே, நீங்களும் என்னைப் போல மற்றவர்க்கு உதவியாக இருந்து வாழுங்கள். எனக்கு அதிக

நேரமாயிற்று. பிறகு பார்க்கும்போது மற்றவற்றைச் சொல்வேன், போய் வாருங்கள்.

| | | |
|---|---|---|
| நிலக்கரி | உபயோகம் | பீரங்கி |
| பெரும்பாகம் | கோடரி | என்னைப் பொறுத்தது |
| புயற்காற்றுல் | இயக்க முடியும் | சுரங்கம் |
| புதைந்தன | துப்பாக்கி | சலுகைகள் |

## அருஞ்சொற்பொருள்

புயல்+காற்று - பெருங் காற்று. இயக்க முடியும் - நடத்த முடியும். என்னைப் பொறுத்தது - என்னைச் சேர்ந்ததாகும். சலுகைகள் - அதிக நன்மைகள். அளவாக - சிக்கனமாக.

## கேள்விகள்

1. நிலக்கரி எப்படி உண்டாகிறது ?
2. அது முதன் முதலில் எவ்வாறு உபயோகப்பட்டது ?
3. நிலக்கரியை எடுக்க முதலில் கையாண்ட முறை யாது ? இப்பொழுது கையாளப்படும் முறை யாது ?
4. நிலக்கரியால் உண்டான பயன்கள் யாவை ?
5. சுரங்கத் தொழிலாளர்க்கு இருந்த துன்பங்கள் யாவை? அவை எவ்வாறு நீக்கப்பட்டன ?
6. நாம் நிலக்கரியால் பெறும் பயனை எப்பொழுதும் பெற என்ன செய்ய வேண்டும் ?

## பயிற்சி

1. நிலக்கரியின் வரலாற்றை அதன் நண்பன் இரும்பு சொல்லுவதுபோல் கூறுக.
2. இதன் வரலாற்றை ஒரு தொழிலாளி கூறுவதுபோல் எழுதுக.
3. இப்பாடத்தில் வரும் பத்திகளுக்கு ஏற்ற தலைப்புக் கொடுக்க.
4. முதல் பத்தியில் உள்ள வாக்கியங்களுக்கு எ. ப. செ. கூறுக.

## இலக்கணம்

### மூன்று காலங்கள்

காலம் தொழில் செய்யும் நேரம்.

(1) எழுதினான், (2) எழுதுகிறான், (3) எழுதுவான்—இவ் வினைச் சொற்களில் உள்ள தொழில் எழுதுதல் என்பது. (1) 'எழுதினான்' என்பதில் உள்ள எழுதுதல் என்னும் தொழில் முன்பே நடைபெற்றது. (2) 'எழுதுகிறான்' என்பதில் உள்ள எழுதுதல் என்னும் தொழில் இப்பொழுது நடைபெறுகின்றது. (3) 'எழுதுவான்' என்பதில் உள்ள எழுதுதல் என்னும் தொழில் இனி நடக்கப்போகிறது. ஆதலால் இவை முறையே (1) இறந்த காலம் (தொழில் நடந்த காலம்), (2) நிகழ்காலம் (தொழில் நடை பெறுகின்ற காலம்), (3) எதிர் காலம் (தொழில் நடக்கும் காலம்) என மூன்று வகைப்படும்.

குறிப்பு :—வினைச் சொற்களே காலத்தைக் காட்டும்; பெயர்ச் சொற்கள் காலத்தைக் காட்டா.

கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள வினைச் சொற்கள் இன்ன காலச் சொற்கள் என எடுத்து எழுதுக :

(1) நான் கரியாக மாறினேன்.
(2) புதைந்த மரங்கள் நிலக்கரியாக மாறுகின்றன.
(3) நீங்கள் என்னைப்போல உதவி செய்து வாழ்வீர்கள்.
(4) கண்ணன் பாட்டைப் படித்தான்.
(5) காந்தம் பாடம் படிக்கிறாள்.
(6) வரதன் வடையை வாங்குகிறான்.
(7) கோமளம் கோலம் போடுவாள்.
(8) நான் நீந்தி விளையாடுவேன்.
(9) தம்பி ஊஞ்சலை ஆட்டுகிறான்.
(10) தங்கை மேசையைத் துடைத்தாள்.

# 15. புத்தரும் இடைச்சிறுவனும்

[புத்தர் புறப்பட்டார்; நெடுந்தூரம் நடந்தார். களைப்பு உண்டாயிற்று. அவர் கீழே படுத்தார்; பின்பு, களைப்பு நீங்கிப் பக்கத்தில் உள்ள இடைச்சிறுவனைக் கண்டார்.]

### புத்தர் பால் கேட்டல்

1. நிலத்திற் கிடந்தஐயன்—மெல்ல
நிமிர்ந்து தலைதூக்கிக்
" கலத்தினி லேகொஞ்சம்—பாலைக்
கறந்து தருவாய் " என்றான்.

### சிறுவன் மறுத்தல்

2. " ஐயையோ ! ஆகா " தென்றான்—சிறுவன்
" அண்ணலே, யானும்உன்னைக்
கையினால் தீண்டவொண்ணு—இடையன்ஓர்
காட்டு மனிதன் " என்றான்.

### புத்தர் அறிவுரை

3. " ஓடும் உதிரத்தில்—வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும்—சாதி
தெரிவதுண்டோ அப்பா.

4. பிறப்பி னால்எவர்க்கும்—உலகில்
பெருமை வாராதப்பா ;
சிறப்பு வேண்டுமெனில்—நல்ல
செய்கை வேண்டுமப்பா.

5. நன்மை செய்பவரே—உலகம்
நாடும் மேற்குலத்தார் ;
தின்மை செய்பவரே—அண்டித்
தீண்ட ஒண்ணுதார்."

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

| | | |
|---|---|---|
| ஐயன் | அண்ணலே | தின்மை |
| கலம் | தீண்டவொண்ணு | அண்டி |
| கறந்து | உதிரம் | ஒண்ணுதார். |

## அருஞ்சொற்பொருள்

ஐயன் - பெருமையுடையவன். கலம் - பாத்திரம். அண்ணலே - பெருமையுடையவரே. ஒண்ணு - கூடாத. உதிரம் - இரத்தம். தின்மை - தீமை. அண்டி - நெருங்கி.

## கேள்விகள்

1. புத்தர் இடையனை என்ன கேட்டார் ?
2. இடையன் என்ன கூறினுன் ?
3. எதனுல் ஒருவருக்குப் பெருமை வராது ?
4. சிறப்புப் பெற ஒருவர் என்ன செய்யவேண்டும் ?
5. மேற் குலத்தார் யார் ?
6. தீண்டத்தகாதவர் யார் ?

## பயிற்சி

1. 'புத்தரும் இடைச்சிறுவனும்'—என்பது பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

2. 'புத்தர் அறிவுரை' என்பது பற்றிப் பத்து வரிகள் எழுதுக.

3. இவற்றைப் படிக்க :—ஐயன் × ஐயை ; இடையன் × இடைச்சி.

4. பிரித்து எழுதுக :—கண்ணீர், வாராதப்பா, மேற்குலம், ஆசாதென்றுன்.

5. கீழ்வரும் வினைச்சொற்கள் இன்ன இன்ன காலத்தவை என எழுதுக :—தூக்கி, கிடந்த, தருவாய், வடிந்து, தீண்ட.

## இலக்கணம்

### சொல் இலக்கணம் கூறுதல்

அரசன் அறிவுரை கூறினான்.

1. அரசன்—பெயர்ச்சொல், உயர்திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கை இடம், முதல் வேற்றுமை, 'கூறினான்' என்னும் பயனிலைக்கு எழுவாய்.

2. அறிவுரை—பெயர்ச்சொல், அஃறிணை, ஒன்றன்பால், ஒருமை எண், படர்க்கை இடம், இரண்டாம் வேற்றுமை, 'கூறினான்' என்னும் பயனிலைக்குச் செயப்படுபொருள்.

3. கூறினான்—வினைச்சொல் (வினைமுற்று) உயர்திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கை இடம், இறந்தகாலம், 'அரசன்' என்னும் எழுவாய்க்குப் பயனிலை.

பெயர்ச்சொல்—திணை, பால், எண், இடம், வேற்றுமை என்னும் ஐந்தையும் உணர்த்தும். வினைச்சொல்—திணை, பால், எண், இடம், காலம் என்னும் ஐந்தையும் உணர்த்தும்.

பெயர்ச்சொல்லுக்குக் காலம் இல்லை. வினைச்சொல் உருபு ஏற்காது.

இடையன் பாலைக் கறந்தான்—சொல் இலக்கணம் கூறுக.

### புணர்ச்சி

சொற்கள் ஒன்றோடு ஒன்று சேர்வது புணர்ச்சி எனப் படும்.

**கண்ணன்**+**வந்தான்**—இவற்றுள் முன் நிற்கும் **கண்ணன்** என்னும் சொல் நிலைமொழி. அதன் பின் வந்து சேரும் **வந்தான்** என்னும் சொல் வருமொழி.

அந்த, இந்த, எந்த, அங்கு, இங்கு, எங்கு, அப்படி, இப்படி, எப்படி என்னும் நிலைமொழிகளுடன் க, ச, த, ப, எழுத்துக்களை முதலில் உடைய மொழிகள் சேரும்போது அவை மிகும்.

(உ - ம்.) அந்த + கதவு = அந்தக் கதவு
எங்கு + சென்றான் = எங்குச் சென்றான்
எப்படி + கற்றாய் = எப்படிக் கற்றாய்.

## 16. நாட்டாண்மைக் கழகம்

1. நீங்கள் முன் வகுப்புக்களில் கிராம ஆட்சி, ஊராண்மைக் கழகம் என்பவைபற்றிப் படித்தீர்கள். இங்கு நாட்டாண்மைக் கழகம் என்பதுபற்றிப் படிப்பீர் கள். கிராமம் பல சேர்ந்து ஊராகும். ஊர் (தாலுகா) பல சேர்ந்து நாடு (மாவட்டம்) ஆகும். முன்பு நீங்கள் படித்த ஆட்சிக் கழகங்களின் வளர்ச்சியே நாட்டாண் மைக் கழகமாகும்.

2. நாட்டாண்மைக் கழகத்தின் உறுப்பினர்கள் மாவட்டத்தில் வசிக்கும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். இங்குள்ள மக்களின் தொகைக்கு ஏற்றவண்ணம் இருபத்து நான்கு முதல் ஐம்பத்திரண்டு உறுப்பினர்கள் வரை இருப்பார்கள். தாழ்த்தப்பட்டோர், பெண்கள் முதலியவர் சார்பில் அரசாங்கத்தால் சில இடங்கள் ஒதுக் கப்படும். அந்த அந்தத் தொகுதியில் அந்த அந்த இன மக்களே உறுப்பினராவர்.

3. பொது மக்களால் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப் படுவர் என முன்னர் அறிந்தீர்கள் அல்லவா? அந்த உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒரு தலைவரையும், துணைத் தலைவரையும் தேர்ந்தெடுப்பர். தலைவர், உறுப்பினரில் பெரும்பாலோர் கருத்துப்படியே நாட்டாண்மைக் கழ கத்தை நடத்துவார். தலைவர் இல்லாத சமயத்தில் துணைத்தலைவர் கழகச் செயல்களை நடத்துவார். தலைவர், துணைத்தலைவர், உறுப்பினர் ஆகிய அனைவரும் சம்பளம் இல்லாமலே தம் கடமையைச் செய்யக் கட்டுப்பட்டவர்க ளாவர். அவர்களின் பதவிக்காலம் மூன்று ஆண்டு களாகும்.

4. உறுப்பினர்க்கு உரிய கடமைகள் பல இருக் கின்றன: நாட்டாண்மைக் கழகத்தைச் சார்ந்த அலுவ

லகங்கள் தங்கள் கடமைகளைக் செய்யத் தவறினால் அவற்றை உறுப்பினர்கள் தலைவர்க்கு அறிவிக்க வேண்டும். நாட்டின் எப்பகுதியிலேனும் குறைகள் இருப்பின் அவற்றைத் தலைவர்க்கு அறிவிப்பது உறுப்பினர் கடமையாகும். அக்குறைகளைப் போக்குவதற்கான வழிகளைக் கூறுவதும் அவர்கள் வேலையாகும். மேலும் கழகக் கூட்டங்களில் தங்கள் கருத்தைச் சொல்லவும் சட்ட திட்டங்களுக்கு உள்ளடங்கித் தலைவரைக் கேள்வி கேட்கவும் உறுப்பினர்க்கு உரிமையுண்டு.

5. நாட்டாண்மைக் கழகத்தில் பல உட்கழகங்கள் உண்டு. கல்வி, கிராம முன்னேற்றம், சுகாதாரம், மராமத்து (நிலங்களைச் செப்பனிடுதல்), போக்கு-வரவு ஆகிய நான்கு துறைகளைப்பற்றிக் கவனிக்க நான்கு குழுக்கள் உண்டு. இக்குழுக்கள் நாட்டாண்மைக் கழகத் தலைவரின் துணையைக்கொண்டு தங்கள் வேலைகளைச் செய்யும்.

6. நாட்டாண்மைக் கழகத்திற்கு மேல் கண்டவற்றைச் செய்யப் பணம் வேண்டும் அல்லவா ? அக்கழகம் அரசாங்கத்தினிடம் பண உதவி பெறுகின்றது. அரசாங்கம் குடிகளிடமிருந்து நிலவரி பெறுகின்றது. அத்தொகையில் ஒரு குறிப்பிட்ட தொகையையே அது நாட்டாண்மைக் கழகத்திற்கு அளிக்கின்றது. நாட்டாண்மைக் கழகம் அப்பணத்தை மட்டும் வைத்துக் கொண்டு எந்தக் காரியத்தைச் செய்யமுடியும்? ஆதலால் அக்கழகம் உத்தியோக வரி, யாத்திரிகர் வரி முதலிய வரிகளை விதித்து மேலும் பொருள் பெறுகின்றது. இவற்றைக்கொண்டே நாட்டாண்மைக்கழகம் தன் கடமையைச் செய்துவருகின்றது.

7. நாட்டாண்மைக் கழகம் தன் கடமையைச் செய்யும்போது அரசியலின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டே செய்யும். நாட்டாண்மைக் கழகத் தலைவர்

கழகத்தின் வரவுசெலவுக் கணக்குகளை ஒழுங்காக வைத்திருப்பார்; ஒவ்வோர் ஆண்டின் கடைசியிலும் கணக்குக் களையும் ஆண்டறிக்கையையும் கழகத்தவரிடம் கொடுப் பார்; அவர்கள் சம்மதத்தைப் பெற்றபின் அந்த ஆண்டறிக்கையை அரசியலார்க்கு அனுப்புவார்.

| | |
|---|---|
| தாழ்த்தப்பட்டோர் | மராமத்து |
| கட்டுப்பட்டவர் | உத்தியோக வரி |
| பதவிக் காலம் | யாத்திரிகர் வரி |
| அலுவலகங்கள் | |

## அருஞ்சொற்பொருள்

அலுவலகம் - வேலைசெய்யுமிடம். கட்டுப்பட்டவர் - சம்மதப்பட்டவர். பதவிக்காலம் - ஆட்சியில் இருக்கும் காலம்.

## கேள்விகள்

1. 'நாட்டாண்மைக் கழகம்' என்பது யாது?
2. நாட்டாண்மைக் கழகத்தின் அமைப்பு யாது?
3. உறுப்பினரின் கடமை யாது?
4. நாட்டாண்மைக் கழகத்தின் உட்கழகங்களையும் அவற்றின் வேலைகளையும் எழுதுக.
5. கழகச் சபைக்கு எவ்வகையில் பொருள் வருகின்றது?
6. அரசியலார்க்கும் நாட்டாண்மைக் கழகத்தாருக்கும் உள்ள சம்பந்தம் யாது?

## பயிற்சி

1. நாட்டாண்மைக் கழகத்திற்கும் இதற்கு முன்னர் நீங்கள் படித்த கழகங்களுக்கும் உள்ள வேற்றுமையை எழுதுக.
2. பிரித்து எழுதுக:—
   பதவிக்காலம், துணைத்தலைவர், ஆண்டறிக்கை.

3. இவற்றைப் படிக்க :—

சட்டதிட்டம், உயர்வு தாழ்வு, வரவு செலவு—இவை போன்ற சொற்றொடர்களை எடுத்துக் குறித்து வைக்க.

4. இரண்டாம் பத்தியில் உள்ள அறுவகைப் பெயர்ச் சொற்களையும் எடுத்து எழுதுக.

## இலக்கணம்

### புணர்ச்சி (தொடர்ச்சி)

இரண்டாம் வேற்றுமை உருபாகிய 'ஐ' என்பதையும் நான்காம் வேற்றுமை உருபாகிய 'கு' என்பதையும் இறுதியில் பெற்ற நிலை மொழிகளுடன் க, ச, த, ப என்னும் எழுத்துக்களை முதலிலே உடைய வருமொழி வந்து புணரும்போது அவை மிகும்.

(உ - ம்.) (1) மலரை + கொய்தாள் = மலரைக் கொய்தாள்
நல்லவனை + சேர் = நல்லவனைச் சேர்
பூவை + பறித்தாள் = பூவைப் பறித்தாள்
பழங்களை + தா = பழங்களைத் தா

(2) தம்பிக்கு + கொடு = தம்பிக்குக் கொடு
படித்தவனுக்கு + புகழ் = படித்தவனுக்குப்புகழ்
வேலனுக்கு + தந்தை = வேலனுக்குத் தந்தை
வந்தவனுக்கு + சுண்டல் = வந்தவனுக்குச் சுண்டல்

1. கீழ் வருவனவற்றிற்கு மற்றோர் எண் எழுதுக :—

பிள்ளை, அரசன், மரங்கள், பலகை, தமக்கை, நண்பர், நாடு, குளங்கள், ஊர், பலா.

2. ஆசிரியர் எங்களுக்கு பரிசு தந்தார். நாங்கள் நல்லவர்களுக்கு துணை இருப்போம்—இவ்வாக்கியங்களில் எழுத்து மிக வேண்டிய இடத்தை அறிந்து திருத்துக.

# 17. பாரி மகளிர்

1. பாரி வள்ளல்களிற் சிறந்தவர். இவர் பறம்பு மலையைத் தலைநகராகக்கொண்டு, அதனைச் சேர்ந்த முந்நூறு ஊர்களை ஆண்டு வந்தார். பாரி தம்மை வந்து கேட்டவர்க்கு எந்தப் பொருளையும் எந்த நேரத்திலும் கொடுத்துவந்தார் ; முந்நூறு ஊர்களையும் தம்மைப் பாடி வந்த புலவர்க்கே கொடுத்தார். அதனால் பாரியின் புகழ் எங்கும் பரவிற்று.

2. பாரிக்கு இரு பெண்கள் இருந்தனர். அவர்கள் பெயர் அங்கவை, சங்கவை என்பனவாம். பாரியின் உயிர் போன்ற நண்பர் கபிலர். கபிலர் பெரும் புலமை பெற்றவர். பாரி தம் இரு பெண்களையும் அவரிடமே கல்வி கற்கச் செய்திருந்தார். அப்பெண்கள் கல்வியில் ஊக்கம் செலுத்தினர். அவர்கள் அறிவு வளர்பிறைபோல் வளர்ந்தது. சில ஆண்டுகளில் அப்பெண்கள் பாடல் இயற்றும் புலமை பெற்றனர். அவர்களின் அறிவு வளர்ச்சியைக் கண்ட பாரி வள்ளல் மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

3. பாரி வள்ளலின் புகழ் நாடெங்கும் பரவியது என முன்னர்ப் படித்தோம் அல்லவா? பாரியின் புகழ் உயர்வதை மூவேந்தர்கள் கண்டு பொறாமை கொண்டனர் ; பாரியை வஞ்சனையால் கொல்லச் சூழ்ச்சி செய்தனர் ; முடிவாகப் பாரியைக் கொன்றுவிட்டனர். அங்கவை, சங்கவை ஆகிய இரு பெண்களையும் காக்கும் கடமை, பாரியின் நண்பராகிய கபிலரைச் சார்ந்தது. எனவே அவர் அவர்களை அழைத்துக்கொண்டு வெளியூர் செல்லத் தொடங்கினர்.

4. அவ்வாறு செல்லும் சமயம், ஒரு நாள் இரவு அவர்கள் ஒரு சிற்றூரில் தங்கினர். அப்பொழுது நிலா மிக அழகாகத் தன் ஒளியை வீசிக் கொண்டிருந்தது.

புலவர் கபிலர், 'குடை நிழலில் இருந்து குஞ்சரம் ஊர்ந்த' அப்பெண்கள் நடை மெலிந்து அவ்வூர் நண்ணியிருப்பதை எண்ணி எண்ணி மனம் புண்ணுனர். பெறுதற்கு அரிய நண்பனுன வள்ளல் பாரியை இழந்துவிட்டமையை எண்ணும் போதெல்லாம் அவர் மனம் அளவற்ற வேதனையை அடைந்தது.

5. பாரிமகளிர் நிலவு ஒளிவீசும் அந்த நேரத்தில் மற்ருெரு புறத்தில் இருந்தனர். அவர்கள் உள்ளத்தில் அவர்கள் தந்தையாருடன் இருந்து வாழ்ந்த பழைய நினைவுகள் ஒன்றன்பின் ஒன்ருக வந்தன. பாரிமகளிர், "சென்ற முழு நிலாக்காலத்து எங்கள் தந்தையார் உயிருடன் இருந்தார்; அவருடன் மலையின்கண் இருந்து முழு நிலாக் காலத்தை இன்பமாகக் கழித்தோம். இப்பொழுது எங்கள் தந்தையார் இறந்துவிட்டார்; எங்கள் மலையையும் பிறர் கவர்ந்துகொண்டார்," என்னும் பாடலை உணர்ச்சியுடன் பாடினர்.

6. அவர்களது பாடலைக் கேட்ட கபிலர் மனமுருகினர்; பெரும் புலமை பெற்ற அவர்கள் பாடிய பாக்கள் அவர்களது ஆசிரியரின் மனத்தையே உருக்கிவிட்டன அல்லவா? ஆகையால், பாரிமகளிர் சிறந்த புலவர்கள் என்பது நமக்குத் தெரிகின்றது. பிறகு பாரிமகளிர் இருவரையும் ஔவையார் கண்டார்; அவர்களைத் தக்க அரசர்க்கு மணம் செய்வித்தார். பாரிமகளிர் இன்பமாக நெடுங்காலம் வாழ்ந்தனர்.

7. மாணவர்களே, நம் முன்னேர் உத்தியோகத்திற்காகக் கல்வி கற்கவில்லை. அனைவரும் அறிவிற்காகவே கற்றனர். இக்காலத்துச் சிலர், 'நாம் பணக்காரர், நமக்குக் கல்வி வேண்டா' என்றிருக்கின்றனர். மேலும் பெண் மக்களைப் படிக்கவைக்க அவர்கள் விரும்புவதில்லை. பாரி மகளிர் அரச குடும்பத்தினர். பெண்கள் எனினும்

அவர்கள் கற்றனர் ; பாடல் செய்யும் புலமை பெற்றனர் ; பெரும் புலவராக விளங்கினர். இக்காலத்திலும் பெண்கள் நன்ருய்க் கல்வி கற்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| பாரிவள்ளல் | சங்கவை | ஊர்ந்த |
| பறம்பு மலை | சூழ்ச்சி | நண்ணி |
| அங்கவை | குஞ்சரம் | கவர்ந்து |

### அருஞ்சொற்பொருள்

சூழ்ச்சி - வஞ்சனை. குஞ்சரம் - யானை. ஊர்ந்த - ஏறிச் செலுத்திய. நடைமெலிந்து - நடைதளர்ந்து. நண்ணி - அடைந்து.

### கேள்விகள்

1. பாரியின் புகழ் பரவக் காரணம் யாது?
2. பாரியின் பெண்கள் யாரிடம் கல்வி கற்றனர்?
3. பாரி இறக்கக் காரணம் என்ன?
4. பாரி மகளிர் சிறந்த புலவர்கள் என்பது எதனுல் விளங்கும்?
5. நம் முன்னோர் கல்வி நிலைக்கும் நம் கல்வி நிலைக்குமுள்ள வேற்றுமை என்ன?

### பயிற்சி

1. நம் நாட்டில் வாழ்ந்த தமிழ்ப்புலவர் ஒருவர் வரலாற்றை எழுதுக.
2. நடைமெலிந்து, மணம் செய்வித்தார், ஊர்ந்த, நண்ணி —இவற்றை உம் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.
3. இப்பாடத்தில் உள்ள பத்திகளுக்கு ஏற்ற தலைப்புக் கொடுக்க.
4. இரண்டாம் பத்தியில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம்—இவற்றை எடுத்து எழுதுக.
5. 'கல்வியின் சிறப்பு' என்பது பற்றிப் பதினைந்து வரிகள் எழுதுக.

6. இவற்றைச் சேர்த்து எழுதுக :—

பாரியை + கொன்றனர். சிற்றூர்க்கு + சென்றனர். வாழை + பழம். கபிலரை + சேர்ந்தனர். பாலுக்கு + பணம்.

7. உப்பு—புலி—ஆகாய விமானம்—வண்டு : இவற்றைக் கோடிட்ட இடங்களில் பொருத்தமாக அமைத்துப் படி :—

(1) காட்டில் வாழ்வது ———.
(2) பூவில் உள்ள தேனைக் குடிப்பது ———.
(3) கடல் நீரிலிருந்து ———கிடைக்கிறது.
(4) வானத்தில் பறப்பது ———.


## இலக்கணம்

## புணர்ச்சி (தொடர்ச்சி)

நிலைமொழியின் இறுதியில் வரும் ஆக, ஆகி, ஆய், போய், வித, பற்றி, எல்லா, வகை என்பவற்றின்முன் வருமொழி முதலில் வரும் க, ச, த, ப மிகும்.

1. வள்ளலாக + தோன்றினான் = வள்ளலாகத் தோன்றினான்.
2. பைத்தியமாகி + செத்தான் = பைத்தியமாகிச் செத்தான்.
3. வருந்தியவனாய் + சென்றான் = வருந்தியவனாய்ச் சென்றான்.
4. போய் + பார் = போய்ப் பார்.
5. பலவித + கடைகள் = பலவிதக் கடைகள்.
6. நடந்ததுபற்றி + கலங்காதே = நடந்ததுபற்றிக் கலங்காதே.
7. எல்லா + தூண்கள் = எல்லாத் தூண்கள்.
8. சிலவகை + செய்திகள் = சிலவகைச் செய்திகள்.

# 18. படப் பயிற்சி—2



## பயிற்சி

I. 1. பருத்தியின் வரலாற்றை உம் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

2. பருத்தியே தன் வரலாற்றைச் சொல்வது போலக் கூறுக.

3. பனை, நெற்பயிர், சணல்—இவற்றின் வரலாறுகளை எழுதுக.

II. 1. சேர்த்து எழுதுக :—

| | |
|---|---|
| பருத்தி | + செடி |
| ஆடையாக | + செய்து |
| பாவாய் | + செய்து |
| ஓடி | + போனான் |
| அந்த | + காகம் |
| எங்கு | + கண்டாய் |
| எந்த | + புத்தகம் |

2. பெண்பால் கூறுக :—கிழவன், ஆசிரியர், மாமா, தயிர்க்காரன், நூற்பவன், உழவன், ஒருவன்.

3. நெசவுத் தொழிலைப்பற்றி இருபது வரிகள் எழுதுக.

4. தென்னைமரத் தொழிலைப்பற்றி இருபது வரிகள் எழுதுக.

5. பனைமரத் தொழிலைப்பற்றி இருபது வரிகள் எழுதுக.

6. தோட்டத் தொழிலைப்பற்றி நீ அறிந்ததைப் பதினைந்து வரிகளில் எழுதுக.

7. கிராமக் கைத்தொழில்களைப்பற்றி இருபது வரிகள் எழுதுக.

# 19. முதலுதவி

1. நம் வாழ்க்கையில் நாம் எதிர்பாராமல் திடீரென்று பல விபத்துக்கள் நேரிடுகின்றன. அவ்வாறு விபத்து உண்டான இடத்தில் மக்கள் திரளாகக் கூடுவர். ஆனால் கூட்டமாக இருக்கும் அவர்கள் விபத்தை அடைந்தவர்க்குச் செய்யவேண்டியது யாது என்பதை அறியாமல் தவிப்பர். விபத்து அடைந்தவரை உடனே மருத்துவரிடம் அழைத்துச் சென்று ஆவன செய்யவேண்டும்.

2. விபத்து உண்டான இடத்திலேயே மருத்துவர் இருக்கமாட்டார். விபத்துக்குள்ளானவரை மருத்துவர் இருக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்லவேண்டும்; அல்லது விபத்துக்கு உள்ளானவர் இருக்கும் இடத்திற்கு மருத்துவரை அழைத்துவர வேண்டும். இவ்வாறு செய்வதற்குச் சிறிது நேரமாகும். அச்சிறிது நேரத்திற்குள் சில விபத்துக்கள் மிகக் கேடாக முடிந்துவிடும். ஆதலால் மருத்துவர் உதவியைப் பெறுமுன் விபத்துக்குள்ளானவர்க்குச் சில உதவிகள் செய்யவேண்டும். அவ்வாறு செய்யும் உதவியே முதல் உதவி எனப்படும். பொதுவாக உண்டாகும் விபத்துக்களுக்குச் செய்யும் முதலுதவியைப் பற்றி நீங்கள் இங்கு அறிவீர்கள்.

3. இரத்தக்காயம் : காயம் உண்டானால் இரத்தம் வெளிவரும் அல்லவா? அவ்வாறு வரும் இரத்தம் செந்நிறம் உடையதா, கருநிறம் உடையதா என முதலில் அறிய வேண்டும். சிவப்பு இரத்தம் நின்று நின்று வரும்; கருநிறம் உடைய இரத்தம் ஒரே அளவாக, தண்ணீர் ஒழுகுவதுபோல் வரும். காயம்



சிவப்பு இரத்தக் குழாயில் உண்டாகி இருக்குமானல், காயம்பட்ட இடத்திற்கு மேல் கட்டவேண்டும். படத்தில்

காட்டியிருப்பதுபோல் கைத்துண்டால் கட்டி, அதன்மேல் பென்சிலையோ சிறு குச்சியையோ வைத்து முடியவேண்டும். பின்பு அக்குச்சியை முறுக்கவேண்டும். அவ்வாறு செய்வதால் வெளிப்படும் இரத்தம் குறையும்.

4. காயம் கருநிறம் உடைய இரத்தக் குழாயில் ஏற்பட்டிருக்குமாயின் காயத்திற்குக் கீழே கட்டுப் போடவேண்டும். தலையில் காயம் உண்டாகுமானல் கழுத்துக்கு மேலாகச் செல்லும் இரத்தக் குழாயை நன்கு அழுத்திப் பிடிக்க வேண்டும். காயம் உண்டான கைகால்களைச் சிறிது உயரத் தூக்கிப் பிடித்துக் கொள்வது நல்லது.



5. நெருப்புப் பிடித்தல்: திடீரென்று துணியில் தீப் பிடித்துக் கொண்டால் அங்குமிங்கும் ஓடுதல் கூடாது. அவ்வாறு செய்தால் காற்றின் உதவி கொண்டு தீ அதிகமாகும். முன்பக்கம் தீப்பற்றிக் கொண்டால் உடனே கவிழ்ந்து படுத்துக் கொள்ளவேண்டும். பின் பக்கமாயின் மல்லாந்து படுத்துக் கொள்ள வேண்டும். உடம்பைச் சுற்றிப் பற்றிக் கொண்டால் அழுத்தமான துணியால் மூடவேண்டும். தீப்பற்றி எரியும்பொழுது தண்ணீர் ஊற்றுதல் மிகவும் தவறு.



6. தீயை அணைத்த பிறகு தீப்பற்றிக் கொண்டவர் மீதுள்ள துணியை மெதுவாக நீக்கவேண்டும். வெந்த இடத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் துணியை எண்ணெய் தடவி எடுக்கவேண்டும். தீயினல் உண்டான கொப்புளங்களை ஊசியினல் குத்தக்கூடாது. சுண்ணும்புத்

தண்ணீரும் தேங்காய் எண்ணெயும் கலந்து வெந்த இடத்தில் மெல்லத் தடவவேண்டும்.

7. இவ்விதமான முதலுதவியை நீங்கள் தெரிந்து கொண்டால் விபத்தில் அகப்பட்ட மக்களை நீங்கள் காப்பாற்ற முடியும். உங்கள் பள்ளிக்கூடத்தில் நீங்கள் இவற்றைப் பழகிக் கொள்ளுங்கள். அவ்வாறு பழகினால், விபத்து நேரும் காலங்களில் துணிவாக நீங்கள் உதவ முடியும்.

| | | |
|---|---|---|
| முதலுதவி | கவிழ்ந்து | மல்லாந்து |
| விபத்துக்கள் | இரத்தக்குழாய் | பற்றிக்கொண்டால் |
| தவிப்பர் | இரத்தக்காயம் | கொப்புளங்கள் |
| கேடாக | கைத்துண்டு | துணிவாக |

## அருஞ்சொற்பொருள்

விபத்து - திடீரென்று உண்டாகும் ஆபத்துக்கள். தவிப்பர் - தயங்குவர். கேடாக - பெருந் துன்பமாக. மல்லாந்து - மேலே பார்த்து. பற்றிக்கொண்டால் - (தீ) பிடித்துக்கொண்டால்.

## கேள்விகள்

1. திடீரென்று விபத்து உண்டானால் மக்கள் என்ன செய்கின்றனர்?

2. முதலுதவி என்பது யாது?

3. காயம் சிவப்பு இரத்தக் குழாயில் ஏற்படுமாயின் என்ன செய்ய வேண்டும்?

4. தலையில் காயம் உண்டாகுமானால் என்ன செய்ய வேண்டும்?

5. நெருப்புக் காயம் பட்டவர்களுக்குச் செய்யும் முதல் உதவி யாது?

### பயிற்சி

1. தீ விபத்தில் அகப்பட்டவர்க்கு நீ எப்பொழுதாவது உதவி செய்ததுண்டா?

2. வாழைப்பழத் தோல் சறுக்கி ஒரு குழந்தை விழுந்தது. அதற்கு நீ செய்யும் முதல் உதவி யாது?

3. இரத்தக் குழாய், முறுக்கவேண்டும், பெருங்கேடாக, கொப்புளங்கள்—இவற்றை அமைத்து வாக்கியங்கள் எழுதுக.

4. முதல் பத்தியில் உள்ள வாக்கியங்களைக் கேள்வி வாக்கியங்களாக மாற்றுக.

5. இவற்றைச் சேர்த்து எழுதுக :—

அடைந்தவர்க்கு+செய். திரளாக+கூடுவர். பலவித+பூக்கள். பேயாய்+திரிந்தாள். அழுத்தி+பிடி.

### இலக்கணம்

## செய்வினை - செயப்பாட்டுவினை

1. தாயார் கடிதம் எழுதுகிறார்—இதில் உள்ள ‘எழுதுகிறார்’ என்னும் வினை (தொழில்) தாயார் செய்த வினை. ஆதலால் எழுதுகிறார் என்பது செய்வினை.

2. கடிதம் தாயாரால் எழுதப்பட்டது—இதில் உள்ள ‘எழுதப்பட்டது’ என்னும் வினை தாயாரால் செய்யப்பட்ட வினை. ஆதலால் எழுதப்பட்டது என்பது செயப்பாட்டுவினை.

கீழ் வரும் செய்வினைகளைச் செயப்பாட்டு வினைகளாக மாற்றுக :—

ஆசிரியர் குறள் நடத்தினார்.
இராமன் இராவணனைக் கொன்றான்.
பூமி சூரியனைச் சுற்றுகிறது.
கடவுள் நம்மைக் காப்பார்.

# 20. பெரியோர் உரை நடை

## கல்வியின் உயர்வு

கல்வி என்பது ஒருவனது உள்ளத்தில் நிலைத்து நிற்பது. அதனைக் கண்ணால் காணமுடியாது; செயலால் தான் அறிய முடியும். கல்வி செல்வம்போல் நெருப்பில் வேகாதது; வெள்ளத்தால் கொண்டு போகப்படாதது; அரசராலும் கவர்ந்துகொள்ள முடியாதது; பிறர்க்கு நிறையக் கொடுத்தாலும் சிறிதும் குறைவுபடாதது; தோண்டத் தோண்ட நீர் ஊறும் மணற்கேணி போலப் பிறர்க்குச் சொல்லச் சொல்லக் குறையாமல் (அறிவு) வளர்ச்சியடைவது; கள்வரால் திருடிக்கொண்டு போக முடியாதது. நாட்டை ஆளும் அரசனும் தன் ஊரளவே சிறப்புச் செய்யப்படுவான்; வெளியூரில் சிறப்புச் செய்யப்படான். ஆனால் கற்றவனோ எனின், செல்லும் இடம் எல்லாம் சிறப்படைவான்.

—திரு. கா. அப்பாத்துரை

## மலை நிலம்

பண்டைத் தமிழ் மக்கள் நிலத்தை நான்கு வகையாகப் பிரித்தார்கள். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. தமிழ் மக்கள் வகுத்த நால்வகை நிலத்துள் முதன்மையானது குறிஞ்சி. குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்த இடமுமாம். மலை பூமியினின்றும் ஓங்கலாக மக்கள் வாழ்வுக்கெனக் கடவுளால் அமைக்கப் பட்ட சிறந்த இயற்கை மாளிகை. அம் மாளிகையில் மக்கள் வாழ்வுக்குரிய பொருளெல்லாம் இயற்கையாகவே தோன்றியிருக்கின்றன. விதவிதமான பூக்கள் மலர்

கின்றன; பல திற மூலிகைகள் வளர்கின்றன; பறவைகள் பறக்கின்றன; விலங்குகள் வாழ்கின்றன. பழங்கள் கொத்துக் கொத்தாகத் தொங்குகின்றன. தினை முதலிய தானியங்கள் பயிராகின்றன. அருவிகள் ஓடுகின்றன. மனத்தைக் கவர மயிலின் ஆட்டமும் மானின் ஓட்டமும் நிகழ்கின்றன. இத்தகைய மலையில் வாழ்பவருக்கு வறுமை உண்டோ?

—திரு. வி. க.

## ஊர்ப் பொதுவிடம்

ஊரில் உள்ளோர் எல்லோரும் கூடும் பொது இடத்திற்கு மன்றம் அல்லது அம்பலம் என்பது பெயர். ஊர் நடுவே ஒரு பெரிய வெளியில் அமைந்திருக்கும் ஒரு மரத்தடியே பொதுவிடமாகும். அம் மரம் பெரும்பாலும் ஆலமரமாகவே இருக்கும். இங்கு ஊரில் உள்ளவர் தம்முடைய பெருவழக்கைத் தீர்த்துக் கொள்வர்; இளஞ் சிறுவர் விளையாடுவர். இம் மரத்தின் நிழல் பயன்படுவதைக் கண்ட சிறுவர் தாமும் அவ்வாறே பயன்பட வேண்டும் என்னும் கருத்தைக் கொண்டனர்; தன்னை வெட்டுவார்க்கும் நிழல் கொடுக்கும் தன்மையைக் கண்டு, தமக்குக் கெடுதி செய்வார்க்கும் தாம் நன்மையே செய்தல் வேண்டும் என்னும் பாடத்தைப் படித்தனர். பெருமரம் வலியிழந்த காலத்து அதன் விழுதுகள் பலவகையானும் நிலத்தில் ஊன்றி நின்று, பாதுகாப்பதைக் கண்டு, தாமும் நமது நாடோ குடிகளோ துன்பப்பட்டால் உதவ வேண்டும் என்னும் பாடத்தைக் கற்றனர்.

—திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை

| | | |
|---|---|---|
| உரைநடை | ஊர்ப்பொதுவிடம் | மனத்தைக் கவர |
| நிலைத்து நிற்பது | மூலிகைகள் | அம்பலம் |
| மணற்கேணி | ஊரளவே | பெருவழக்கை |
| செய்யப்படுவான் | தினை | வலியிழந்த |
| ஓங்கலாக | ஊன்றி | இயற்கை |

## அருஞ்சொற்பொருள்

நிலைத்து நிற்பது - நிலையாக நிற்பது. ஊரளவே - ஊரில் மட்டுமே. ஓங்கலாக - உயர்ந்ததாக. மூலிகை - மருந்துப்பொருள்கள். திறம் - வகை. மன்றம், அம்பலம் - பொதுவிடத்தின் பெயர்கள். வலியிழந்த - வல்லமை கெட்ட. ஊன்றி - (நிலத்தில்) ஆழப் பொருந்தி. குடிகள் - குடிமக்கள்.

## கேள்விகள்

1. கல்வி, பொருள் இரண்டிற்கும் உள்ள வேற்றுமை என்ன?
2. 'நீர் ஊறும் மணற்கேணி போல'—இத்தொடர் எதனை விளக்க வந்தது?
3. கற்றவர், அரசர்—இருவர்க்கும் உள்ள வேற்றுமை என்ன?
4. மலையில் உண்டாகும் இயற்கைச் செல்வங்கள் யாவை?
5. ஊர்க்கு அமைந்த பொதுவிடம் யாது?
6. சிறுவர் மரத்தைப் பார்த்து அறிந்தவை யாவை?
7. ஊர்ப் பொதுவிடத்தில் நடக்கும் வேலை என்ன?

## பயிற்சி

1. நீ இத்தகைய பெருமக்கள் உரைநடையைப் படித்ததுண்டா?
2. நீ படித்த பகுதியைச் சுருக்கி எழுதுக.
3. முதற்பகுதியில் உள்ள எ. ப. செ. எடுத்து எழுதுக.

4. இரண்டாம் பகுதியில் உள்ள செய்வினை, செயப்பாட்டு வினைகளை எடுத்து எழுதுக.

5. இளைஞர் எளியோர்க்கு உதவவேண்டும்—இத்தொடரில் உள்ள சொற்களுக்குச் சொல் இலக்கணம் கூறுக.

6. முதற்பகுதியில் உள்ள பெயரெச்ச வினையெச்சங்களை எழுதுக.

7. இரண்டாம் பகுதியில் உள்ள அறுவகைப் பெயர்களைக் கூறுக.

8. முதற்பகுதியில். உள்ள ஐம்பாற் பெயர்களைக் கட்டம் போட்டு எழுதுக.

9. இப்பாடத்தில் வந்துள்ள எதிர்மறை வினைகளைக் கூறுக.

10. அந்த எதிர்மறை வினைகளை உடன்பாட்டு வினைகளாக மாற்றி எழுதுக.

## இலக்கணம்

### உடன்பாடு - எதிர்மறை

1. கலையரசி பாடினாள்—இதில் உள்ள 'பாடினாள்' என்பது தொழில் நடந்ததைக் காட்டும் வினை. ஆதலால் இஃது உடன்பாட்டுவினை எனப்படும்.

2. கலையரசி பாடவில்லை—இதில் உள்ள 'பாடவில்லை' என்பது தொழில் நடவாமையைக் காட்டும் வினை. ஆதலால் இஃது எதிர்மறைவினை எனப்படும்.

உண்டான், வந்தான், ஆடினாள், எழுதினான், படிக்கிறான் —இவற்றிற்கு எதிர்மறை கூறுக.

# 21. கடிதங்கள்

## 1. பெற்ருேர்க்குக் கடிதம்

5, பொன்னம்மாள் தெரு,
சென்னை, 2.
27–4–'55.

அன்புமிக்க தந்தை அவர்களுக்கு,

வணக்கம். சென்ற மாதம் எங்கள் பள்ளிக்கூடத்தில் காலாண்டுத் தேர்வு நடந்தது. அத்தேர்வில் எல்லாப் பாடங்களிலும் நான் நல்ல மதிப்பெண்கள் பெற்றிருக்கிறேன். ஆனல் கணக்கில்மட்டும் வேண்டிய மதிப்பெண்கள் வாங்கவில்லை. அதுபற்றி என்னை மன்னிக்க வேண்டுகிறேன். மாமா, கணக்கு ஆசிரியர் ஒருவரிடம் பாடம் கேட்க ஏற்பாடு செய்துள்ளார். நான் கவலையோடு படித்து அடுத்துவரும் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெறுவேன்.

என் வணக்கத்தை அம்மாவுக்கும் அண்ணுவுக்கும் சொல்ல வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
உங்கள் அன்புள்ள மகள்,
கலையரசி

திருவாளர்
மு. இராமச்சந்திரன் அவர்கள்,
31, பழக்கடைத் தெரு,
விழுப்புரம்.

## 2. வேண்டுகோள் கடிதம்

'பாரதியார் கழகம்'
பச்சையப்பர் பள்ளி,
சென்னை–1.
10–5–'55.

அன்புமிக்க பெரியீர் !

வணக்கம். எங்கள் பள்ளியில் உள்ள 'பாரதியார் கழக ஆண்டு விழா' 30–5–55-இல் நடைபெறும். அவ் விழாவிற்கு, திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் தலைமை வகிக்கச் சம்மதித்துள்ளார். நீங்கள் எங்கள் கழக விழா விற்கு வந்து, 'பாரதியாரும் சிறுவரும்' என்னும் பொருள்பற்றிப் பேசி, எங்களுக்கு அறிவுரை தரும்படி உங்களைப் பெரிதும் வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,
மு. இராமலிங்கம்
(செயலாளன்)

திருவாளர்
புலவர்-கா. அப்பாதுரை அவர்கள்,
எழும்பூர் உயர்நிலைப்பள்ளி,
எழும்பூர்,
சென்னை.

## 3. புத்தகம் வரவழைத்தல்

103, வடக்கு மாடவீதி,
காஞ்சீபுரம்,
20–6–'55.

மானேஜர் அவர்கள்,
மாணவர் பதிப்புக் கழகம்,
சென்னை–2.

ஐயா,

தயவு செய்து, கீழ்க்காணும் புத்தகங்களை விரைவில் அடியில் கொடுத்துள்ள என்னுடைய முகவரிக்கு வி. பி. பி-இல் அனுப்பி வைக்க வேண்டுகின்றேன்.

1. ஆட்சிமுறை, ஐந்தாம் வகுப்புக்கு உரியது. 40 புத்தகங்கள்.
2. இந்திய சரித்திரம், ஐந்தாம் வகுப்புக்கு உரியது. 50 புத்தகங்கள்.
3. தமிழ் வாசகம், ஐந்தாம் வகுப்புக்கு உரியது. 45 புத்தகங்கள்.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,
சா. தங்கவேலன்

| | | |
|---|---|---|
| கலையரசி | எழும்பூர் | முகவரி |
| வேண்டுகோள் | மாடவீதி | ஆட்சிமுறை |
| ஆண்டுவிழா | மானேஜர் | வி. பி. பி-இல் |

## அருஞ்சொற்பொருள்

மதிப்பெண் - மார்க்கு. கவலையோடு - கருத்துடன். பெரிதும் - மிகவும். முகவரி - விலாசம்.

## பயிற்சி

1. உன் ஊரில் நடந்த பொருட்காட்சியைப்பற்றி உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.
2. உன் தமக்கையின் திருமணத்திற்காக விடுமுறை வேண்டி ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதுக.
3. உன் ஊரில் பெய்த பெரு மழையைப் பற்றி உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

## இலக்கணம்

## செயப்படுபொருள் குன்றாவினை—செயப்படுபொருள் குன்றிய வினை

1. முருகன் பசுக்களைக் காத்தான்.
2. வரதன் வந்தான்.

1. முதல் வாக்கியத்தில் உள்ள பயனிலை (வினை) காத்தான் என்பது. 'எதனைக் காத்தான்?' என்று கேட்டால் பசுக்களை என்பது விடையாகும். இத்தொடரில் பசுக்கள் என்பது செயப்படுபொருள். இவ்வாக்கியத்தில் செயப்படுபொருள் இருப்பதால், இது செயப்படுபொருள் குன்றா (குறையாத) வினை ஆகும்.

2. இரண்டாம் வாக்கியத்தில் உள்ள பயனிலை (வினை) வந்தான் என்பது. இங்கு முன்போலக் கேள்வி கேட்டால், செயப்படுபொருள் வராது. இவ்வாறு செயப்படுபொருள் இல்லாது வரும் வினை செயப்படுபொருள் குன்றிய வினையாகும்.

கீழ்வருவன இன்ன வினை என எடுத்து எழுதுக :—

கண்டான், ஓடினான், எழுதுகிறான், நிற்கிறான், பாடினார்.

# 22. மாணவர் ஆட்சி

1. மாணவர் ஆட்சி என்றால் என்ன? மாணவர்கள் தங்களுடைய வேலைகளைத் தாங்களே அறிந்து ஒழுங்காகச் செய்து முடிப்பதற்கு மாணவர் ஆட்சி என்பது பெயர்.

2. மாணவர்கள் பள்ளியில் செய்யும் வேலைகள் எவை? பள்ளிக்கூடத்தில் உள்ள ஒவ்வொரு வகுப்பிலும் நாற்பது பிள்ளைகள் இருப்பார்கள். நாற்பது பிள்ளைகளும் நான்கு பிரிவாகப் பிரிவார்கள். ஒவ்வொரு பிரிவும் வகுப்பறைச் சுத்தம், வகுப்பு அமைதி, பத்திரிகைச் செய்திகள் திரட்டுதல் போன்ற ஒவ்வொரு வேலையைச் செய்து வரும். மேலும், பள்ளிக்கூடங்களில் மாணவர் கழகம் என்பது ஒன்று உண்டு. மாணவர் கழகத்தை நடத்துபவர் மாணவரேயாவர். மாணவர்கள் தங்களுக்குள் தலைவர், துணைத்தலைவர், செயற்குழு என அமைத்துக்கொண்டு சங்க வேலைகளை ஒழுங்காகச் செய்வர். இதுபற்றி முன்னரே நீங்கள் படித்தீர்கள். இவை யாவும் மாணவர் ஆட்சிச் செயல்களே ஆகும்.

3. சில பள்ளிக்கூடங்களோடு 'மாணவர் இல்லம்' இருக்கும். அந்த இல்லத்திற்குரிய வேலைகளையும் மாணவர்கள் பங்கிட்டுச் செய்து வருகின்றனர். அவ்வாறு வேலை செய்யும் மாணவர்கள் எங்குப் படிக்கின்றனர், அவர்கள் எவ்வாறு திட்டம் செய்து வேலை செய்கின்றனர் என்பன போன்றவற்றை நீங்கள் அறிய ஆசைப்படுகின்றீர்கள் அல்லவா? கீழே வரும் செய்திகளைப் படியுங்கள் :

4. செங்கற்பட்டிலிருந்து காஞ்சீபுரம் செல்லும் புகை வண்டிப் பாதையில் வாலாஜாபாத் என்று ஓர் ஊர் இருக்கின்றது. அவ்வூரில் இந்துமத பாடசாலை என்றொரு பள்ளிக்கூடம் முப்பத்துநான்கு ஆண்டுகளாக இருந்து



படம் 1. பயிர்ப் பண்ணையில் சடையப்பர் அணியினர் களை எடுத்தல்



படம் 2. சேக்கிழார் அணியினர் காய்கறிகள் கொண்டு வருதல்


வருகின்றது. அப்பள்ளியைப் பற்றி நீங்கள் முன்னரே அறிந்திருக்கின்றீர்கள். அப்பள்ளியைச் சேர்ந்து 'மாணவர் இல்லம்' ஒன்று இருக்கின்றது.

5. மாணவர் இல்லம் ஓர் ஆட்சி மன்றத்தால் நடத்தப்படுகின்றது. இந்த ஆட்சி மன்றம் நூறு உறுப்பினர்களைக் கொண்டது. மாணவர் இல்லத்தில் இருக்கும் மாணவர்கள் இந்த நூறு உறுப்பினர்களையும் தேர்ந்தெடுப்பார்கள். ஆட்சி மன்றத்தின் கட்டளைகளை நிறைவேற்றப் பத்து அமைச்சர்கள் உள்ளனர். இப்பத்து அமைச்சர்களும் மாணவர் இல்லத்தில் எல்லா வேலைகளையும் செம்மையாகப் பார்த்துக்கொள்கின்றனர்.

6. அமைச்சர்கள் மாணவர்களைப் பல அணிகளாகப் பிரித்துள்ளனர். அவை சடையப்பர் அணி, சேக்கிழார் அணி, பாரி அணி, கரிகாலன் அணி, தொண்டைமான் அணி என்பனவாம். அந்த அணியினர் தம்முள் உயர்வு தாழ்வு கருதாமல் தமக்குரிய பணியை-அமைச்சர் இட்ட கட்டளையை-ஒழுங்காகச் செய்து முடிக்கின்றனர்.

7. மாணவர்கள் தங்கள் இல்லத்தைத் தாங்களே துப்புரவு செய்து கொள்கின்றனர்; பக்கத்தில் ஓடும் பாலாற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வருகின்றனர்; காய்கறித் தோட்டம் வைத்துப் பயிர் செய்கின்றனர். அவர்கள் தோட்டங்களிலிருந்து கொண்டுவந்த காய்கறிகளை நறுக்குகின்றனர். உணவு சமைத்த பிறகு அவர்களே உணவு பரிமாறி உண்கின்றனர். உண்ட பிறகு அவர்களே பாத்திரங்களைக் கழுவி ஒழுங்காக வைக்கின்றனர்; மாலை நேரத்தில் விளக்குகளைத் துடைத்து எண்ணெயிட்டு வைக்கின்றனர்.

8. இவ்வாறு மாணவர்கள் தங்கள் வேலைகளைத் தாங்களே செய்யப் பழகுகின்றனர். எல்லோரும் கலந்து தொழில் செய்வதால் ஒற்றுமை உணர்ச்சி உண்டா



படம் 3. பாரி அணியினர் காய்கறிகளைச் சமையலுக்காக நறுக்குதல்



படம் 4. கரிகாலன் அணியினர் நீரூற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவருதல்

கின்றது. தலைவனுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்ற நல்ல குணத்தை அவர்கள் அடைகின்றனர். பிள்ளை



படம் 5. தொண்டைமான் அணியினர் துப்புரவு செய்தல்

களே, இத்தகைய பிள்ளைகள் படிக்கும் பள்ளியையும், செய்யும் வேலைகளையும் நேரில் கண்டு வாருங்கள். அத்தகைய திறமையை நீங்களும் பெறுவீர்களாக.

| | | |
|---|---|---|
| மாணவர் ஆட்சி | துப்புரவு | பரிமாறி |
| திரட்டுதல் | பங்கிட்டு | மாணவர் இல்லம் |
| அணி | சடையப்பர் | செம்மையாக |
| கரிகாலன் | தொண்டைமான் | சேக்கிழார் |

### அருஞ்சொற்பொருள்

மாணவர் இல்லம் - மாணவர்கள் இருக்கும் விடுதி. திரட்டு தல் - ஒன்று சேர்த்தல். ஆட்சிமன்றம் - ஆளும் கழகம். செம்மை யாக - ஒழுங்காக. அணி - வரிசை. துப்புரவு - தூய்மை, சுத்தம். பரிமாறி - உணவிட்டு.

### கேள்விகள்

1. மாணவர் ஆட்சி என்பது என்ன ?
2. பள்ளியில் மாணவர் செய்யும் வேலைகள் எவை ?
3. மாணவர் இல்லம் என்பது யாது ?
4. இந்துமத பாடசாலை எங்குள்ளது ?
5. மாணவர் இல்லம் எவ்வாறு நடத்தப்படுகின்றது ?
6. அங்கு மாணவர் செய்யும் வேலைகள் எவை ?
7. அங்குள்ள அணிகளின் பெயர்கள் யாவை ?
8. மாணவர் ஆட்சி முறையால் உண்டாகும் நன்மைகள் யாவை ?

### பயிற்சி

1. நீ பார்த்த மாணவர் இல்லம் எவ்வாறு வேலை செய் கிறது என்பதை எழுதுக.

2. பங்கிட்டு, செம்மையாக, அணி, தமக்குரிய, துப்புரவு, பரிமாறி—இவற்றை உம் வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

3. இரண்டாம் பத்தியில் உள்ள வாக்கியங்களுக்கு எ. ப. செ. கூறுக.

4. பிரித்து எழுதுக :—தமக்குரிய, இல்லத்திற்குரிய, பாலாற்றிலிருந்து, எண்ணெயிட்டு.

5. மூன்ரும் பத்தியில் உள்ள செ. குன்றிய வினை, செ. குன்ரு வினைகளை எடுத்து எழுதுக.

6. சேர்த்து எழுதுக :—பல் + பொடி, புளி + பழம், கல் + பலகை, கருமை + பலகை, மை + கூடு, பேனு + கட்டை, பாவாடை + துணி, மரம் + பலகை, தேடி + பார், வீடு + சுவர், வயிறு + வலி, பொன் + அப்பன், கண் + அழகு.

7. இப்பாடத்திலிருந்து அறுவகைப் பெயர்ச் சொற்களுக்கும் இரண்டு இரண்டு உதாரணங்கள் தருக.

8. இப்பாடத்திலிருந்து செய்வினை, செயப்பாட்டு வினைகளுக்கு உதாரணங்கள் எழுதுக.

## இலக்கணம்

### தன்வினை - பிறவினை

(1) கமலம் ஆடினுள், (2) கமலம் ஊஞ்சலை ஆட்டினுள்.—இவ்வாக்கியங்களைக் கவனிக்க.

(1) இதனில் உள்ள ஆடுதல் என்னும் தொழிலைச் செய்தவள் கமலம். ஆதலால் ஆடினுள் என்பது தன்வினை எனப்படும்.

(2) இதில் உள்ள ஆடுதல் என்னும் தொழிலைச் செய்தது ஊஞ்சல்; கமலம் ஆடவில்லை; அதனை ஆடும்படி செய்தாள். ஆதலால் ஆட்டினுள் என்பது பிறவினை.

(உ - ம்.) ஓடினுன், பாய்ந்தான், இறங்கினுன்—தன்வினை.
ஓட்டினுன், பாய்ச்சினுன், இறக்கினுன்–பிறவினை.

கீழ்வரும் தன்வினைகளைப் பிறவினைகளாக்குக :—
பாடினுள், நடந்தான், செல்வான், புகுந்தான்.

# 23. சுற்றுப் பிரயாணம்

1. மாணவர்களே, நீங்கள் முன் வகுப்பில் இன்பச் செலவு என்பது பற்றிப் படித்தீர்கள். இன்பச் செலவு என்பது ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று, அது பற்றிய வரலாறுகளை மட்டும் நன்கு அறிவதாகும். சுற்றுப் பிரயாணம் என்பது பல நாடுகளைச் சுற்றிப் பார்த்து, ஆங்காங்குள்ள உண்மைகளை அறிந்து அறிவை வளர்த்துக்கொள்ளுவதாகும்.

2. சுற்றுப் பிரயாணம் செய்வதில் மேனாட்டார் சிறந்தவர்கள். மேனாட்டில் மாணவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்வதைக் கல்விப் பயிற்சியில் ஒன்றாய்க் கருதுகின்றனர். சிலர் சைக்கிளில் உலகச் சுற்றுப் பிரயாணம் செய்கின்றனர்; சிலர் வான ஊர்திகளிலும், சிலர் கப்பல்களிலும் சென்று, உலகத்தின் பல நாடுகளைச் சுற்றிப் பார்த்து, அறிவைப் பெருக்கிக்கொள்ளுகின்றனர்.

3. பழைய காலத்திலும் பல அறிஞர்கள் இவ்வாறு உலகச் சுற்றுப் பிரயாணம் செய்தனர். பிளினி, தாலமி, மார்க்கோ போலோ முதலிய யவன அறிஞர்கள் உலகச் சுற்றுப் பிரயாணம் செய்தவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர். இவர்களைப் போன்று சீன அறிஞர்களான யுவான் சுவாங், பாஹியான் முதலியவர்களும் பல நாடுகளைச் சுற்றி வந்தவர்களே ஆவர். இவர்கள் அந்தக் காலத்தில் பல நாடுகளைச் சுற்றிப் பார்த்து, எழுதிவைத்த குறிப்புக்களே வரலாறு எழுதத் தொடங்கிய ஆசிரியர்களுக்குப் பெரிதும் உதவியாய் இருந்தன.

4. நம் நாட்டிலும் அறிஞர்கள் பலர் உலக நாடுகளைக் காண விரும்பிச் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கின்றார்கள்.

அறிவை வளர்த்துக்கொள்வதற்காக மேனுடுகளில் சுற்றிப் பல உண்மைகளே அறிந்தவர்கள் சிலர்; மேனுட்டினரின் அழைப்பின்மீது சென்று, பல நாடுகளேயும் சுற்றிப் பார்த்துப் பல உண்மைகளேக் கண்டவர்கள் சிலர்; அரசியல் வேலைகளே முன்னிட்டு உலக நாடுகளுக்குச் சென்று சுற்றுப் பிரயாணம் செய்தவர்கள் சிலர்; வர்த்தக நோக்கத்துடன் உலக நாடுகளேச் சுற்றிப் பல உண்மைகளே அறிந்தவர்கள் சிலர்.

5. இவ்வாறு பழங்காலத்திலும் இக்காலத்திலும் சுற்றுப்பிரயாணம் செய்தலின் மூலம் அறிவை வளர்த்துக் கொண்டவர் பலர். இன்றும் பலர் இந்நோக்கத்துடன் சுற்றுப் பிரயாணம் செய்து வருகின்றனர்.

6. எனவே, சுற்றுப் பிரயாணம் அறிவை வளர்த்துக் கொள்ள ஓர் அரிய சாதனமாய் இருக்கிறதென்பது நன்கு விளங்குகிறது. ஆனல், மாணவர்களே, நீங்கள் அனேவரும் இவ்வாறு சுற்றுப் பிரயாணம் செய்ய முடியுமா? நீங்கள் உலக நாடுகளேச் சுற்றிவர முடியாவிட்டாலும் உங்கள் ஊரைச் சுற்றியுள்ள கிராமங்களேச் சுற்றிப் பார்க்கலாம்; அல்லது உங்கள் தாலுக்காவிலுள்ள ஊர்களேச் சுற்றிப் பார்த்து அங்குள்ள பல உண்மைகளேயும், வரலாற்றுச் சிறப்புக்களேயும் உங்கள் குறிப்பு ஏட்டில் குறித்துக் கொள்ளலாம். இவை உங்கள் அறிவைப் பெருக்கிக் கொள்ள உதவி செய்யும்.

| | | |
|---|---|---|
| வரலாறு | சாதனம் | மார்க்கோ போலோ |
| சுற்றுப் பிரயாணம் | வான ஊர்திகள் | தாலுக்கா |
| மேனுட்டார் | பிளேனி | யவனர் |
| கருதுகின்றனர் | தாலமி | சிறப்பாக |
| யுவான்சுவாங் | பாஹியான் | பழங்காலம் |

## அருஞ்சொற்பொருள்

வான ஊர்தி - ஆகாய விமானம். சாதனம் - துணைப் பொருள். தாலுக்கா - பல கிராமங்கள் சேர்ந்த பகுதி. செலவு - பயணம்.

## கேள்விகள்

1. இன்பச் செலவு, சுற்றுப் பிரயாணம்—இவற்றின் வேறுபாடுகளை எழுதுக.
2. உலகச் சுற்றுப் பிரயாணம் எவ்வெவ்வாறு செய்யலாம்?
3. பழைய காலத்தில் உலகச் சுற்றுப் பிரயாணம் செய்த யவன ஆசிரியர்கள் யாவர்?
4. பழைய காலத்தில் உலகச் சுற்றுப் பிரயாணம் செய்த சீன ஆசிரியர்கள் யாவர்?
5. வரலாறு எழுத முன்வந்த ஆசிரியர்கள் இவர்களால் அடைந்த பயன் என்ன?
6. நம் நாட்டவர்கள் எவ்வெக் காரணங்களை முன்னிட்டு உலகச் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள்?
7. உலகச் சுற்றுப் பிரயாணம் எதற்குச் சாதனமாயிருக்கிறது?
8. உலகச் சுற்றுப் பிரயாணம் செய்ய முடியாத மாணவர்கள் என்ன செய்ய வேண்டும்?

## பயிற்சி

1. மாணவர்கள், குறிப்பிட்ட வரலாறு, உண்மை, அறிவு, சைக்கிள், கப்பல், மேனடு, அழைப்பு, குறிப்பு, ஏடு—இவற்றை உம் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

2. இன்பம் × துன்பம், பெருக்கி × சுருக்கி —இவை எதிர்ச் சொற்கள். தக்கவர்கள், உண்மை, கண்டவர்கள், அறிந்தவர்கள், சிலர்—இவற்றிற்கு எதிர்ச் சொற்கள் கூறுக.

3. திருத்தி எழுதுக:—

பளையகாளத்திலும் பள அரிஞர்கள் இவ்வாரு உளகச் சுற்றுப் பிறயாணம் செய்தனர். இவற்கல் அன்தக் காளத்திள் பள ணடுகலேச் சுற்றிப் பாற்த்து, எடுத்துவைத்த குரிப்புக்கலே வறலாரு எளுதத் தொடங்கிய ஆசிறியற்கலுக்குப் பெறும் உதவியாய் இறுந்தந.

4. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்து எழுதுக :—

(1) சுற்றுப் பிரயாணம் செய்வதில் —— சிறந்தவர்கள்.
(2) சுற்றுப் பிரயாணம் —— வளர்க்கும் ஓர் அரிய சாதனம்.
(3) நீங்கள் இவ்வாறு —— செய்ய முடியுமா?
(4) வரலாற்றுச் சிறப்புக்களை உங்கள் —— —— குறித்துக்கொள்ளுங்கள்.
(5) இவை உங்கள் —— —— உதவி செய்யும்.

5. இரு பொருள் கூறுக :—
செலவு, நடு, பார், பழம், முயல், ஏடு, குறி.

6. எதிர்ப் பால் கூறுக :—
மாணவன், தாயார், அண்ணன், தம்பி, மாமன், மருமகள், மைத்துனன், பாட்டி.

7. ஒருமை கூறுக :—
நீங்கள், நாடுகள், மேனுட்டார், சிறந்தவர்கள், கொள்ளுகின்றனர், செய்தனர், அறிஞர்கள், ஆவார், இவர்கள், குறிப்புக்கள்.

8. இவ்வாக்கியங்களில் உள்ள மூவிடத்துப் பெயர்களை எடுத்து எழுதுக :

(1) நீங்கள் முன் வகுப்பில் இன்பச் செலவு என்பது பற்றிப் படித்தீர்கள்.
(2) சுற்றுப் பிரயாணம் செய்வதில் மேனுட்டார் சிறந்தவர்கள்.
(3) நாம் நம் நாட்டிலும் சுற்றுப் பிரயாணம் செய்கின்றோம்.

9. இவ் வாக்கியங்களிலுள்ள உயர்திணை, அஃறிணைப் பெயர்களை எடுத்து எழுதுக :

பிளினி, தாலமி போன்ற அறிஞர்கள் உலகத்தைச் சுற்றிப் பார்த்தவர்கள். இவர்கள் பல நாடுகளில் உள்ள விலங்குகள், பறவைகள், தாவரங்கள் முதலியவற்றைப் பற்றிய குறிப்புக்கள் எடுத்தனர்.



## 24. கவியரசியார்

1. நமது இந்திய நாட்டை இன்று நாமே ஆட்சி செய்கின்றோம். இன்று நமது நாடு 'உரிமை பெற்றுள்ள நாடு' என்று சொல்லப்படுகிறது. இவ்வுரிமை பெறப் பாடுபட்ட பெருமக்கள் பலர். அவருள் ஆடவரும் பெண்டிரும் உளர். உரிமைப் போரில் ஈடுபட்ட தாய்மாருள் சரோஜினி தேவியார் ஒருவர்.

2. சரோஜினி தேவியார் ஹைதராபாது நகரில் 1879-ஆம் ஆண்டில் பிறந்தவர். இவர் தந்தையார் ஆகிய அகோரநாதர் அந்தணர் மரபைச் சேர்ந்தவர். அகோரநாதர் சிறந்த அறிஞர்; பெருஞ் செல்வர். எனவே அவர் தம் அருமை மகளாரைச் செல்வமாய் வளர்த்தார். சரோஜினிதேவியார் சிறு பருவத்திலேயே நுட்பமான அறிவுடையவராய்க் காணப்பட்டார். அவர் தம் சிறு வயதில் எழுதிய கவிகளைப் பெருமக்கள் பாராட்டினர். 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' அல்லவா!

3. சரோஜினி தேவியார் தம் பன்னிரண்டாம் வயதில் மெட்றிகுலேஷன் பரீட்சையில் தேறினர் ; பிறகு மேல் படிப்பிற்காக இங்கிலாந்து சென்றார் ; அங்குச் சென்று மூன்று ஆண்டுகள் தங்கிப் படித்தார். அவர் அங்குள்ள பல இடங்களையும் கண்டு தம் அறிவை வளர்த்துக்கொண்டார். அதன் மூலம் அவரது கவித்திறம் மேலும் வளர்ந்தது. அவருடைய ஆங்கிலப் பாடல்களை ஆங்கிலப் பெருமக்கள் பலர் படித்தனர் ; அவரைக் ‘ கவியரசி ’ எனப் பெருமைப்படுத்தினர்.

4. கவியரசியார் இந்தியா மீண்டார் ; நம் நாடு மேல் நாடுகளைப் போல் மேன்மை அடைய வேண்டும் என எண்ணினர். அதற்குரிய வ்ழி நம் நாட்டைச் சீர்திருத்தம் செய்வதே என அவர் முடிவு செய்தார். அவர் டாக்டர் நாயுடு என்பவரை மணந்தார்.

5. கவியரசியார் தம்மைப் போலவே பிற பெண்டிரும் சமூகத்தில் உயர்வு பெறவேண்டும் ; சீர்திருத்தத்துடன் வாழவேண்டும் எனக் கருதினர். எனவே அவர் மாதர் முன்னேற்றக் கழகங்களில் கலந்துகொண்டார் ; தலைமை வகித்தார் ; அரிய கருத்துரைகளை வழங்கினர். அப்பொழுது ஹைதராபாத்தில் ஒரு பெரிய வெள்ளம் உண்டாயிற்று. அதனல் மக்கள் தவித்தனர். அந்நிலையைக் கண்ட அம்மையார் மனம் உருகினர் ; அகில இந்திய நிதி ஒன்றைத் திரட்டி, தவித்த மக்களுக்குத் தந்து உதவினர்.

6. காந்தியடிகள் நடத்திய சுதந்திரப் போரில் அம்மையார் பங்கு கொண்டார் ; பெண்களை ஒன்று சேர்த்தார் ; அவர்களுக்குத் தலைவராய் நின்று சுயராஜ்யப் போர் நடத்தினர் ; 1918-ஆம் ஆண்டில் சென்னை மாகாண மாநாடு கூடிற்று. அம்மாநாட்டிற்கு நம் கவியரசியார் தலைமை தாங்கினர் ; நம் நாட்டின் நிலைமையையும் நாம்

சுதந்திரம் பெறவேண்டிய அவசியத்தையும் எடுத்துக் கூறினர். அவரது உணர்ச்சி பொருந்திய பேச்சைக் கேட்ட மக்கள் பலர் சுதந்திர இயக்கத்தில் சேர்ந்தனர்.

7. நம் நாடு 1947-ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்றது. அப்பொழுது நம் தேவியார் உத்தரப் பிரதேசத்தின் கவர்னரானுர். அவர் 1948-ஆம் ஆண்டு இந்தியத் தாயின் திருவடியை அடைந்தார்.

" பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்தவந்தோம் ;
எட்டும் அறிவினில் ஆணுக்கிங் கேபெண்கள்
இளைப்பில்லை காண் என்று கும்மியடி "

என்று பாரதியார் பாடினுர். அவர் பாடலுக்குக் கவியரசியார் சிறந்த எடுத்துக்காட்டு அல்லவா ?

| | | |
|---|---|---|
| கவியரசியார் | மெட்ரிகுலேஷன் | தவித்த |
| தேவியார் | கவித்திறம் | உத்தரப் பிரதேசம் |
| ஹைதராபாது | பாரினில் | கவர்னர் |
| அகோரநாதர் | ஆள்வது | எட்டும் |
| பாராட்டினர் | எடுத்துக்காட்டு | இளைப்பில்லை |

## அருஞ்சொற்பொருள்

பாராட்டினர் - பெருமைப்படுத்தினர். கவித் திறம் - பாடல் செய்யும் வல்லமை. இடையே வந்தன - நடுவே உண்டாயின. தவித்த - வருந்திய. எட்டும் - உண்மையை அறியும். இளைப்பில்லை - குறைந்தவர் இல்லை. எடுத்துக்காட்டு - உதாரணம்.

## கேள்விகள்

1. சரோஜினி தேவியார் எந்தப் போரில் ஈடுபட்டார் ?
2. 'விளையும் பயிர் முளையிலே தெரியும்'—சந்தர்ப்பம் கூறுக.
3. சரோஜினி தேவியார் 'கவியரசியார்' எனப் புகழ் பெற்றமைக்குக் காரணம் என்ன ?
4. அவர் செய்த தொண்டுகள் யாவை ?
5. பாரதியார் பெண்களைப் பற்றிக் கூறியவை யாவை ?

## பயிற்சி

1. நம் நாட்டு விடுதலைக்கு உழைத்த தலைவர்களின் பெயர்களை எழுதுக.

2. நமது நாட்டு விடுதலைக்குப் பாடுபட்டவர் பெயர்களுள் நீ அறிந்தவற்றை எழுதுக.

3. மூன்றும் பத்தியில் உள்ள தன்வினைகளைப் பிறவினைகளாக மாற்றுக.

4. ஆறும் பத்தியில் உள்ள இறந்தகால, நிகழ்கால, எதிர்கால வினைச் சொற்களை எடுத்து எழுதுக.

5. இவற்றைப் படிக்க :—

தேவியார்...இச்சொல் ஒருவரையே குறிக்கின்றது ; எனினும் பன்மையாகச் சொல்லப்பட்டது. இவ்வாறு ஓர் ஆணையோ, பெண்ணையோ பன்மையாகச் சொல்வது மரியாதைப் பன்மையாகும்.

(உ - ம்) வள்ளுவர் வந்தார்.
கம்பர் இராமாயணம் பாடினர்.

6. கீழ்வருவனவற்றைத் திருத்தி எழுதுக :—
(1) பள்ளத்தில் ஏறி மேட்டில் இறங்கு.
(2) மோரைக் கடையத் தயிராகும்.
(3) நூல் போகும் வழியே ஊசி போகும்.
(4) நீர் இறைத்து ஏற்றம் பாய்ச்சு.
(5) ஏர் கட்டி மாடு உழு.

7. எதிர்ச் சொல் கூறுக :—வலம், நன்மை, இன்பம், வேகம், வெளிச்சம், சரி, பழைய, நண்பன், தெற்கு, நெட்டை, குளிர்ச்சி.

8. கீழ்வரும் சொற்களில் ஏற்றதைக் கோடிட்ட ஒவ்வோர் இடத்திலும் அமைத்துப் படிக்க.

நீதிமன்றம் - சிறைச்சாலை - துறைமுகம் - தோப்பு - சத்திரம்.

(1) கைதிகளை அடைக்கும் இடம் ———.
(2) வழக்கு விசாரிக்கும் இடம் ———.
(3) கப்பல் தங்கும் இடம் ———.
(4) மரங்கள் அடர்ந்த இடம் ———.
(5) தருமச் சாப்பாடு போடப்படும் இடம் ———.

## இலக்கணம்

## இரட்டைச் சொல்—அடுக்குத் தொடர்

1. அரசன் கலகல என்று சிரித்தான். இதில் உள்ள ‘கலகல’ என்பது இரட்டைச் சொல் எனப்படும். இரட்டைச் சொல்லைப் பிரிக்க முடியாது ; பிரித்தாலும் பொருள் தராது.

2. குழந்தை வா வா என்று கூப்பிட்டது—இதில் உள்ள ‘வா வா’ என்பது அடுக்குத் தொடர். இது பிரிக்க முடியும் ; பிரித்தால் பொருள் உண்டு.

இதுவரை நீ படித்த இரட்டைச் சொற்களையும், அடுக்குத் தொடர்களையும் எடுத்து எழுதுக.

## 25. காட்சிச்சாலை

1. காட்சிச் சாலை என்பதன் பொருள் என்ன? காண வேண்டிய சிறந்த பொருள்களை மக்கள் கண்டு களிக்கும்படி வைத்திருக்கும் இடம் என்பது இதன் பொருளாகும். இவ்வாறு சேர்த்துவைக்கும் பொருள்களுக்குத் தக்கபடி காட்சிச் சாலை வேறு வேறு பெயர் பெறும். அவை பொருட்காட்சிச் சாலை, உயிர்க் காட்சிச் சாலை முதலியனவாம்.

2. பொருட்காட்சிச் சாலையில் நம் முன்னோரின் போர்க் கருவிகள், அவர்கள் பயன்படுத்திய பழைய மண் பாண்டங்கள், நகை வகைகள், இசைக் கருவிகள் முதலியன இருக்கின்றன. அவர்கள் வரைந்த ஓவியங் களும் செதுக்கிய சிற்பங்களும் அங்கு உள்ளன. இக் காட்சிச் சாலையின் ஒரு பகுதியில் இறந்த விலங்குகள், பறவைகள் ஆகிய இவற்றின் உடல்கள் கெட்டுப்போகாத முறையில் பாதுகாப்போடு வைக்கப்பட்டுள்ளன. மற் றொரு பகுதியில் சரித்திர சம்பந்தமான சிலைகளும் கல் வெட்டுக்களும் வைக்கப்பட்டுள்ளன. இவைகள் எல்லா வற்றையும் நாம் சென்று நேராகக் காணும்போது நம் அறிவு வளர்ச்சி பெறுகின்றது. நம் முன்னோரின் நாக ரிகம், போர்த்திறமை, கல்வியறிவு, வரலாறு முதலியவை பற்றிய அறிவு உண்டாகின்றது.

3. உயிர்க் காட்சிச் சாலையில் பலவகையான விலங்குகள், பறவைகள், மீன்கள் முதலியவை காணப் படுகின்றன. நாட்டில் வாழும் நாம் காட்டிலும் சிற்றூர் களிலும் வாழும் விலங்குகளையும், பறவைகளையும் காணச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. அத்தகைய விலங்குகளையும் பறவைகளையும் நாம் காணவேண்டுமாயின், முன் சொல் லப்பட்ட உயிர்க் காட்சிச் சாலைக்கே போகவேண்டும்.

88200



அச்சாலையில் சிங்கம், புலி, கரடி, யானை, ஒட்டகம், ஒட்டைச் சிவிங்கி, வரிக்குதிரை, மான், காட்டுப்பன்றி, முள்ளம் பன்றி முதலிய காட்டு விலங்குகள் காணப்படு கின்றன. கங்காரு போன்ற அயல் நாட்டு விலங்குகளும் இருக்கின்றன.

4. அச்சாலையில் வெள்ளை மயில், ஐந்து நிறங்களைக் கொண்ட (பஞ்சவர்ண) கிளி, காட்டுப்புறு, நெருப்புக் கோழி முதலிய சிறப்பான பறவை இனங்களையும் நாம் காணலாம். மேலும் கொக்கு, நாரை, போன்ற நீர்வாழ் பறவைகளும் முதலைகள், பாம்புகள், பல நிறம் அமைந்த மீன் வகைகள் என்பனவும் அங்குள்ளன.

5. உயிர்க் காட்சிச் சாலையில் உள்ள உயிர் வகை களை நாம் காண்பதால், உண்டாகும் பயன் என்ன? அவற்றைக் காண்பதால் புத்தகத்தில் நாம் கற்ற விலங்கு, பறவை, நீர் வாழ்வன பற்றிய அறிவு நம் உள்ளத்தில் நன்ருகப் பதியும்; அவ்வாறு பதிவதால் தெளிவு ஏற்படும்.

6. மேலே சொல்லப்பட்ட காட்சிச் சாலைகள் சென்னை, மைசூர், திருவனந்தபுரம் போன்ற நகரங்களில் இருக்கின்றன. அறிவு வளர்ச்சி பெற அரசாங்கத்தினரே இக் காட்சிச் சாலைகளை அமைத்துள்ளனர். இங்குச் சொல்லப்பட்ட காட்சிச் சாலைகளே அல்லாமல் வேறு பல காட்சிச் சாலைகளும் உண்டு. அவை சுதேசிப் பொருட் காட்சிச் சாலை, விவசாயப் பொருட்காட்சிச் சாலை முதலியனவாம்.

7. சுதேசிப் பொருட்காட்சிச் சாலையில் நம் நாட்டின் பல இடங்களிலும் செய்யப்பட்ட பொருள்கள் ஒன்று சேர்த்து வைக்கப்பட்டிருக்கும். திருவாங்கூரில் நடை பெறும் தந்தத் தொழில், மைசூரில் நடைபெறும் பட்டுத் தொழில், கும்பகோணத்தில் நடைபெறும் பாத்திரத் தொழில் முதலிய தொழில்களைப் பற்றியும் இங்கு அறிய

வசதி உண்டு. இவ்வாறு தொழில் அறிவு பெற்றவர் ஓர் இடத்தில் கூடுவதால் தொழில் அறிவு வளர்கின்றது. இங்குக் கல்வி, மருத்துவம், சுகாதாரம், விவசாயம், மின் சாரம், பயிர்த்தொழில் முதலியவை பற்றி நன்கு அறிய வசதி உண்டு.

8. விவசாயப் பொருட் காட்சிச் சாலையில் விவசாயம் பற்றிய அறிவு தரும் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும். பயிர் செய்யும் முறை, பயிர்த் தொழிலுக்கு வேண்டிய புதிய இரும்புக்கருவிகள், கருவிகளைப் பயன்படுத்தும் முறை, நல்ல விதைகள், பயிர்க்கு வரும் நோய் தீர்க்கும் முறை ஆகியவை பற்றிய அறிவையும் அங்குப் பெறலாம். ஆதலால் இத்தகைய காட்சிச் சாலைகளைக் காணுவது நல்ல பயனைத் தரும்.

| | | |
|---|---|---|
| காட்சிச்சாலை | கல்வெட்டு | கங்காரு |
| பயன்படுத்திய | போர்த்திறன் | பஞ்சவர்ணக் கிளி |
| வரைந்த | ஒட்டைச் சிவிங்கி | நெருப்புக் கோழி |
| சிற்பம் | விலங்குகள் | சுதேசிப் பொருள் |
| சிலை | வரிக்குதிரை | ஓவியம் |

## அருஞ்சொற்பொருள்

காட்சிச் சாலை - காண்பதற்கு அமைந்த சாலை. பயன்படுத்திய - உபயோகித்த. வரைந்த - எழுதிய. ஓவியம் - எழுதப்பட்ட சித்திரம். சிற்பம் - கற்களில் அமைந்த உருவம். சிலை - கல்லால் அமைந்த உருவம். கல்வெட்டு - கல்லில் வெட்டப்பட்ட எழுத்து. விலங்கு - மிருகம். சுதேசிப்பொருள் - உள்நாட்டுப் பொருள்கள்.

## கேள்விகள்

1. காட்சிச் சாலை என்பதன் பொருள் என்ன ?
2. பொருட்காட்சிச் சாலையில் என்ன என்ன வைக்கப்பட்டுள்ளன ?
3. பொருட்காட்சிச் சாலையைப் பார்ப்பதால் உண்டாகும் பயன் யாது ?

4. உயிர்க் காட்சிச் சாலையில் என்னென்ன காட்டு விலங்குகள் உள்ளன ?

5. சுதேசிப் பொருட்காட்சிச் சாலையில் என்ன என்ன இருக்கும் ?

6. விவசாயப் பொருட்காட்சிச் சாலையில் என்ன என்ன வைக்கப்பட்டிருக்கும் ?

7. விவசாயப் பொருட்காட்சிச் சாலையைப் பார்ப்பதால் எத்தகைய அறிவைப் பெற முடியும் ?

## பயிற்சி

I. 1. தக்கபடி, பயன்படுத்திய, இசைக்கருவிகள், வரைந்த, சந்தர்ப்பம், கங்காரு, தெளிவு, தந்தத் தொழில்—இவற்றை உம் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

2. பொருட்காட்சிச்சாலை, பறவையின்ம், போர்க்கருவிகள், காட்டுப்பன்றி, இரும்புக்கருவி—இவற்றைப் பிரித்து எழுதுக.

3. சிற்றூர், நாடு, அயல்நாடு, உண்டு, வெள்ளை மயில், தொழிலாளி, நன்செய்—எதிர்ச் சொல் கூறுக.

4. பொருட்காட்சிச் சாலை என்பதைப்பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுதுக.

5. நீ பார்த்த காட்சிச் சாலை ஒன்றைப் பற்றி எழுதுக.

6. உனக்குத் தெரிந்த தொழில்களில் ஐந்தின் பெயர்களைக் கூறுக.

7. பொருத்தமான ஊர்ப் பெயரை அமைத்துப் படிக்க:—

கதர் நெசவுத் தொழில் —— நடைபெறுகிறது.
கம்பளத் தொழில் —— நடைபெறுகிறது.
சீமை ஓட்டுத் தொழில் —— நடைபெறுகிறது.
பட்டுப் புடவைத் தொழில் —— நடைபெறுகிறது.

II. 1. இது, சாலை, நிறம், நகரம், கண்டான், தொழிலாளி, அரசி—இவைகளுக்குப் பன்மைச் சொல் கூறுக.

2. நம் முன்னோர் பலவகையான இசைக் கருவிகளைக் கையாண்டனர். அவற்றை நாம் காணவேண்டும். கண்டால் நம் அறிவு மிகும். நீ சென்று அவற்றைப் பார்.—இவற்றில் உள்ள வினைமுற்றுக்களை எடுத்து எழுதி, அவை எந்தப் பால் வினைமுற்றுக்கள் என்பதையும் எழுதுக.

3. பொருள்களைச் சேர்த்து வைத்தஇடம் பொருட் காட்சிச் சாலை. இறந்த விலங்குகள் கிடந்தன. மயில் தோகையை விரித்து ஆடிற்று. விழுந்த சிறுவன் எழுந்து வந்தான்.—இவற்றில் உள்ள பெயரெச்சம், வினையெச்சங்களை எடுத்து எழுதுக.

4. காட்சிச்சாலை என்பதன் பொருள் என்ன | ஆ | அழகிய மயில் ஆடுகின்றது | தம்பி | என்ன செய்வாய் | நான் | எனக்கு எழுதும் வேலை இருப்பதால் | படம் பார்க்க வரமுடியாது | என்று சொல்லவில்லையா | நேர்க்கோடு இடப்பட்டுள்ள இடங்களில் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

5. பொருள் கூறுக :—வளை, வலை; இழை, இலை; அரி, அறி; அருகு, அறுகு; பாலை, பாளை.

6. இருபொருள் கூறுக :—மாலை, மதி, ஓடு, கால், உப்பு, ஆடு, பால்.

7. கோடிட்ட இடத்தில் பொருத்தமான பெயர் அமைத்துப் படிக்க :—

(1) இந்தியக் கப்பல் வாணிகச் சங்கத்தை —— உண்டாக்கினர்.

(2) இந்தியாவில் எஃகு இரும்புத் தொழிற்சாலையை —— உண்டாக்கினர்.

(3) கிராமபோனைக் கண்டுபிடித்தவர் ——.

(4) இந்திய மருத்துவக் கலையை —— உண்டாக்கினர் :

8. கீழ்வரும் தன்வினைகளைப் பிறவினைகளாக மாற்றுக :—

ஆடினாள், உண்பான், புகுந்தான், இறங்கினான், பாய்ந்தான், பெறுவாய், எழுந்தன.

9. கீழ்வரும் செயப்பாட்டு வினைகளைச் செய்வினையாக்குக :—

(1) உன்னால் கதவு திறக்கப்பட்டது.

(2) வாளால் பகைவன் வெட்டப்பட்டான்.

(3) நாம் கடவுளால் காக்கப்படுகிறோம்.

10. கீழ்வருவனவற்றை எதிர்மறை யாக்குக :—

வல்லவர், சீர்திருத்தினர், உடையவர், சொல்லுகிறான், கண்டார், உறங்குகிறான்.

# 26. அரங்கநாதர் அன்பு

## (நாடகம்)

### காட்சி 1

[அரங்கநாதர் பூண்டி என்னும் ஊரில் பிறந்தவர். அவர் சென்னை மாகாணக் கல்லூரியில் கணித ஆசிரியராக வேலை பார்த்து வந்தார். கோபாலன் கல்லூரியிற் படிக்கும் மாணவன். கல்லூரி முடிந்து மாணவர்களும் ஆசிரியர்களும் வீடு செல்கின்றனர்.]

**கோபாலன் :** ஐயா வணக்கம்.

**அரங்கநாதர் :** கோபாலா, வா. நன்ருகப் படிக்கின்ருயா ?

**கோபாலன் :** ஆம்; நன்ருகப் படித்துவருகின்றேன்.

**அரங்கநாதர் :** கோபாலா, உன்னைப் போல அடக்கமும் அறிவும் நிறைந்த மாணவர்களை நான் கண்டதில்லை. நீ வகுப்பில் முதல்வனுக இருப்பது எனக்குப் பெரு மகிழ்ச்சி தருகின்றது. உன் முயற்சியைக் கைவிடாமல் படித்து வருவாயானுல் நீ எதிர்காலத்தில் சிறந்து விளங்குவாய்.

**கோபாலன் :** ஐயனே, தாங்கள் என்மீது கொண்டுள்ள அளவில்லாத அன்புக்கு நான் நன்றி செலுத்துகிறேன். என் குடும்பத்தவர் என்னைப் படிக்க வைக்கப் படும் பாட்டை நான் அறிகின்றேன்; ஆதலால் முயற்சியுடன் படித்துவருகிறேன்.

**அரங்கநாதர் :** நல்லது. அப்படியே செய்.

**கோபாலன் :** வணக்கம், போய் வருகிறேன்.

(இருவரும் போகின்றனர்)

## காட்சி 2

[கோபாலன் அரையாண்டுத் தேர்வுக்குப் பின் கல்லூரிக்கு வரவில்லை. அவனைக் காணவேண்டி, ஆசிரியர் அரங்கநாதர் புறப்பட்டுப் புரசைப்பாக்கத்திலுள்ள அவன் வீட்டை அடைந்தார்.]

அரங்கநாதர் : கோபாலா, கோபாலா.

கோபாலன் : ஐயா, தாங்களா! வணக்கம், வாருங்கள்; வாருங்கள். இந்த ஏழையைத் தேடி இவ்வளவு தூரம் வந்தீர்களே! நாங்கள் புண்ணியம் செய்தவர்களே. ஐயா, இப்பலகையின் மீது உட்காருங்கள்.

(முதியவர் ஒருவர் வருகின்றார்.)

அரங்கநாதர் : இவர் யார்?

கோபாலன் : இவர் என்னுடைய பாட்டனார். தாத்தா, இவர் எங்கள் கல்லூரியில் கணித ஆசிரியர்; என் மீது நிறைந்த அன்புடையவர்.

அரங்கநாதர் : கோபாலா, நீ கல்லூரிக்கு வராமல் இருந்தமைக்குக் காரணம் என்ன? நீ வகுப்பில் நன்றாய்ப் படிக்கும் மாணவன் ஆயிற்றே! விடாமல் படித்தால் நீ நிச்சயம் வகுப்பில் முதல்வனாகத் தேறலாம்.

(இவ்வார்த்தையைக் கேட்டுக் கோபாலன் கண் கலங்குகிறான்; அரங்கநாதர் காரணம் தெரியாமல் திகைக்கிறார்.)

பெரியவர் : ஐயா, இப்பையனின் தகப்பனார் கோட்டையில் வேலை செய்து வந்தார். அவர் மாதச்சம்பளம் அறுபது ரூபாய்; அதனைக் கொண்டே நாங்கள் குடும்பத்தை நடத்தி வந்தோம்; இப்பிள்ளையையும் படிக்கவைத்தோம். பதினைந்து நாட்களுக்கு முன் இவன் தகப்பனார்க்குத் திடீரென்று காய்ச்சல் உண்டாயிற்று. இரண்டு நாட்களில் அவர் இறந்தார்.

இப்பொழுது எங்கள் குடும்பம் ஆதரவு அற்ற நிலையில் உள்ளது. பிள்ளையும் படிக்க முடியாதவனுய்த் தவிக்கின்ருன். கல்லூரிக்குக் கட்டப் பணம் இல்லை. ஆதலால் கோபாலனைப் பள்ளிக்கு அனுப்பாது நிறுத்திவிட்டோம்.

**அரங்கநாதர் :** கோபாலா, வருந்தாதே. உன் தந்தையார் இறந்த செய்தி எனக்குத் தெரியாது. உன்னை வகுப்பில் காணவில்லை. அதனுல் உன்னைத் தேடி இங்கு வந்தேன். (பெரியவரைப் பார்த்து) பெரியவரே, நடந்ததை நினைத்து வருந்த வேண்டா. இன்னும் நான்கு மாதங்கள் படிக்க வேண்டும். கோபாலன் பி. ஏ. பரீட்சையில் தேர்ந்துவிட்டால் நிச்சயம் உயர்வு பெறுவான்.

**கோபாலன் :** ஆசிரியரே, வாழ்க்கை நடத்துவதற்கும் வகையற்ற நிலையில் உள்ள நான் எப்படிக் கல்லூரிக்குப் பணம் கட்டிப் படிக்க முடியும்?

**அரங்கநாதர் :** கோபாலா, கவலைப்படாதே. இன்று முதல் நீ பி. ஏ. பரீட்சையில் தேறுகிற வரையில் ஒவ்வொரு மாதமும் உனக்கு இருபது ரூபாய் கொடுத்து வருகிறேன். அதை உன் குடும்பத்திற்குத் தந்துவிடு. உன் கல்லூரிச் செலவையும் நான் பார்த்துக்கொள்கின்றேன்; நீ படித்து முடிந்ததும் உனக்கு ஒரு நல்ல வேலையையும் வாங்கித் தருவேன். நாளை முதல் கல்லூரிக்கு வருவாயாக.

**பெரியவர் :** உத்தமரே, உங்களைப் போன்ற பெரியவர்களை நான் இந்நாள்வரை கண்டதில்லை. நீங்கள் எல்லா நலமும் பெற்று வாழ்வீர்களாக!

[காட்சி முடிவு]

| | | |
|---|---|---|
| அரங்கநாதர் | கோட்டையில் | ஆதரவு அற்ற |
| கைவிடாமல் | காய்ச்சல் | வருந்த வேண்டா |
| திகைத்தார் | புண்ணியம் | வகையற்ற |

## அருஞ்சொற்பொருள்

கைவிடாமல் - விட்டுவிடாமல். புண்ணியம் - நல்ல செயல். திகைத்தார் - மயங்கினர். ஆதரவு அற்ற - உதவி செய்வார் இல்லாத. வகையற்ற - வழி இல்லாத.

## கேள்விகள்

1. அரங்கநாதர் என்பவர் யார் ?
2. அவர் கோபாலனிடம் கூறியவை யாவை ?
3. கோபாலன் கல்லூரிக்கு வராத காரணம் என்ன ?
4. அரங்கநாதர் கோபாலனுக்கு எவ்வாறு உதவி செய்தார்?

## பயிற்சி

I. 1. நன்றி, கைவிடாமல், திகைத்தார், ஆதரவற்ற, வகையற்ற—இவற்றை உம் வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

2. பெரியவரே, மாணவர்களே, எனக்கு, பலகைமீது, பரீட்சையில், தந்தையாரால், அதை, கல்லூரிக்கு, கோபாலனே, ஆசிரியரே—இவற்றில் உள்ள வேற்றுமை உருபுகளைக் கூறுக.

3. இப்பாடத்தில் வந்துள்ள செய்வினை, செயப்பாட்டு வினைகளை எடுத்து எழுதுக.

II. 1. இப்பாடச் செய்தியைக் கோபாலன் கூறுவது போலக் கூறுக.

2. இப்பாடச் செய்தியைப் பெரியவர் கூறுவது போலக் கூறுக.

3. இப்பாடச் செய்தியை அரங்கநாதர் கூறுவது போலக் கூறுக.

4. இப்பகுதியைச் சுருக்கிப் பதினைந்து வரிக்குள் எழுதுக.

# செய்யுட் பாடம்

## 1. கலைமகள் வணக்கம்

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாள்என் உள்ளத்தி னுள்ளே
இருப்பள் (இ)ங்கு வாரா திடர்.

—கம்பர்

அருஞ்சொற்பொருள்

கலைமகள் - கல்வித்தெய்வம், சரசுவதி. ஏய - பொருந்த. உணர்விக்கும் - உணரச் செய்யும். இடர் - துன்பம்.

## 2. நீதி வெண்பா

1. மென்மதுர வாக்கால் விரும்பும் சகம் ; கடின
வன்மொழியி னாலிகழும் மண்ணுலகம் ;—நன்மொழியை
ஓதுகுயில் ஏதங் குதவியது ? கர்த்தபந்தான்
ஏதபரா தஞ்செய்த தின்று ?

2. ஈக்கு விடந் தலையில் எய்தும் ; இருந் தேளுக்கு
வாய்த்த விடம் கொடுக்கில் வாழுமே ; நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே ; துர்ச்சனருக்(கு)
அங்கமுழு தும்விடமே யாம்.

3. சிற்றுணர்வோர் என்றும் சிலுசிலுப்பர் ; ஆன்றமைந்த
முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே;—வெற்றிபெறும்
வெண்கலத்தி னோசை மிகுமே ; விரிபசும்பொன்
ஒண்கலத்தி லுண்டோ ஒலி ?

4. தாமரை பொன்முத்து சாமரைகோ ரோசனைபால்
பூமருதேன் பட்டு புனுகுசவ்வா—தாமழல்மற்(று)
எங்கே பிறந்தாலும் எள்ளாரே ; நல்லோர்கள்
எங்கே பிறந்தாலும் என் ?

5. பொற்பறிவில் லாதபல புத்திரப்பே றெய்தலினோர்
நற்புதல்வ னைப்பெறுதல் நன்றாமே;—பொற்கொடியே!
பன்றிபல குட்டி பயந்ததனு லேதுபயன்?
ஒன்றமையா தோகரிக்கிங் கோது?

6. கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே;—வம்பு செறி
தீங்கினர்தம் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி.

7. நிந்தையிலாத் தூயவரும் நிந்தையரைச் சேரிலவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே;—நிந்தைமிகு
தாலநிழற் கீழிருந்தான் ஆன்பால் அருந்திடினும்
பாலதெனச் சொல்லுவரோ? பார்.

8. வாக்குநயத் தாலன்றிக் கற்றவரை மற்றவரை
ஆக்கைநயத் தாலறிய லாகாதே;—காக்கையொடு
நீலச் சிறுகுயிலை நீடிசையா லன்றியே
கோலத் தறிவருமோ? கூறு.

9. கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழினும்நூல்
வல்லான் ஒருவனையே மானுவரோ?—அல்லாரும்
எண்ணிலா வான்மீன் இலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா ஆமோ? விளம்பு.

10. பொன்னும் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும்
சின்னம் படவருத்தம் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்றும்; நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து.

—ஔவையார்

## அருஞ்சொற்பொருள்

1. மதுரம் - இனிமை. சகம் - உலகம், உலகத்தார். கர்த்தபம் - கழுதை. அபராதம் - தீங்கு.

2. நோக்க அரிய - பார்க்க அச்சந் தரும். துர்ச்சனர் - தீயவர்.

3. சிற்றுணர்வோர்-அற்ப புத்தி உள்ளவர். சிலுசிலுப்பர் - படபடத்துப் பேசுவர். முற்றுணர்வோர் - மிக்க அறிவு உடையவர். விரி - ஒளி மிகும். ஒண்கலம் - ஒளி பொருந்திய பாத்திரம்.

4. சாமரை - கவரிமான் மயிர். எள்ளார் - இகழமாட்டார்.

5. பொன் கொடியே - அழகிய கொடி போன்றவளே. பயந்ததனுல் - பெற்றதனுல். கரி - யானை. ஓது - நீ சொல் வாயாக.

6. முழம் - முழ அளவு தூரம். வெம்பு - கோபிக்கின்ற. வம்பு - தீச்செயல். நெறி - முறை.

7. நிந்தை - பழிப்பு. ஆன் - பசு. தம்மிடம் - நிந்தை இல்லாதவரிடம். தாலம் - பனை மரம்.

8. ஆக்கை - உடல். இசை - குரல். கோலம் - உருவம்.

9. காதலித்து - விரும்பி. மானுவரோ - ஒப்பாவாரோ? அல் ஆரும் - இரவில் பொருந்திய. இலகிடினும் - ஒளிவீசினுலும். விளம்பு - சொல்.

10. சின்னம்பட - உருவம் அழிய. நலிந்தாலும் - வருந்தினுலும்.

## 3. நல்வழி

1. சாதி யிரண்டொழிய வேறில்லை ; சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் ; இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி.

2. ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் ;—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ராலும்
இல்லையென மாட்டார் இசைந்து.

3. ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே ?—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை ;—கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

4. பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சை பலசொல்லி இடித்துண்கை ;—சிச்சீ !
வயிறு வளர்க்கைக்கு மானம் அழியா(து)
உயிர்விடுகை சால வுறும்.

5. மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவரும்அங் கில்லை ;—சுரந்தமுதம்
கற்றா தரல்போல் கரவா தளிப்பரேல்
உற்றார் உலகத் தவர்.

6. ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய், ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு.

7. வேதாளம் சேருமே ; வெள்ளெருக்குப் பூக்குமே ;
பாதாள மூலி படருமே ;—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே ; சேடன் குடிபுகுமே
மன்றோரம் சொன்னார் மனை.

8. தண்ணீர் நிலநிலத்தால், தக்கோர் குணம்கொடையால்,
கண்ணீர்மை மாருக் கருணையால்,—பெண்ணீர்மை
கற்பழியா வாற்ருல், கடல் சூழ்ந்த வையகத்துள்
அற்புதமாம் என்றே அறி.

9. பூவாதே காய்க்கும் மரமுமுள ; மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே ;—தூவா
விரைத்தாலும் நன்ருகா வித்தெனவே பேதைக்(கு)
உரைத்தாலுந் தோன்ரு துணர்வு.

10. நீரும் நிழலும் நிலம்பொதியும் நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும்—ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றும்
தருஞ்சிவந்த தாமரையாள் தான்.

—ஔவையார்

## அருஞ்சொற்பொருள்

1. சாற்றுங்கால் - சொல்லுமிடத்து. வழுவா - தவருத. மேதினி - பூமி. பட்டாங்கு - அறநூல்.

2. அடி - நடப்பவரின் கால். உலகு - உலகில் உள்ள மக்கள். ஏற்றவர்க்கு - தம்மை ஒன்று கேட்டவர்க்கு. நல்கூர்ந் தார் - வறுமையடைந்தார்.

3. அரசு அறிய - அரசர் அறிந்து போற்ற. ஏற்றம் - உயர்வு. ஒப்பு - சமம். பழுது - குற்றம். பணி - வேலே.

4. சால உறும் - மிகவும் பொருந்தும்.

5. இரந்து - வேண்டி. அங்கு - அம்மரத்தடியில். அமுதம் - பால். சுரந்து - மிகுந்து. கன்று ஆ - கன்றையுடைய பசு. கரவாது - மறைக்காமல்.

6. ஆன - தனக்கு உண்டான. மதி - அறிவு. நாடு - (இவ்வுண்மையை நீ) அறிவாயாக.

7. வேதாளம் - ஒருவகைப் பேய். பாதாள மூலி - ஒரு வகைக் கொடி. சேடன் - பாம்பு. ஓரம் - ஒருவர் பக்கம் பேசுதல்.

8. கற்பு - பெரியோர் கற்பித்த வண்ணம் நடத்தல். வையகம் - உலகம். அற்புதம் - மேன்மை.

9. ஏவாது - கட்டளையிடாது. தூவா - தூவி.

10. பொதியும் - விளைந்து மூடும். சிவந்த தாமரையாள் - திருமகள், செல்வத்தின் தலைவி.

## 4. நன்னெறி

1. உள்ளம் கவர்ந்தெழுந் தோங்கு சினம்காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க :—வெள்ளம்
தடுத்தல் அரிதோ ? தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ ? விளம்பு.

2. தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர் ;—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமேல் நின்று.

3. இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே ;—பொன்செய்து
அதிர்வளையாய் ! பொங்கா தழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல்.

4. ஆக்கும் அறிவான் அலது பிறப்பினுல்
மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க ;—நீக்கு
பவரார் அரவின் பருமணிகண் டென்றும்
கவரார் கடலின் கடு.

5. உண்டு குணமிங் கொருவர்க் கெனினும்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே ;—வண்டுமலர்ச்
சேக்கை விரும்பும் செழும்பொழில்வாய் வேம்பன்றே
காக்கை விரும்பும் கனி.

6. எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ—பைந்தொடீஇ
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்று முதவுங் கனி.

7. பெரியவர்தம் நோய்போல் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவ ரென்க—தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்.

8. கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மா லியலுதவி தாஞ்செய்வர்—அம்மா
முளைக்கு மெயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதா மென்று.

9. நல்லோர் வரவால் நகைமுகங்கொண் டின்புறீஇ
அல்லோர் வரவா னழுங்குவார்—வல்லோர்
திருந்துந் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்துஞ் சுழல்கால் வர.

10. தக்கார்க்கே யீவர் தகார்க்களிப்பா ரில்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோர்—எக்காலும்
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய்?

—சிவப்பிரகாச சுவாமிகள்

## அருஞ்சொற்பொருள்

1. கவர்ந்து - வசப்படுத்தி. தடம் - பெரிய.

2. தீர்வு - நீங்குதல். தளர்ந்து - இரக்கப்பட்டு. வெம் குறை - கொடிய குறை. திங்கள் - சந்திரன். கறை இருள் - களங்கமாகிய இருள், (பிறர்க்கு+உறூஉம்=பிறர்க்குறூஉம்)

3. இருநீர் - பெரிய கடல். வியன் - பரந்த. அதிர் - ஒலிக்கின்ற. அழல் - வெம்மையான. கதிர் - கிரணங்களையுடைய சூரியன்.

4. மீக்கொள் - மேலாகக் கொள்ளும். கடு - விஷம். கவரார் - விரும்பி எடுக்கமாட்டார். பரு - பெரிய.

5. புகல்வது - சொல்வது. சேக்கை - படுக்கை. பொழில் வாய் - சோலையில்.

6. எந்தை - என் தந்தை. நல்கூர்ந்தான் - வறுமை அடைந்தான். இரப்பார் - யாசிப்பவர். பைந்தொடி - பசுமையான பொன்னாற் செய்யப்பட்ட வளையலை யணிந்த பெண்ணே. அரம்பை - வாழை. கனி - பழம்.

7. உள்ளம் - மனம். எரி - நெருப்பு. இழுது - நெய். தெரி இழாய் - ஆராய்ந்தெடுத்த அணிகளை அணிந்தவளே. மண்டு - மிகுதியாக உண்டான (மிகுந்த). பிணி - நோய். கலுழும் - அழும்.

8. கைம்மாறு - பதில் உதவி. உகவாமல் - விரும்பாமல். இயல் - செய்யமுடிந்த அளவு. எயிறு - பல்.

9. இன்புறீஇ-இன்புற்று. அல்லோர்-கீழ்மக்கள். அழுங்குவார் - வருந்துவார். தென்றல் - தெற்கிலிருந்து வரும் காற்று. தேமா - தித்திப்பான மாமரம். சுழல் கால் - சுழல் காற்று.

10. தக்கார் - நல்லவர். தகார்க்கு - தீயவர்களுக்கு. விழுமியோர் - சிறந்த அறிவுடையோர். முளி - காய்ந்த.

## 5. புத்திமானே பலவான்

1. குறுமுயல் சிங்கம் தன்னைக்
கொன்றதொன் றுண்டே தென்னில்
செறியுமோர் காட்டி லேயோர்
சிங்கமுண் டந்தக் காட்டில்
உறுவிலங்கு அனைத்தும் வேட்டை
ஆடியூன் மிகவும் தின்று
வெறிகொடு திரியும் நாளில்
விலங்கெலாம் ஒருங்கு கூடி,

2. " ஆணிளஞ் சிங்க மே, யுன்
அடவியில் விலங்கை யெல்லாம்
வீணிலே கொல்ல வேண்டா ;
விதத்தினில் தினமொன் ருக
ஊனுனக் களிப்போம் " என்ன,
உண்மையாக் கொண்ட சிங்கம்,
ஆணையும் இட்டொவ் வொன்ருய்
அருந்தியங் கிருக்கு நாளில்,

[முயல் சிங்கத்திற்கு உணவாக வேண்டிய நாள் வந்தது. அது சிங்கத்தை வெல்ல முடிவு செய்தது.]

3. கருதியச் சிங்கத் தின்தன்
கடும்பசி வேளை தப்பி
வருதலும் முயலை நோக்கி
மன்னன், " நம் பசிவே ளைக்குப்
பெருமத வேழ மேனும்
பிந்துவ தில்லை ; பிந்தி
வருவதென் ? உரை நீ, " என்று
மனந்தனிற் சினந்து கூற,

4. "ஐய, நின் பசிவே ளைக்கு
அடியனேன் வந்தேன் ; ஆங்கோர்
வெய்யசிங் கத்தைக் கண்டு
வெருவியங் கொளித்தி ருந்தேன் ;
பையவே சிங்கம் ஆங்கோர்
பருமுழை புகுந்த பின்னர்
துய்யஉன் பக்கல் வந்தேன்
சுவாமி" என் றிறைஞ்சி நிற்க,

5. சிங்கம், " நாம் அல்லால் வேறோர்
சிங்கம் நீ கண்டா யாகில்
அங்கதைக் காட்டு வா, " என்(று)
அழைத்தலும் அழைத்துப் போயோர்
பங்கமும் புனலும் சேர்ந்த
பாழ்ந்துர(வு) அதனைக் காட்ட
அங்கதை யெட்டிப் பார்க்க
அதன் நிழல் உருவம் தோன்ற,

6. தன் னுரு நிழலைத் தானே
சத்துரு வென்று பாய்ந்து
துன் னுபங் கத்த ழுந்தித்
துளங்கியே உயிர் இறந்த(து)
என்னலால் உபாயத் தாலே
யாவையும் வெல்ல லாமென்(று)
இன்னமோர் நண்டு கொக்கை
ஈர்ந்ததோர் கதையும் சொல்லும்.

—பஞ்ச தந்திரக் கதை

## அருஞ்சொற்பொருள்

1. குறு - சிறிய. செறியும் - மரம் அடர்ந்த. உறு - உற்ற, இருந்த. ஊன் - இறைச்சி.

2. ஊண் - உணவு. ஆணை - இனி வீணிலே கொல்வதில்லை என்ற சபதம்.

3. வேழம் - யானை.

4. வெய்ய - கொடிய. வெருவி - அஞ்சி. பைய - மெல்ல. பருமுழை - பெரிய குகை. துய்ய - பரிசுத்தமான.

5. பங்கம் - சேறு. புனல் - நீர், துரவு - பெரிய கிணறு.

6. சத்துரு - பகைவன். துளங்கி - நடுங்கி. ஈர்ந்த - துண்டித்த, கொன்ற.

# 6. தனிப்பாடல்கள்

## 1. வெண்ணிலா

1. மீன்கள்கோடி கோடிசூழ
வெண்ணிலாவே !—ஒரு
வெள்ளியோடம் போலவரும்
வெண்ணிலாவே !

2. வளர்ந்து வளர்ந்துவந்த
வெண்ணிலாவே !—பகல்
வாடிவாடிப் போவதேனோ !
வெண்ணிலாவே !

3. பந்தடிப்போம் உன்னையென்று
வெண்ணிலாவே !—நீயும்
பாரில்வர அஞ்சினையோ ?
வெண்ணிலாவே !

4. ஆழியும் நீ வரக்கண்டு
வெண்ணிலாவே !—குதித்(து)
ஆடுவதெக் காரணமோ ?
வெண்ணிலாவே !

5. ஆதாரம் ஒன்றில்லாமல்
வெண்ணிலாவே !—நீயும்
அந்தரத்தில் நிற்பதேனோ ?
வெண்ணிலாவே !

6. சுற்றித் திரிவதுமேன் ?
வெண்ணிலாவே !—உனக்குச்
சொந்தஇடம் ஒன்றிலையோ ?
வெண்ணிலாவே !

7. அண்டிவாராய் நீ யெனினும்,
வெண்ணிலாவே !—இன்னும்
அகன்றெங்கும் போய்விடாதே
வெண்ணிலாவே ?

8. பறக்கச் சிறகிருந்தால்,
வெண்ணிலாவே !—உன்றன்
பக்கம் வந்து சேருவனே
வெண்ணிலாவே !

9. பால்போல் நிலவெறிக்கும்
வெண்ணிலாவே !—என்றன்
பாங்கில்விளை யாடவாராய்
வெண்ணிலாவே !

10. பாங்கில்விளை யாடவந்தால்,
வெண்ணிலாவே !—நல்ல
பால்தருவேன் பழந்தருவேன்
வெண்ணிலாவே !

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

### அருஞ்சொற்பொருள்

மீன்கள் - நட்சத்திரங்கள். பாரில் - பூமியில். அஞ்சினை - பயந்தாய். ஆழி - கடல். ஆதாரம் - தாங்கும் இடம். அந்தரம் - பிடிப்பு இல்லாத இடம் (ஆகாயம்). அண்டிவாராய் - நெருங்கி வரமாட்டாய். அகன்று - நீங்கி. எறிக்கும் - காயும். பாங்கு - பக்கம். வாராய் - வருவாய்.

## 2. பாப்பாவும் பாரதியும்

1. காலை எழுந்தவுடன் படிப்பு ;—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு ;
மாலை முழுதும்விளை யாட்டு—என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா.

2. தமிழ்த்திரு நாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா ;
அமிழ்தில் இனியதடி பாப்பா—எங்கள்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

3. உயிர்க ளிடத்தில்அன்பு வேணும் ;—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் ;
வயிர முடையநெஞ்சு வேணும் ;—இது
வாழும் முறைமையடி பாப்பா.

—பாரதியார்

RS
3/1

# DESEEYA TAMIL VACHAGAM

**BOOK V FOR STANDARD V**

By

T. P. GOPALAKRISHNAN, B. A., L. T
*Headmaster, Board High School, Polur*

**Price Annas [illegible]0/-**

---

*Copies can be had at :*
54, SWAMI NAICKEN STREET
CHINTADRIPET, MADRAS-2